SWATHANTRA SANGU
Regd. No. M. 2811

சுதந்திரச்சங்கு

வாரப் பதிப்பு

18712

ராஞ்சி முடிவு

மரியாதை ரகங்கள்

ஊர்க் கவலை

வக்கில் குமாஸ்தா வைத்தி

எனது சிங்காரம்
—குகப்ரியை.

பவுன் செடி
—தி. ஜ. ர.

பதில் நகை
—ராஜாத்தி

"காலை விடு"

புத்தகம் 4. சித்திரை மீ 29உ (11-5-34) வெள்ளி இத 4

அதுவும் செய்யலாம்—

"தீனபந்து ஆண்டிரூசுக்கு, கவி திலகர் தாகூர் சில கடிதங்கள் எழுதியிருக்கிறாரே, ஆஹா! அவை எவ்வளவு அருமையாயிருக்கின்றன! அவற்றை என் தமிழில் மொழி பெயர்த்து ஒரு புத்தகமாய் வெளியிடக் கூடாது!" என்று கேட்டார் ஒரு நண்பர். அவர் திருநெல்வேலி ஹிந்து காலேஜில் இங்கிலீஷ் போதிப்பவர்; ஆனால், தமிழில் பெரும் பற்றுதல் உடையவர். சதா சர்வதாத் தமிழ் இலக்கியம் பற்றித் தான் அவர் பேச்சு. அவருடைய இரண்டொரு கட்டுரைகள் 'சங்கி'ல் வந்திருக்கின்றன. ஆனால், புனை பெயர் தாங்கியவை. நல்ல ரஸிகர். இவ்வளவும் சொல்லியாய் விட்டது; பெயரை மட்டில் ஒளிப்பானேன். ஸ்ரீமான் ஏ. சீனிவாசராகவன்தான் இந்த நண்பர்.

வாஸ்தவந்தான். தமிழ் இலக்கியத்துக்கு ஒரு புத்துயிர் வரவேண்டும் என்கிறோம். தமிழ் ஜீவசக்தி பெற்று ஜொலிக்கவேண்டுமானால், தமிழன் மனதும் அறிவும் விகாசமடையத் தக்க புது நூல்கள் தோன்றவேண்டும். சில்லறை விஷயங்களைப் பற்றிய சில்லறைக் கதைகளும் கட்டுரைகளும் பொழுது போக்க—நேரத்தைக் கொல்ல—உதவலாம். ஆனால், தமிழன் தலை நிமிர்ந்து நிற்கவேண்டும்; உலக சரித்திரத்தை அறியவேண்டும்; வாழ்க்கையின் திட்ப நுட்பங்களை உணரவேண்டும். அதற்கு உதவி புரியக்கூடிய எழுத்துக்கள் தோன்றினால், தமிழனின் நோக்கமும் இலட்சியமும் விரிவடையும். விரிந்த இலட்சியத்துடன் அவன் நிமிர்ந்து நிற்கும்பொழுது, இப்போது சூழ்ந்திருக்கும் அற்ப நிலைமைகள் இருக்குமோ? அவனது மனக் குமுறல் ஒன்று போதும்; எதிரேயுள்ள இன்னலெல்லாம் பொடிப்பொடியாய் உதிர்ந்து போகும். அப்பேர்ப்பட்ட எழுத்துக்கள் அசலாயிருந்தாலென்ன, மொழி பெயர்ப்பாயிருந்தாலென்ன? தமிழில் ஏன் தோன்றலாகாது?

தாகூரின் கடிதங்களை ஏன் மொழி பெயர்க்கலாகாது?

அயர்லாந்து சுதந்திரத்துக்குப் போராடி உயிரையும் துறந்த மகானுபாவன் டெர்ரன்ஸ் மாக்ஸ்வினியின் 'சுதந்திர சூத்திரங்'களை ஏன் தமிழில் வெளியிடலாகாது?

பல தேச சுதந்திரப் போர்ச் சரித்திரங்களைத் தமிழில் ஏன் பிரசுரிக்கலாகாது?

டால்ஸ்டாயைப் போல், ஷாவைப் போல், ஸிங்கிளேரைப்போல், ரொமேன் ரோலந்தைப்போல், தமிழில் நெஞ்சை அள்ளும் அசல் கதைகளும் மனதை விசாலப்படுத்தும் கட்டுரைகளும் எழுதாவிட்டாலும், அவர்கள் எழுதியவற்றைத் தழுவிய, அல்லது மொழிபெயர்த்த, நூல்களாவது ஏன் தமிழில் வரலாகாது?

இப்படி இன்னும் எத்தனை எத்தனையோ கேள்விகளைப் போடலாம். இந்த மாதிரி கேள்விகள் தயாரிக்கும் வேலையை என்னிடம் ஒப்படைத்தால், ஒரு மாதத்திற்குள் இலட்சம் கேள்விகள் வரை தயார் செய்துதரச் சித்தமாயிருக்கிறேன். நூறு இங்கிலீஷ் புத்தகக் கிரய ஜாப்தாக்கள் இருந்தால் போதும், புத்தகங்கள்கூட வேண்டியதில்லை. ஆங்கிலத்தில் அவ்வளவு பிரசித்தமான புத்தகங்கள் இருக்கின்றன.

ஆனால், இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பிரசுரகர்த்தர்கள்தான் பதில் சொல்லவேண்டியிருக்கிறது. அவர்கள் சில பதில் கேள்விகள் கேட்கிறார்கள்:—"அதுவும் செய்யலாம்; அதற்கு மேலும் செய்யலாம். போட்டால், இந்தப் புத்தகங்களை ஜனங்கள் வாங்குவார்களா?"

புதிய புதிய விஷயங்களை அறிய அவர்கள் தாகங் கொண்டிருப்பதாய்த் தெரியவில்லை. ஜனங்கள் சோர்ந்து, களைத்துக் கிடக்கிறார்கள். ஆனால், அதன் காரணத்தை யறிய, அவர்களுக்குப் பிடிக்கவில்லை. காரணத்தையறிந்தால், காரியம் செய்யவேண்டி வருமே. யார் செய்வது? தேசத்தில் ஒரு நிமிஷம் போவது ஒரு யுகம் போல் இருக்கிறது. தேசத்தில் மாத்திரமல்ல, ஒவ்வொரு வீட்டிலும் அப்படித்தான். நிலைமை அவ்வளவு நெருக்கடியாயிருக்கிறது. எப்படியாவது பொழுதைப் போக்கினால் போதும். அப்படிப்பட்ட மனோபாவம் ஏற்பட்டிருக்கிறது. பக்கம் பக்கமாகப் புத்தகமும் பத்திரிகையும் அச்சடித்து அனுப்புவதை விடச் சிப்பம் சிப்பமாக ரொட்டியும் பிஸ்கோத்தும் குறைந்த சந்தாவுக்கு வருஷம் பூராவும் அனுப்ப யாராவது தயாராயிருந்தால், ஏராளமான பேர் சந்தாச் சேரக் கூடும் போல் இருக்கிறது நிலைமை. இது நடக்காது. ஆகையால், சோர்விலே பிறந்த ஒரு கேலியும், நகைப்பும், அலட்சியமும் — பெரிய விஷயத்திலும் சரி சிறிய விஷயத்திலும் சரி—பிறந்திருக்கின்றன. இதற்கு யார் என்ன செய்வது?

"என்ன, ஐயா! சுயராஜ்யமா? தமிழ் அபிவிருத்தியா? கலையா? அதெல்லாம் ஒன்றும் நடக்காது" என்னும் ஏக்கம் மறுபடியும் வலுத்துவிட்டது. "இதெல்லாம் நன்றாய் நடக்கும்" என்று, வெளிக்கு விட்டுக்கொடுக்காமல் பேசுவோரை வேண்டுமானாலும் பாருங்கள். "கிட்ட வந்தால் கிள்ளுவேன்; தூரப் போனால் துப்புவேன்" என்ற கொள்கை இவர்கள் கொள்கை. "கலை வேண்டும்" என்பார்கள்; உண்மையான கலையை நேரடியாக இவர்கள் ஆதரிக்கமாட்டார்கள். இந்த நிலைமையில் என்ன செய்வது?

இந்த நிலைமை சாசுவதமல்ல என்ற நம்பிக்கையுடன், லாபமோ நஷ்டமோ, சுகமோ கஷ்டமோ, எல்லாவற்றிற்கும் துணிந்து, ஜனங்களின் மனோபாவத்தையே அடியோடு மாற்றலாம் என்ற தைரியத்துடன் சிலர் முயலத்தான் வேண்டும். அந்த முயற்சிகள் அங்கங்கே நடக்காமலும் இல்லை என்பதைக் கண்டு நாம் சந்தோஷிக்க வேண்டும் அல்லவா?

—தி. ஜ. ர.

சுதந்திரச்சங்கு

"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தாரணிக்கெல்லாமெடுத் தோதுவோமே"

போன் நே. 8088

ஆசிரியர்: சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

Vol. IV.] சித்திரை மீ 29உ வெள்ளிக்கிழமை (11—5—1934) [No. 24

ராஞ்சி முடிவு

நாம் ஜனநாயகத்திற்காகப் போராடுகிறோம்; சுதந்திரத்துக்காகப் போராடுகிறோம். ஜனநாயகம் என்றால், நமது சக்தி, நம்முடைய சட்டதிட்டங்கள் எல்லாம் நம்மிடையே பிறக்கவேண்டும், நமக்குச் சாதனமாயிருக்கவேண்டும் என்பதுதான் கருத்து. "எல்லாரும் இந்நாட்டு மன்னர்" என்று பாடினார் நமது கவி. அதற்கு ஆளுக்கு ஒரு சிம்மாசனமும் கைக்கு ஒரு செங்கோலும் என்று அர்த்தமல்ல. முப்பத்தைந்து கோடி செங்கோலும் சிம்மாசனங்களும் தேவை என்ற விளம்பாமல்ல "எல்லாரும் இந்நாட்டு மன்னர்" என்ற பாட்டு. சேர்ந்து செய்த முடிவுகளைக்கொண்டு ஐக்கிய வாழ்வை நடத்தவேண்டும். அதுதான் ஜனநாயகம். யாவரும் ஒன்றுபட்டுக் காரியம் செய்ய இதுதான் வழி; நல்ல பலன் காண இதுதான் முறை. ஜனநாயகத்துக்குப் பாடுபடும் நமது நடைமுறைகளும் ஜனநாயக தத்துவத்தைத் தழுவியவையாகவே யிருக்க வேண்டும் என்பதைச் சொல்லவா வேண்டும்?

காங்கிரஸ் தலைவர்களுக்குள் பலதிறப்பட்ட அபிப்பிராய முடையவர்களும் ராஞ்சியில் கூடினார்கள். முதிர்ந்த தேச பக்தர்களுள் ஒருவரான டாக்டர் அன்சாரி தலைமை வகித்தார். மகாத்மாஜீயின் ஆலோசனை உதவியையும் பெற்றார்கள். சில முடிவுகளைச் செய்தார்கள்.

1. சுயராஜ்யக் கட்சியைப் புதுப்பது;

2. அதற்கு அகில இந்தியக் காங்கிரஸின் அங்கீகாரத்தைப் பெறுவது;

3. சுயராஜ்யக் கட்சி, எப்பொழுதும் காங்கிரஸின் ஆணையை மீறாமல் நடந்து கொள்ளுவது;

4. காங்கிரஸுக்குள், சட்டசபைப் பிரவேச வேலையை நடத்தும் கட்சியாக, சுயராஜ்யக் கட்சி அலுவல் புரிவது.

இவைதான் ராஞ்சி முடிவுகளின் திரண்ட சாரம். நல்ல சமயம் பார்த்து வைசிராய் வில்லிங்டன் பிரபு ஒரு வேலை செய்தார். இந்தியச் சட்டசபையைக் கலைத்துவிடுவது என்று அவர் ஒரு முடிவைச் செய்தார். தேர்தல் நடத்தினால், "ஜனங்கள் எங்கள் கட்சியாய்த்தானிருப்பார்கள்; எங்களிடம் பக்தி செய்துகொண்டு, எங்கள் மனம் நோகாமல் நடக்கும் பெயர் வழிகளைத்தான் ஜனங்கள் தேர்ந்தெடுப்பார்கள். காங்கிஸ்காரருக்கு ஆதரவு கிடைக்காது' என்று அறை கூவுவதைப் போல, அந்த முடிவை வெளியிட்டார்.

இனிமேல், காங்கிரஸ்காரர் வாக்குவாதம் செய்து கொண்டிருக்க முடியாது. ஒரு முடிவைச் செய்தாகிவிட்டது. அதைப்பற்றி நியாய சாஸ்திரம் படித்துக் கொண்டிருப்பதில். பயனில்லை. "மாறுதல் வேண்டியவர், மாறுதல் வேண்டாதவர் என்ற வித்யாசமெல்லாம் காங்கிரஸ் வாதிகளுக்குள்ளே இனிப் பார்க்கக் கூடாது" என்று ராஜாஜியைப் போன்ற தலைவர்கள் சொல்லுகிறார்கள். செய்த முடிவுப்படி வெற்றிகரமாய்க் காரியம் நடத்துவதில்தான் இனிக் காங்கிரஸ் வாதிகள் யாவரும் முனையவேண்டும். 18, 19உகளில்கூட விருக்கும் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி ராஞ்சி முடிவுகளை ஏற்றுவிடும் என்பதில் சந்தேகமில்லை. காங்கிரஸ் ஒற்றுமையாய்ச் செயல் புரிய வேண்டிய சமயங்களில் இதுவு மொன்று.

காங்கிரஸ் வாதிகள் தடியடி பட்டார்கள்; அது தேசத்துக்காகத்தான். சிறை சென்றார்கள்; தேச பக்திதான் காரணம். பொருளையும் போகத்தையும் தியாகம் செய்தார்கள்; தேச சேவையில் தான். தடியடிபட்ட அதே காங்கிரஸ் வாதிகள், சிறை சென்ற அதே காங்கிரஸ் தேச பக்தர்கள் இன்று சட்டசபை செல்ல விரும்பினால், அதன் காரணமும் தேசபக்திதான் என்பதை ஜனங்கள் உணர்ந்து கொள்ளுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. நாற்காலிகளை அலங்கரித்து, பங்காவின் காற்றை வாங்குவது ஒன்றே ஆசையா யிருக்குமானால், தடியடிக்கு அவர்கள் மார்காட்டி யிருக்க மாட்டார்கள்; சிறையில் தவங் கிடந்திருக்க மாட்டார்கள். சுகமோ கஷ்டமோ எந்த வழியிலும் சேவை செய்யத் துணிந்த தேச பக்தர்களுக்கு ஜனங்கள் எப்போதும் பக்கத்துணையா யிருக்கவேண்டும், இருப்பார்கள்.

சட்டசபை நுழைவால் ஏராளமான பயன் உண்டாகிவிடப் போகிறதோ இல்லையோ, அதைப்பற்றி இப்போது நாம் கவலைப்பட்டுப் பயனில்லை. காங்கிரஸ்காரர்கள், நல்லதோ கெட்டதோ ஒரு தீர்மானத்துக்கு வந்து விட்டால், ஒற்றுமையாக அதனை நிறைவேற்ற வேண்டும். காங்கிரஸை நசுக்கி விட்டதாக இறுமாந்து கொண்டிருக்கும் சர்க்காரின் எண்ணமெல்லாம் அவலமாய்ப் போக வேண்டும்; சர்க்கார் பிரமித்துத் திகைக்க வேண்டும்—அப்படிப்பட்ட பலன்கள் விளைவிப்பதே இப்பொழுது எல்லாக் காங்கிரஸ்வாதிகளுக்கும் நோக்கமாயிருக்க வேண்டும்.

திரும்பவுமா?

சென்ற வாரம் தான் காந்தியடிகளைச் சில சனாதனிகள் குண்டாந் தடிகளோடு தாக்கிய வருத்தமான செய்தியை வெளியிட்டோம். ஆனால் தேச முழுவதும், அநேக சனாதன சபைகள் உட்பட, அச்செய்தியைக் கண்டித்திருக்கிறது. அப்படியிருக்க அதே சனாதனிகள் அதே குற்றத்தை அதே இடத்தில் திரும்பவும் செய்தது வெறுக்கத் தக்க காரியம். காந்தியடிகள் ஜாஸதிக்குச் சென்ற பொழுது அவருக்கு அடிவிழாமல் தடுத்த ஒரு தொண்டரைச் சில சனாதனிகள் லாத்தியால் தாக்கினார்களாம். சனாதன தர்மம் தடி தர்மத்தால்தான் காப்பாற்றப்பட வேண்டும் என்னும் மனோ பாவத்தை என்னென்பது?

பழைய பல்லவி

இம்மாதம் முடிவில் ஜெனிவாவில் ஆயுதப் பரிகரண மகாநாடு நடக்கப் போகிறது. பெரும்பாலும் இம்மகாநாட்டில் ஆயுதப் பரிகரணம் என்ற பேச்சுக்கூட மறைந்து போகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஐரோப்பிய தேசங்களில் முக்காலே மூன்று பாகங்கள் மகாயுத்தத்திற்குத் தயார் செய்துகொண்டு வருகின்றன. யாரோடு யுத்தம் என்று கேட்டுவிடாதீர்கள். அதுதான் ஒருவருக்கும் சரியாய்த் தெரியாது. எனினும் யுத்தம் வரப்போவதாக எல்லாத் தேசங்களும் நிச்சயம் செய்துவிட்டனவாம். இதற்கு முன்னாலாவது ஏதோ தற்காப்புக்காகத் யுத்த தளவாடங்கள் வைத்திருப்பதாகக் கூறினார்கள். இப்போது அந்தப் பேச்சுக்கூட மறைந்துவிட்டது. இந்த லட்சணத்தில் ஆயுதப் பரிகரண மகாநாடு கூடுகிறது. இது எவ்வாறு முடியுமோ பார்ப்போம். பெரும்பாலும் பழைய பல்லவியாய்த்தான் இருக்கும்.

குருவுக்கு மிஞ்சிய சிஷ்யன்

கீழ்நாட்டுக் கிரேட் பிரிட்டன் என்று பெயர் வாங்கிய ஜப்பான் தனது குலகுருவாகிய இங்கிலாந்தையே இப்போது என்ன சங்கதி என்று கேட்க ஆரம்பித்துவிட்டது. வியாபார அரசியாகிய பிரிட்டனை அவளது சொந்த வீட்டிலேயே தோற்கடிக்கத் திவஜங் கட்டி நிற்கிறது. பார்லிமெண்ட் அங்கத்தினரான மேஜர் ப்ரோக்டர் சொல்லுகிறார். அவரது கூற்றுப்படி:

"1928-ல் 5,000,000 எலக்டிரிக் விளக்குகளை இங்கிலாந்துக் கனுப்பிக் கொண்டிருந்த ஜப்பான் இப்போதோ 57,000,000 எலக்டிரிக் 'பல்ப்'களை ஏற்றுமதி செய்கிறது.

விலைகளிலோ போட்டி போட முடியாத குறைந்த விகிதத்தில் ஜப்பான் சாமான்கள் இங்கிலாந்தில் விற்கப்படுகின்றன. உதாரணமாக:—

ஒரு சைகிள் விலை ஏறக்குறைய 8 ரூபா.

ஒரு டஜன் பென்சில்கள் 10 பைசா.

ஸ்க்ரூ பென்சில் ஒன்று 10 பைசா.

ஷர்ட்டு ஒன்று 12 அணா.

தவிர இப்போது ஒரு 'பேபி' மோட்டார் ஜப்பானில் தயாரிக்கப்படுகிறதாம். அதன் விலை சுமார் 650 ரூ."

ஊருக்கு வேறு நியாயம்

ஜர்மனி யுத்தக் கடனைக் கொடுக்க மறுப்பது இங்கிலாந்துக்கும், பிரான்ஸுக்கும் தப்பிதமாய்த் தெரிகிறது. ஆனால் தாங்கள் அமெரிக்காவுக்குக் கொடுக்கவேண்டிய கடனை ரத்துச் செய்யவேண்டும் என்பது நியாயம் என்றே இரு நாடுகளும் நினைக்கின்றன. 'நான்தான் ஏதோ கெட்டுப் போய்விட்டேன். நீ மட்டும் நல்ல பிள்ளையாயிரு' என்னும் கிழ வேதாந்தம் இப்போது செல்லுமா?

எது எப்படிப் போனால் நமக்கென்ன? எவன் கடனை எவன் கொடுத்தாலென்ன, கொடுக்கா விட்டாலென்ன? நம்முடைய தலைவிதி நம் கடனை நாம் கொடுத்துத்தான் தீரவேண்டியிருக்கிறது. நமது நாடு 'மைனர்' நாடு தானே!

"கோண்டா மூவாயிரம்"

நெருப்பு என்றால் வாய் வெந்து போகுமா? "ஆமாம், வெந்துதான் போகும்" என்று சொல்பவனுக்கு யார் என்ன தாது புஷ்டி லேகியம் கொடுத்து முடியும்? சென்னைச் சதி வழக்கு சம்பந்தமாக, சென்னை ஆங்கிலத் தினசரிகளில் தேசீய நோக்கில் தலை சிறந்த பத்திரிகையான 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஓர் தலையங்கம் எழுதிற்று. அதில் என்னவோ இருக்கிறதாம். சர்க்காருக்கு அது தலை வேதனையை உண்டாக்கிவிட்டது போலிருக்கிறது. இப்படியெல்லாம் வரும் தலைவேதனை என்ன 'அமிருதாஞ்சனம்' வாங்கிப் போட்டுத் தேய்த்தாலும் தீராது. அது தலை நோவல்ல; மன வேதனை. என்றாலும், "கொண்டா மூவாயிரம் ஜாமீன்" என்று நமது சகோதரப் பத்திரிகையைச் சர்க்கார் கேட்டுவிட்டது. "இந்தியன் எக்ஸ்பிரஸ்" எழுதியதில் அப்படி என்ன இருக்கிறதோ, நமக்குத் தெரியவில்லை; நாம் அதைப் பற்றித் தொல்லைப் படவுமில்லை. தேசத்தில் சட்ட மறுப்பு நின்று விட்டது. சர்க்கார் 'அப்பாடா!' என்று மூச்சு விட்டுக் கொண்டிருக்கிறது. சமரச மனோ பாவத்துடன் சர்க்கார் உழைக்க முயற்சித்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்? அப்படியானால், இந்த மாதிரி யெல்லாம் தங்கள் அதிகார தர்பாரை நடத்தாமல், பதவிசாயிருப்பதல்லவா புத்திசாலித்தனம். அதனால் ஒன்றும் குடி முழுகியும் போய்விடாது என்பதுதான் நமது அபிப்பிராயம்.

'தீப்பெட்டி வரி' மெஷின்

தீப்பெட்டிகளுக்கு வரி வசூலிப்பதில் மிகுந்த ஜாக்கிரதையாக ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருக்கின்றனவாம். இதற்காக, நாசிக் சர்க்கார் அச்சுக்கூடத் தலைவர் அவசர அவசரமாக ஓர் புதிய மெஷின் வாங்க லண்டனுக்குப் போகிறாராம். இது லேபிள் தயாரிக்கும் மெஷின். தீப்பெட்டிகளின் மேல் ஒட்டுவதற்கு வருடத்திற்கு 100 கோடி லேபிள் தேவையாயிருக்குமாம். அதற்கு இந்த அருமையான மெஷின் வந்தே தீர வேண்டுமாம்.

இந்தத் தீப்பெட்டி வரி லேபிள் மெஷின் என்ன விலையோ? இதைக் கொண்டு வந்து சேர்க்க என்ன செலவு ஆகப் போகிறதோ? ஏற்கனவே தீப்பெட்டி வரியால் கிடைக்கப் போகும்

பணத்தை 50 லட்ச ரூபாய் அதிகமாகக் கணக்கிட்டிருக்கிறார்களாம் சர்க்காரிலுள்ள சில பிரகஸ்பதிகள். இதையெல்லாம் பார்க்கும்போது தீப்பெட்டி வரிச் சங்கதி 'சுண்டைக்காய் கால் பணம் சுமை கூலி முக்கால் பணம்' சமாசாரமாக முடியாதிருக்குமா என்ற சந்தேகந்தான் உண்டாகிறது.

ராஞ்சியில் எழுந்த அலை

ராஞ்சியில் எழுந்த அலை, வெகு வேகமாக சீமையைப் போய்த் தாக்கிற்று; புது டெல்லி, பம்பாய், வங்காளம், சிம்லா முதலிய இடங்களையும் உடனுக்குடனே தாக்கி விட்டது. ஆனால், அதிகக் குளிர்ந்த பிரதேசத்தில், அலை சற்று மெதுவாகத்தானே பிரவேசிக்கும். பனிக்கட்டி மீது, அலை பரவுவ துண்டா? ராஞ்சியில் கிளம்பிய ராஜீய அலை உல்லாசமாய், அன்ன நடை வேகத்தில், இப்பொழுதுதான் உதகமண்டலத்தைப் போய்த் தாக்கிற்றும். சுயராஜ்யக் கட்சித் தீர்மானங்களைப் பற்றி, உதகமண்டலத்தில் சிறிது பேச்சுவார்த்தை சமீபத்தில்தான் ஆரம்பித்ததாம். "சுயராஜ்யக் கட்சியாவது, காங்கிரஸாவது! சர்க்காரிடம் குப்பல் குப்பலாய்த் தடிகள் இருக்கும்போது இதெல்லாம் எங்கே நடக்கப் போகிறது" என்று நினைத்திருந்தார்களோ என்னவோ, உதகமண்டலத்தில் குளிர்ந்திருந்த ராஜீயவாதிகள். "காரியம் மிஞ்சிவிடும் போலிருக்கிறதே" என்று இப்பொழுது எழுந்திருக்கின்றன ஜஸ்டிஸ் கட்சியும் தேசீயக் கட்சியும். இந்த இரண்டு கட்சிகளும் மிதவாதிகளுடன் சேர்ந்துகொண்டு சுயராஜ்யக் கட்சியை மடக்கிவிடலாமா என்று கூட யோசனைகள் கிளம்பினவாம். ஆனால், "சென்னைச் சட்டசபையைப் பற்றித்தான் இப்பொழுது கவலையில்லையே. ஆகையால், பிறகு யோசித்துக் கொள்ளலாமே" என்ற இன்னொரு எண்ணமும் இவர்களிடையில் தோன்றியிருக்கிறதாம். எனவே, பழயபடி நிம்மதியாய் உறங்கலாம். அதென்ன, சட்டசபை நாற்காலிகள், சில மனிதர்களுக்கே சாசுவத அனுபோக பாத்தியமுடைய தளவாடங்கள் தானே. அது மாறலாமா? மாற இவர்களாக முயற்சிதான் செய்யலாமா? முயன்றால், இவர்களுக்கு மறுபடி அவை கிடைப்பது சந்தேக மல்லவா?

"காப்பி ரைட்"

காப்பி ரைட்! ஆனால், இந்தக் குறிப்பு 'காப்பி ரைட்' அல்ல; யார் வேண்டுமானாலும் நகல் செய்யலாம். நமக்கு ஆட்சேபனையில்லை. சட்ட தத்துவங்களில் மனிதனது மூளை அபூர்வமாகக் கண்டு பிடித்த சங்கதிகளில், இந்தக் 'காப்பி ரைட்'—பிறர் நகல் செய்யக் கூடாத உரிமை—ஒன்றாகும். நீர், காற்று இதெல்லாம் இல்லையா, கடவுள் படைத்த படைப்பு. இவற்றை எப்படி ஒருவன் தனி உரிமை கொண்டாட முடியும்? இந்த மாதிரியே மனிதன் முயற்சியால் விளைந்த அநேகம் சாமான்களையும் கூடப் பொது உடைமையாகச் செய்துவிட வேண்டுமென்கிறார்கள் அதிதீவிர வாதிகள்.

ஸ்தூல சாமான்கள் கிடக்கட்டும்; சூட்சுமமான கருத்துக்களையே தனி உரிமை கொண்டாட வேண்டுமென்பது 'காப்பி ரைட்'. என்னவோ, டால்ஸ்டாய் போன்ற சில மகான்கள் தாங்கள் ஜீவிய வந்தரா யிருக்கும் போதே, தங்கள் வியாசங்களுக்கு இந்த 'அச்சுரிமை ஆசிரியருடையது' என்ற சங்கதி வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். எல்லாரும் அப்படி விட்டுவிட முடியாது என்பது வாஸ்தவந்தான். ஆனால், இந்தக் 'காப்பி ரைட்' எப்படி இப்பொழுது எடுத்ததிலெல்லாம் நுழைகிற தென்பதைப் பார்க்க விநோதமாயிருக்கிறது.

இரண்டு கால், இரண்டு கை வகையறாக்களோடு ஒரு குழந்தையைப் பெற்ற ஒருவன் "இது பேடன்ட். யாரும் இனிமேல் இந்த மாதிரி குழந்தை உற்பத்தி செய்யக்கூடாது" என்று நகல் உரிமை பதிவு செய்துகொண்டால் எப்படியிருக்கும்? இந்த மாதிரி நிலைமைகூட வந்துவிடும் போலிருக்கிறது.

நமது மாகாணத்தில் நடக்கும் பிரபல ஆங்கிலத் தினசரி ஒன்று, லண்டன் பிரபலப் பத்திரிகை ஒன்றிடம், அநேகம் கட்டுரைகளையும் படங்களையும் நகல் அடித்துக் கொண்டிருக்கிறது. ஆனால், அவர்களுடன் ஏதோ ஒப்பந்தம் செய்துகொண்டுதான் இருக்கும் என்பதில் ஆட்சேபனை யில்லை. ஆகையால், "இந்தியாவில் தங்களுக்குக் காப்பிரைட்" என்று நமது பிரஸ்தாபப் பத்திரிகை சொல்லுகிறது. ஆனால், சமீபத்தில் இரண்டு மூன்று கட்டுரைகளை நமது பிரஸ்தாப தினசரி நகல் செய்து 'காப்பிரைட்' போடப்போவது தெரியாமலே, லண்டன் பத்திரிகையிலிருந்து வேறு சில பத்திரிகைகள் நேரே நகல் அடித்து விட்டனபோல் தோன்றுகிறது.

இந்த மாதிரி சங்கடங்களெல்லாம் நேருவதைத் தடுப்பதற்கு என்ன வழி? பத்திரிகைகள் ஒன்றுக்கொன்றிலுள்ள சமாசாரங்களை உபயோகப் படுத்திக் கொள்ளுவதைக்கூட இப்படித் தடை செய்யமுயற்சிக்கும் 'காப்பிரைட்' கொண்டாடாதிருப்பதுதான் சரியான வழியென்று நமக்குத் தோன்றுகிறது. லண்டன் பத்திரிகையிலுள்ள விஷயத்துக்கு, அதுவே நகல் உரிமை கொண்டாடா திருக்கும்போது, நமது நாட்டுப் பத்திரிகை எதற்காகக் கொண்டாட வேண்டுமோ? அதுதான் நமக்குத் தெரியவில்லை; அதுதான் இந்த விபரீதத்துக்கும் காரணம்.

ஒரு கேள்விக்குறியால்

சென்னையில் சில சமயம் டெலிபோன்' கருவிகளுக்குள் எறும்புகள் புகுந்துவிடுவது வழக்கம். அதன்மேல் என்ன நடக்கும் தெரியுமா? 'ஹலோ!' 'ஹல்லோ!'—இந்த மாதிரி நாம் கத்திக் கொண்டே யிருக்கவேண்டியதுதான். பதிலே வராது. 'டெலிபோன்' ரிப்பேர். ஒரு எலி மின்சாரக் கருவிக்குள் புகுந்து மின்சார சப்ளையையே நிறுத்தி, கல்கத்தா நகரத்தைச் சில நிமிஷ நேரம் இருளில் முழு கடித்து விட்டதென்று ஒரு சமயம் ஒரு செய்தி படித்ததாக ஞாபகம். எலியின் கைங்கரியம் இப்படி.

எறும்பு, எலிகள் உயிருள்ள ஜந்துக்கள். வெறுங் கேள்விக் குறி? இந்த மாதிரி குறி — இது ஜெர்மனியில் இரண்டு பத்திரிகைகளில், அச்சுக் கோப்பவரின் அஜாக்கிரதையால் புகுந்து விட்டது. அதனால், அந்த இரண்டு பத்திரிகைகளையுமே நிறுத்தும்படி நேரிட்டு விட்டது. கேள்விக்குறி தவறி விழுந்தது ஹிட்லர் சர்க்காரின் வரவு செலவுத் திட்டத்தில். இதனால் என்ன குடி முழுகிப்போகப்போகிறது? இந்த அஜாக்ரதைக்காகப் பத்திரிகையையே நிறுத்திவிட்டு, மறுபடி சர்க்கார் அனுமதி பெற்று நடத்த நேர்ந்ததாம். ஹிட்லர் தர்பார் எப்படி யிருக்கிறது!

மூடத்தனம் !

நாகரிகத்தில் மனிதன் ரொம்ப முன்னேறி விட்டதாகச் சொல்லுகிறோம். அறிவும் அபாரமாய்க் கொண்டுதான் வருகிறது. ஆனால், குரங்கிலிருந்து அடுத்தாற்போல் வந்ததாகச் சொல்லுகிறார்களே அந்த மனிதனைச் சிபார்சு செய்து சொர்க்க லோகத்திலிருந்து—நிச்சயம் அவன் சொர்க்கத்தில்தான் இருப்பான்—நமது பூலோகத்துக்குக் கொஞ்சம் அழைத்து வந்து காட்ட வேண்டும் என்றுதான் தோன்றுகிறது. காட்டினால் "ஐயோ! நானிருந்த இந்த உலகம் இப்படியா போக வேண்டும்" என்று வருந்துவான். அப்படிப்பட்ட சில காரியங்கள் நடக்கின்றன. பாருங்கள். ரியோ டி ஜெனிரா என்ற இடத்தில் 2 கோடியே 70 லட்சம் சாக்குக் காப்பிக் கொட்டையைத் தீயிட்டு எரித்ததாக ஒரு செய்தி சொல்லுகிறது. தவறுதலாகத் தீப்பிடித்து எரிந்து போய்விடவில்லை; சர்க்கார் வேண்டுமென்றே எரித்துவிட்டது. ஏன்? அலங்கோல உற்பத்திதான் இதன் காரணம்? கண்ட கண்ட வஸ்துவைக் கண்டபடி விளைவிப்பது, பிறகு விலை விழுந்ததும் இந்த மாதிரி நாசம் செய்வது—இதைத்தான் திரும்பத் திரும்பப் பொது உடைமைக்காரர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். முதலாளிகள் லாபமே கண்ணாயிருக்கிறார்கள். அதனால் உற்பத்தியில் ஒரு அராஜகம் ஏற்பட்டு விடுகிறது. அதன் பலன் இது. திட்டம் போட்டு உற்பத்தி செய்யவேண்டும்; உற்பத்தியாகும் பொருள் நியாயமான முறையில் எல்லாருக்கும் வழங்கும்படி ஏற்பாடு வேண்டும். இல்லாவிட்டால், உலகம் இப்படி நாசமாக வேண்டியதுதான். இதை மூடத்தனம் என்று சொல்லாமல் என்ன செய்வது?

இந்தியாவில் சூரியோதயம்

இத்தலைப்பைக் கொண்டதோர் புதிய புஸ்தகம் இந்தியாவைப் பற்றி எழுதப் பட்டுள்ளது. அதன் ஆசிரியர் மிஸ் ஷிஷிலி பர்மர் என்னும் பெண்மணி. அதிலே சில முடிவு உள்ளன. அவற்றுள் சில:

1. இந்தியா விரோதப் பான்மையோடு ஆங்கில சாம்ராஜ்யத்தை விட்டு விலகுமானால் உலகத்தின் பலம் பொருந்திய அரசாங்கங்களில் மூன்றாவது தரத்தில் தான் இங்கிலாந்து நிற்க முடியும்.

2. இப்போதும் இங்கிலாந்துக்கும், இந்தியாவுக்கும் இடையே சமாதானமான நேசத்தை உண்டாக்க முடியும்.

3. அவ்வாறு செய்வதற்கு முதல் முதலாக இந்தியாவில் இப்போதிருக்கும் வெள்ளை உத்தியோகஸ்தர்களை வெளியே அனுப்பிவிட வேண்டும். மிகச் சிறந்த குணசீலர்களான வெள்ளையர்களுக்கு, இப்போதைப் போலல்லாமல் இந்து தேச சரித்திரமும், இந்திய இலக்கியங்களும் போதித்து இந்தியாவுக்கு அனுப்ப வேண்டும். புதிதாக இத்தேசத்துக்கு வரும் வெள்ளையர்கள் இந்தியர்களுடன் நேசப் பான்மையுடனும், சரளமாகவும், தாராளமாகவும் பழக வேண்டும்.

4. ஜாதி அகங்காரம், மதுபான வெறி முதலியவை உடைய வெள்ளையர்களை இந்திய இராணுவத்தினின்றும் நீக்கிவிட வேண்டும்.

5. இவைகள் எல்லாம் சாத்தியமாகவேண்டுமென்றால், முதல் முதல் இந்தியாவிலுள்ள வெள்ளைப் பெண்களில் பத்துக்கு எட்டுப் பேராக இங்கிலாந்துக்கு அனுப்பிவிட வேண்டும்.

வெறுமே வெள்ளைப் பெண்களை வெளியே அனுப்புவதிலும், உத்யோகஸ்தர்கள் மாறுவதிலும் மட்டும் இந்தியர்களுடைய மனத்தைத் திருப்திப் படுத்தாது. இந்தியர்களின் தற்போதைய தேவை பொருளும், அதைக் காப்பாற்ற இராணுவமும். இவ்விரண்டும் ஸ்வராஜ்ய மில்லாமல் கிடைக்குமா?

'கிலி'தானா, புலியுமுண்டோ?

சீயம் அரிசியும் இந்தோ-சீனா அரிசியும் மூட்டை மூட்டையாய் வந்து குவிந்ததென்று கேள்விப்பட்டோம். அதனால், ஏற்கனவே தத்தளித்துக் கொண்டிருக்கும் உள்நாட்டு நெல்லின் விலை மேலும் விழ ஆரம்பித்தது. சீயம் நாட்டு அரிசி வருகை வருஷத்துக்கு வருஷம் அதிகரித்துக் கொண்டே வருகிறது என்பதற்குக் கணக்கும் காட்டப்பட்டது. இதனால், நாட்டில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது இந்திய சர்க்கார், சீயம் நாட்டுப் பிரஞ்சுச் சர்க்காருடன் இது சம்பந்தமாகப் பேச்சு வார்த்தையும் ஆரம்பித்தது.

இப்பொழுது பிரஞ்சுச் சர்க்கார் சொல்லுகிறதாம்: "எங்கள் அரிசி ஒன்றும் அவ்வளவு ஏராளமாக உங்கள் நாட்டுக்கு வந்து விடவில்லை. ஆகையால், நாங்கள் ஒன்றும் ப[illegible] நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளத் தயாராயில்லை" இது அந்தச் சர்க்கார் சொன்ன பதிலாம்.

இதன் மேல் நமது சர்க்கார் என்ன செய்யவேண்டும்? சட்டென்று ஒரு முடிவுக்கு வரவேண்டாமா? கடற் சுங்க வரிச் சட்டம் என்ற வில்லைக் கையிலெடுத்துக் கொஞ்சம் ரீங்காரம் செய்தால், பிரஞ்சுச் சர்க்கார் இப்படி மீனமேஷம் பார்க்காது; உடனே வழிக்கு வந்துவிடும். ஆனால், நமது சர்க்காருக்கு இப்பொழுது புதிய அபிப்பிராயம் வந்திருக்கிறதாம். பிரஞ்சுச் சர்க்கார் சொல்லுவது சரிதான் என்று நினைக்கிறதாம். சீயம் அரிசி ஒன்றும் அப்படி வந்து குவிந்துவிடவில்லையாம். ஏதோ சீயம் அரிசி சென்னைக்கு வந்திருக்கிறது என்ற உடனேயே, ஒரு 'கிலி' ஏற்பட்டு, அனாவசியமாக நமது அரிசி விலை விழுந்துவிடுகிறதாம்.

சர்க்கார் நினைக்கிறபடி இவ்விஷயம் வெறும் 'கிலி'தானா? அப்படியானால், எதற்காக நமது சர்க்கார் சீயம் சர்க்காருடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும்? அவர்கள் பதில் வந்த பிறகே, நமது நாட்டு நிலைமை இவர்களுக்கு விளங்கிற்றென்றால், அது கேலிக்குத்தான் இடமாகும். 'கிலி பாதி, புலி பாதி' என்பார்கள். புலியே இல்லை என்று நினைக்கிறதாம் நமது சர்க்கார். நமக்கென்னவோ இது கேலிக் கூத்தாகவே தோன்றுகிறது. சர்க்கார் முடிவு இன்னும் உத்தியோக முறையில் வெளிவர வில்லை. ஆர அமரச் சிந்தித்து, திறமையோடு கூடிய, பலன் தரத்தக்க முடிவைச் செய்வதுதான் புத்திசாலித்தனம் என்று மட்டில் சர்க்காருக்குக் கூற விரும்புகிறோம்.

வ. வே. சு. அய்யர் எழுதிய

குருகோவிந்த சிங்கன்

தபாற்கூலியுள்பட 5 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

மரியாதை ரகங்கள்

(ந. பிச்சமூர்த்தி)

வாசலில் வண்டி நிற்கும் சப்தம் கேட்கிறது. கூடத்திலிருந்து எழுந்திருந்துபோய்ப் பார்க்கிறீர்கள். உங்கள் மாமனாரோ, மருமகனோ அல்லது யாரோ உறவினர் வருகிறார். "சௌக்யம் தானே? எப்பொ வராப்பிலியோ?" என்று உபசார வார்த்தை சொல்லுகிறீர்கள். அவர்களும் மரியாதையாய் "இப்பத் தான்" என்கிறார்கள். நானாகமட்டு மிருந்தால் "உங்களுக்கென்ன கண் அவிந்து போய்விட்டதா? கொட்டாப் புளியைப் போல் உங்களுக் கெதிரில் தானே வண்டியை விட்டு இறங்குகிறேன்" என்று ஒருபோடு போடலாமா என்று உத்தேசிப்பேன். இருந்தாலும் 'ஊரோடு ஒக்க ஓடு' என்று அதே பதிலை நானும் அழுது தொலைத்து விடுகிறதுதான்.

இதற் கெல்லாம் என்ன பெயர் தெரியுமா? மரியாதை! சம்பிரதாயப்படி 'சாம்பிராணி'க் கேள்வி கேட்டாலும் பதில் சொல்லாவிட்டால் நாம் பெரிய அபசாரம் செய்தவர்களாகி விடுகிறோம். 'நாகப்பட்டணம்' 'அழுத்தல்,' 'கிறுக்கு' முதலிய பட்டங்கள் இனமாக நமக்கு அளிக்கப்படுகின்றன. அந்த வம்பெல்லாம் நமக்கேன் என்றுதான் நாமும் சாம்பிராணி கோஷ்டியில் சேர்ந்து விடுகிறோம். இல்லையா?

அல்லது, வாசலில் வண்டி நின்றதும் நீங்கள் போய் எதிர் கொண்டழைக்கவில்லையென்று வைத்துக் கொள்வோம். கையில் 'ஸூட் கேஸ்' எடுத்துக்கொண்டு உறவினர் இரண்டு வாசற்படிகள் தாண்டித் தாழ்வாரத்தில் நுழைகிறார். "வரணும், வரணும்!" என்று குதிக்கிறீர்கள். இவ்வளவு சிரமப்பட்டு, பணத்தைச் செலவழித்து, அழுத்தலாய் ஸூட் கேஸுடன் உங்கள் வீட்டுக் கூடம் வரையில் வந்த ஆசாமியா அதற்கு மேல் உள்ளே வந்து மூன்று நாளாவது தங்கி, வீட்டைக் கொட்டை பரப்பி விட்டுப் போகாமல் அப்படியே திரும்பிப்போய் விடப் போகிறார், என்று நான் கேட்கிறேன். இப்படிக் குதிக்கிறீர்களே, அர்த்தமென்ன? ஆனால் உங்கள் பேரிலும் பிசகில்லை. அப்படிக் கேட்காவிட்டால் 'துர்வாஸர்' பிரத்யக்ஷமாகலாம்! நியாயந்தானே?

இது லௌகிக விஷயம் என்று தோன்றினால் வைதீக விஷயத்தை எடுத்துக் கொள்ளுங்களேன். புரட்டாசிச் சனிக்கிழமை வீட்டில் நான்கு பிராமணர்கள் சாப்பிடுகிறார்கள். உங்கள் வீட்டு அதிகப் பிரசங்கி பிரும்மசாரிகள் இரண்டு மூன்று பேரும் கூடச் சாப்பிடுகிறார்கள். பெரியவர்கள் ரஸம் சாத கட்டத்திற்கே வந்த பாடில்லை. சில்லுண்டிகள் மோரும் சாதமும் சாப்பிட்டு முடித்து மூன்று வருஷமாகி விட்டது. இடுப்பும் கடுப்பெடுத்துப் போகிறது. எழுந்திருந்து போய்த் தொலைகிறதுதானே என்றால் பையன்கள் யோக்யதை தெரிந்துதான் பக்கத்தில் பஞ்ச பாத்திரம் வைக்கவில்லை. உத்தரா போசனத்திற்காக வருணஜபம் தெரிந்தால் செய்யலாம். இப்படி மைதாமாப் பசை போல் கை, காய்ந்து போகும் வரையில் ஈக்களை ஓட்டிக் கொண்டும், ஹி, ஹி என்று வானர சேஷ்டைகள் செய்து கொண்டும் பையன்கள் தவம் செய்கிறார்களே— இதுவும் ஒரு மரியாதை தான்! எவனாவது ஒருவன் துணிவாய்ப் பந்தி நடுவில் எழுந்திருந்து போனால் யாராவது சாஸ்திரிகள் 'சுவா' (நாய்) மாதிரி என்பார். அது அவர் செய்யும் மரியாதை!

இப்படிக் கெல்லாம் இல்லாமல் இங்கிதம் தெரிந்த பெரியவர்கள் பந்தியிலிருந்தால் பையன்களுடைய தர்ம சங்கடத்தைப் பார்த்து மரியாதையாய்த் தங்கள் இலைக்கும் பையன்கள் இலைக்கும் நடுவில் கொஞ்சம் ஜலம் விட்டு விடுவார்கள். அதற்கு "அட சனியன்களா! நாங்கள் போட் மெயில் வேகத்தில் சாப்பிட மாட்டோம். நீங்கள் வேண்டுமென்றால் எழுந்திருந்து போய்த் தொலையுங்கள்; எங்கள் மென்னியைப் பிடிக்க வேண்டாம்" என்று அர்த்தம். இதுவும் ஒரு மரியாதை!....

உறவினர் ஒருவர் காலாவதியாகி விட்டார். பந்துக்கள் துக்கம் விசாரிக்கப் போகவேண்டுமல்லவா? "வெகு அவசியம்! செத்தவரைப் பிழைப்பு மூட்டி விடுவாயாக்கும்!" என்று நீங்கள் வேதாந்தமாய்ப் பேசலாம். அல்லது "இந்தியனுக்கு வயது இருபத்தி இரண்டு தானே சர்க்காரே கணக்கெடுத் திருக்கிறபடி. அதற்கு மூன்று மடங்கு வருஷமும் மண் மீது வாழ்ந்து பழுத்து உதிர்ந்து போனவன் பின்னும் எதற்காகப் பூபாரமாக வேண்டும்' என்று நீங்கள் தர்க்கம் செய்யலாம்.

ஸ்வாமி! நானென்ன செய்ய அதற்கு? எழவெடுப்பதென்பது ஒரு மரியாதை எனவே அந்த எழவெடுத்த வீட்டிற்குப் போகிறீர்கள். துயரத்தால் உம்மென்று முகத்தையும் பக்கத்தில் ஈர மலையாளத் துண்டுகளையும் வைத்துக் கொண்டு பந்துக்கள் உட்கார்ந்திருந்தனர். நீங்களும் போய் உட்காருகிறீர்கள். துக்கம் விசாரிக்கவோ உங்களுக்குப் பிடிக்காது. விசாரிக்கவும் தெரியாது. ஒரு க்ஷணம் அசடு வழியும் நிசப்தம். பிறகு 'திடும்பரோசா' என்று தங்கள் குரல்! "வந்து—ஹும்—வந்து — ஹாம்— இப்பொத்தான் கேள்விப் பட்டேள். வாஸ்தவமாச் சொல்லப் படாது. குண்டோதரன் மாதிரி நேத்துக் காலம்பர ஒரு சிமிட்டா பொடி என் கிட்டெ வாங்கிப் போடவாவது........அப்புறம் இன்னிக்கு ஸஞ்சயனம்னு பாருங்கோ ....வந்து........எனக்கு வாஸ்தவமா என்னமோ போலெ இருக்கு"

எதிர்த் தரப்பில் பதிலில்லை.

"ஆனுக்கே நாமெல்லாம் சாஸ்வதமன்னு சொல்லவரல்லே. ஜகத்து மித்யைங்கறது நன்னாத் தெரியரதோ இல்லையோ? அதென்ன ஸ்லோகம்? போகட்டும், நெஞ்சுலெ இருக்கு— வாயிலே வரல்லெ. இதைத் தான் பெரியவாள் ஈசுவரலீலை இங்கறா. இருந்தாலும் கடைசிப் பிள்ளைக்கு வேலை கிடைச்சு மொதல் மாஸச் சம்பளம்

வாங்கிப் பார்த்தூட்டுப் போயிருக்கலாம், திருப்தியா யிருக்கும். என்ன பண்றது? நமக்குக் குடுத்து வச்சது அவ்வளவுதான்!" என்று நீங்கள் பின்னும் அடுக்குகிறீர்கள்.

எதிர்த் தரப்பில் செத்தவருடைய குணாதிசயங்களைப்பற்றி, அவருடைய செந்தாமரைக் கண்ணைப்பற்றி, செந்தாமரைக் நெஞ்சைப் பற்றி, செந்தாமரைத் தலை, ஹிருதயத்தைப் பற்றி பிரமாதமான வர்ணனை! ஸர்வம் செந்தாமரை மயம்! தங்களை அறியாமலே மூக்கை சிந்த எத்தனப் படுகிறீர்கள். அதற்குக் காரணம் நீங்கள் பொடி போட்டு நாழியாகி விட்டதென்று எனக்கல்லவா தெரியும்! அவர்களுக்கென்ன தெரியும்? நீங்கள் செய்வதைப் பார்த்து எல்லோரும் மூக்கைத் துடைத்துக் கொள்ளுகிறார்கள். சொல்லப் போனால், இறந்து போனவருக்கும் உமக்கும் தீராத பொழித் தகரார். ராம ராவணனா யிருந்தீர்கள். இப்பொழுது ராவணனும் நல்லவன் தான் என்று இரக்கங் கொண்டு ஆறுதலளிக்க வந்திருக்கிறீர். பொழித் தகரார் செய்ய மறுபடி இறந்தவன் எங்கே வரப் போகிறான் என்ற தைரியமோ என்னமோ உங்களுக்கு! இவ்வளவு நேரம் வெறும் வயிறுடன் நீங்கள் செய்த வேலை யென்னவென்றால் பந்து மரியாதை!

இப்படியே தெருவு மரியாதை, கிராம மரியாதை, தேச மரியாதை, சம்பந்தி மரியாதை, சமூக மரியாதை முதலியவற்றைப் பற்றி சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால் பத்திரிகாசிரியர் மரியாதை—கத்திரிக்கோலும் சிவப்புப் பென்சிலும்—தென்படுமே, அதற்கென்ன செய்யலாம்? "சிவனே என்று உன் மரியாதைக் காப்பாற்றிக் கொள்ளேன்" என்கிறீர்களா? வந்தனம்.

ஹரிஜன மலர்கள் (மகாத்மா ஹரிஜன விஷயமாக வெளியிட்ட அறிக்கைகளின் மொழி பெயர்ப்பு)

ஹரிஜன சேவை	0	0	6
ஹரிஜனத் தொண்டு	0	0	6
ஹரிஜனப் பணி	0	0	6
ஹரிஜன விமோசனம்	0	0	6

சுதந்திரச்சங்கு புத்தகசாலை
பைக்கிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, சென்னை.

ஊர்க் கவலை

(திலீபன் எழுதியது)

ஒரு வாலிபன் சட்டமறுப்பிலிறங்கி, சிறை சென்று, திரும்பி வீடு போய்ச் சேர்ந்த போது, ஒரு பாட்டி கேட்டாள்: "ஏண்டாப்பா, நமக்கெதற்கு இதெல்லாம்? நாம் உண்டு, நமது காரியமுண்டு. ஊர்க் கவலையெல்லாம் நாம் படலாமோ?" என்பது அவளுடைய கேள்வி. அந்தப் பாட்டி மாத்திரமல்ல, இன்னும் அவள் மனோபாவம் படைத்த எத்தனையோ பேர் நாட்டிலிருக்கிறார்கள்.

* * *

"நாம் உண்டு; நமது காரியம் உண்டு" என்பது ஒரு அருமையான தத்துவம்தான். ஆனால், நாம் மாத்திரந்தான் இந்த உலகத்தில் இருக்கிறோமா? பிறரும் இருக்கிறார்கள். அவர்கள் சும்மாத்தான் இருக்கிறார்களோ? அதுவுமில்லை. ஆறாயிரம் மைலுக்கப்பாலிருந்து வந்தவர்கள் இப்பொழுது நம்மை வெகு சொகுசாய் ராஜ்யபாரம் புரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தத் தேசத்திலே அநேக உரிமைகள் ஏற்பட்டுவிட்டனவாம். அவர்கள் ஊர்க் கவலைப்பட்டார்கள்; நமக்கு அது கிடையாது. அதன் பலாபலன் இது தான்.

* * *

"கஞ்சி குடிப்பதற்கில்லார்; அதன் காரணம் இவையெனும் அறிவு மில்லார்" என்று பாடினார் பாரதியார். நமது தனி வாழ்விலுள்ள அநேகம் கஷ்ட நஷ்டங்களை மாத்திரம் உணர்வோர் பலர் இருக்கிறார்கள். அந்தக் கஷ்ட நஷ்டங்களின் காரணம் என்ன என்று கேட்டால், அவர்களில் சிலருக்குத்தான் தெரியும்; பலருக்குத் தெரிவதில்லை. தனி வாழ்விலுள்ள பல சங்கடங்களுக்குப் பொது வாழ்வு சீரழிந்து கிடப்பதுதான் காரணம். என்றாலும், பொது வாழ்வைச் சீர் திருத்துவதில் நம்மில் பெரும்பாலோருக்கு அக்கரை கிடையாது. 'ஊர்க் கவலை நமக்கெதற்கு?' என்ற தத்துவந்தான் நம் தேசத்தில் ஊறிக் கிடக்கிறதே.

* * *

"யாராரோ என்னென்னவோ செய்தார்களே; என்ன பலன் விளைந்து விட்டது?" என்ற கேள்வியை வேறு, சிலர் சுவாரஸ்யமாய்க் கேட்கிறார்கள். இந்த மனோபாவத்தை என்னவென்று சொல்வது? பொதுக் காரியத்தைச் செய்வது அடுத்த வீட்டுக்காரன் கடமையா? இவர்களுக்கு அதில் ஒன்றும் சம்பந்தமில்லையா? யாரோ வெட்டின குளத்தில் இன்று நாம் குளிக்கிறோம். நமது காரியமுண்டு, நாமுண்டு என்று நாம் இருப்போமானால், யாரோ வெட்டிய குளத்தில் நாம் மட்டில் ஸ்நானம் செய்யலாமோ? யாரோ கட்டிய கோயிலில் நாம் போய்க் கும்பிடலாமோ?

* * *

யாராரோ இன்று ராஜீயம், சமூகச் சீர்திருத்தம் முதலிய விஷயங்களுக்கெல்லாம் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவற்றால், நல்லவையோ கெட்டவையோ, ஏதோ பலாபலன்கள் நிகழுகின்றன; இன்னும் நிகழத்தான் போகின்றன. இன்று சும்மா இருப்போரெல்லாம், அவற்றை அனுபவிக்கப் போவ தில்லையா?

* * *

"அதைச் செய்; இதைச்செய் என்று நாமா அவர்களைக் கேட்டுக்கொண்டோம்? அவர்களாகச் செய்கிறார்கள். பலன் நம்மையும் வந்து சேருமானால், நாம் அனுபவிக்கத்தான் அனுபவிப்போம்" என்று இவர்கள் வாதம் வேண்டுமானாலும் செய்யலாம். கொஞ்சம் வெளிப்படையாகப் பேசினால் இவர்கள் வருத்தப்பட்டுப் பயனில்லை. "நான் கை யேந்தி நிற்கிறேன். போடுகிறவர்கள் போடட்டும்; இல்லாதவர்கள் போட வேண்டாம். அதில் ஒன்றும் நிர்ப்பந்த மில்லை" என்று ஒரு பிச்சைக்காரன் தருக்க சாஸ்திரம் படித்தால் எப்படி யிருக்கும்? பிறர் இயற்றும் பொதுக் காரியங்களின் பலாபலன்களை நாம் அனுபவித்தே தீர வேண்டி யிருக்கிறது; அனுபவித்துக் கொண்டு மிருக்கிறோம்; இன்னும் அனுபவிக்கத் தயாராகவு மிருக்கிறோம். ஆனால், பொதுக் காரியத்தில் நாம் எவ்விதச் சிரத்தையும் எடுத்துக் கொள்ளத் தயாராயில்லை யென்றால், யாசகனின் மனோ பாவத்திற்கும் அதற்கும் ரொம்ப வித்தியாசம் கிடையாது.

செய்த கணக்கு

(“அசுவதி” எழுதியது)

“கிட்டு! கிட்டு!”

ஒரு உரத்த குரல் மேல்மேடியினின்று கேட்டது. அது கிட்டுவின் தந்தை விஸ்வநாதய்யரின் அழைப்புக் குரல். அதைக் கேட்டதும், ‘வெடியோசை’க் கேட்ட மந்திபோல, நடு நடுங்கிப் போய்விட்டான் கிட்டு.

குழந்தை சீதாவுடன்,

“கியாக் கியாத் தம்பாளம்
கீச்சுக் கீச்சுத் தம்பாளம்”

விளையாடிக் கொண்டிருந்த அவன், அப்படியே தன் கரத்திலிருந்த வாழைப் பூமடலைப் பொத்தென்று கீழே போட்டுவிட்டு, “இதோ வந்துட்டேன் அப்பா” என்று கூவிக் கொண்டே மாடியை நோக்கி ஓடினான்.

ஓடுகிற அவசரத்தில் “இந்தக் கிட்டு எப்பொவும் இப்படித்தான். பாதி யாட்டத்திலேயே ஓடிப் போயிடுவான். இதான் அவன்கூட விளையாடக் கூடாது” என்று சீதா முனகிக் கொண்டது அவன் காதுகளில் விழுந்தனவோ என்னவோ? ஏனெனில் அவன் கவனம் முழுவதும் தந்தையின் அழைப்பில்தான்.

சமையலறையிலிருந்து குதித்தோடி வந்த அவனது வேகம் மாடிப் படியை அடைந்ததும் சடாலென்று தடைப் பட்டுவிட்டது. அவனால் வேகமாகப் போக முடியவில்லை. மெள்ள மெள்ளக் காலடி யெடுத்து வைத்து, படபடவென்று அடித்துக்கொள்ளும் இதயத்தோடும், பயப்பிராந்திக் கொண்ட கண்களுடனும் படியேறிச் சென்றான். கடைசிப் படியை அடையும்போது, அவன் மனதில் ஒரு திகில் தோன்றி உற்சாகம் குன்றிவிட்டது.

கிட்டு அறையில் நுழையும் பொழுது, விஸ்வநாதய்யர் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவரது கையில் கிட்டுவின் கணக்குப் புஸ்தகம் இருந்தது. அதன் ஏடுகளைப் புரட்டிக் கொண்டிருந்தார்.

கிட்டு அவரை யணுகி நாற்காலிக்குப் பின் நின்றான். பயத்தால் பீடிக்கப்பட்டிருந்த அவன் முகத்தில் வியர்வை துளிர்த்தது. உருட்டி விழித்த கண்களுடன் அவனை நோக்கி, “ஏண்டா! கணக்குப் போடாமல் விளையாடிக்கொண்டா இருக்கிறாய், ஹூம்!” என்று கர்ஜித்தார் தந்தை. அந்தப் பார்வையும், அந்தத் தொனியுமே போரும் கிட்டுவின் கொஞ்ச நெஞ்ச மிருந்த தைரியத்தையும் போக்கடிப்பதற்கு.

“இல்லேப்பா, செய்திருக்கேன்”, என்று நடுங்கிக்கொண்டே கூறினான் கிட்டு.

“எடுத்துக்கொண்டு வா, பார்ப்போம்”, என்றார் தந்தை.

கிட்டு ஓடிச் சென்று ஸலேட்டைக் கொணர்ந்து கொடுத்தான். எட்டுக் கணக்குகள். ஒவ்வொன்றாகப் பார்த்தார் தந்தை. ஒன்றாவது சரியாகச் செய்திருக்கப்படவில்லை. அவ்வளவும் தப்பிதம்.

தந்தைக்கு வந்த கோபத்திற்கு எல்லையில்லை. ‘வாடா இங்கே’! என்று அழைக்கும் பாவனையில் தலையை அசைத்தார். அவர் கூப்பிடுவதன் அர்த்தம் கிட்டுவுக்குப் புரிந்துவிட்டது. தயங்கித் தயங்கி நடந்து கொண்டே அவரருகில் கைக்கெட்டும் தூரத்தில் வந்து நின்றான். அவன் கால்கள் விடவிடத்தன. உடல் நடுங்கியது.

வளர்ப்பானேன்? கிட்டுவின் உடலின் பல பாகங்களிலும் அவரது விரல் அடையாளங்கள் ஆழப் பதிந்துவிட்டன. அந்தத் தடங்களிலிருந்து ஒருவன் அவரது கையளவைத் தெரிந்து கொள்ளலாமென்றால், அவர் அடித்த அடிகளை என்னென்பது? என்ன செய்வான் கிட்டு? துடிதுடித்துப் போய்விட்டான். அழுவதற்கும் திராணியற்றுப் போய்விட்டான்.

அவரது கைகள் தானாக நின்ற பொழுதுதான் நின்றன.

“அடீ” என்று கூப்பிட்டார் உச்சஸ்தாயியில்.

கிட்டுவின் தாய் வந்தாள்.

“இவனுக்குக் கணக்கு முழுவதையும் செய்தால்தான் மத்தியான்னச் சோறு. இல்லாவிடில் போடாதே”, என்று கண்டிப்பான உத்திரவு போட்டுவிட்டார். அந்த அம்மாளும் மறு மொழி பேசாது சென்றுவிட்டாள். அவரது உத்திரவின் கண்டிப்பு இப்படிப்பட்டது என்று இவ்வளவு நாட்கள் அவருடன் பழகிய பின்பும் அந்த அம்மாளுக்குத் தெரியாமலிருக்குமா?

* * *

விஸ்வநாதய்யர் சுபாவத்தில் சாந்த குணம் வாய்ந்தவர்தான். அவருடன் பழகியவர்கள் அவரை முன்கோபியென்றோ, சிடுசிடுத்த முகத்தினர் என்றோ கூறமாட்டார்கள். இளகிய மனதும், அன்பு மிகுந்த இருதயமும் படைத்தவர்.

அதென்னவோ கிட்டுவைக் கண்டால் மட்டும் அவரது சாந்த குணம் பஞ்சாகப் பறந்துவிடும். அவனைக் கூப்பிட்டாலும் சரி, பேசினாலும் சரி ஒருவிதக் கடுகடுப்புடன்தான் இருப்பார்.

காரண மில்லாமலில்லை.

குழந்தைகளுக்குச் செல்லம் கொடுத்தால், கெட்டுப் போய்விடுமென்றும், ஆகையால் கண்டிப்புப் படுத்துவதுதான் சரியென்றும் அவர் மனதிற் பதிந்து கிடந்தது. ஆகவே கிட்டுவைக் கண்டிப்பாக நடத்துவதற்கு வேண்டிய வழிகளை அவர் கையாளத் தயங்குவதில்லை. எல்லா ‘பெற்றோர்களை’யும் போலவே அவருக்கும் கிட்டு பெரிய கெட்டிக்காரனாக இருக்க வேண்டுமென்று ஆசை.

அவர் சொல்லிக் கொடுத்தால் ஒரே தடவையில் கிரஹித்துக் கொள்ள வேண்டும். இரண்டாந் தடவை கேட்கக் கூடாது. கேட்டால் கோபம் வந்துவிடும். ‘அடிமேல் அடி கொடுத்தால் அம்மியும் நகரும்’ என்ற பழமொழி அவருக்கு வேத வாக்கு.

ஆனால் கிட்டுவோ—அம்மியாவது நகரும்—அவன் நகர மாட்டான். அந்தக் குற்றம் அவன் மீதல்ல; அவனைப் படைத்த பிரமனின் குற்றம். எல்லாருக்கும் எல்லாம் பிடிக்கிறதா? எல்லாம் முடிகிறதா? அவனுக்குக் கணக்கு என்றால் நஞ்சு. இது அவனாகச் செய்து கொண்டதல்ல; பிறவிக் குணம். இப்படிப்பட்ட கிட்டுவை அடியின் மூலம் சீர்திருத்திவிடலாம்,’ என்ற தப்பெண்ணம் கொண்டிருந்த அவருக்கு “அடியினால் இன்னமும் அவன் புத்தி மந்தித்தே

போகுமே யொழிய சீர்திருந்தாது" என்பது எவ்வாறு புரியும்?

* * *

கிட்டு இல்லாமல் சீதாவுக்குப் பொழுது போகவில்லை. கிட்டுவைத் தொடர்ந்து வந்த அவள், அப்பா அவனை அடித்ததை ஒளிந்து நின்று பார்த்துக் கொண்டிருந்தாள். பயம் அவளைப் பற்றிக்கொண்டது.

விரைவாகக் கீழே யிறங்கி அன்னை இருக்குமிடம் ஓடினாள். 'ஏதுக்கு அம்மா, அப்பா கிட்டுவை அடிச்சா' என்று இரக்கத்துடன் தாயிடம் வினவினாள்.

"கணக்குச் சரியாகச் செய்யவில்லையாம். அதற்காக அடித்தாராம்" என்றாள் தாய்.

'அதுக்குத்தானா அடிச்சா,' என்று சொல்லிக்கொண்டே வெளியே ஓடினாள். அந்தக் கேள்விக்கு என்ன அர்த்தமோ?

அதன் பின்பு அவளைச் சமயலறைப் பக்கமே காணோம்.

சிறிது நேரம் சென்றது.

தந்தை கீழே யிறங்கிப் புழக்கடைப் பக்கம் சென்றார். மாடியில் கிட்டு கணக்குச் செய்து கொண்டிருந்தான். அவன் கண்ணிமைகள் கண்ணீரில் தோய்ந்து இருந்தன. அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரு கணக்கிற்காவது சரியான வகையும் தெரியவில்லை. திகைத்துக் கொண்டிருந்தான்.

அப்பொழுது மெல்லிய சப்தம் கேட்டது. யாரோ படியேறி வந்து கொண்டிருந்தார்கள். 'தந்தைதான்' என்று நினைத்தான் கிட்டு. குனிந்த தலை நிமிரவே யில்லை. வாய் என்னல்லாமோ முனகிக் கொண்டிருந்தது.

"கிட்டு!" என்று ஒரு மெல்லிய குரல் அழைத்தது.

கிட்டு தலையைத் தூக்கிப் பார்த்தான். நிலைக் கதவின் வெளியிலிருந்து சீதாவின் முகம் அரைகுறையாகத் தெரிந்தது. அவள் கண்களில் ஒரு பிரகாசம்; முகத்தில் ஒரு மலர்ச்சி.

'இங்கே வாயேன்,' என்று கையை அசைத்தாள் சீதா. அவள் மீதுள்ள அன்பினால் கணக்குச் செய்வதையும் கூட நிறுத்திவிட்டு மெல்ல நகர்ந்து அவள் நிற்குமிடம் சென்றான்.

அவள் கையில் ஒரு உடைந்த ஸ்லேட்டு இருந்தது. அது அவளுடையது. அதை உயர்த்திக் கிட்டுவின் பக்கம் நீட்டினாள். கிட்டுவும் ஆவலுடன் அதைக் கையில் வாங்கினான். நேராகப் பிடித்துப் பார்த்தான். அதில்,

O O O O O O
O O O O O O

இவ்வாறு தாறுமாறாக முழுவதும் எழுதியிருந்தது. அதுதான் சீதா கிட்டுவிற்காகச் செய்த கணக்கு. அதைப் பார்த்ததும் கிட்டுவின் முகத்தில் புன்சிரிப்புத் தோன்றிற்று. சீதாவும் ஆவலுடன் அவன் முகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தாள்.

கிட்டு சிரித்துக்கொண்டே 'எதுக்கு இப்படி எழுதியிருக்கிறாய்' என்று வினவினான்.

"இல்லை, அப்பா உன்னைக் கணக்கு செய்யச் சொல்லி அடிச்சா இல்லியோ. இதைக் காண்பிச்சுடு. நேரக்காக நான் செஞ்சிருக்கேன். ஹூம்....... காண்பிச்சுட்டு சீக்கிரம் விளையாட வந்துடறியா" என்றாள் சீதா.

கிட்டுவுக்குக் கணக்குத்தான் போடத் தெரியாது. சின்னஞ் சிறு தங்கச்சி சீதாவின் அன்புமா அவனுக்குத் தெரியாது. அப்பாவின் அடிக்குத்தான் அவன் மசியவில்லை; சீதாவின் வாஞ்சையால் இளகாமல் என்ன செய்ய முடியும்?

அவளை யணைத்துத் தட்டிக் கொடுத்துக் கொண்டே, "சரி, ஆகட்டும். அப்பா வந்துடுவா. நீ கீழே யிறங்கிப் போ சட்டுனு" என்றான் கிட்டு.

'சீக்கிரம் விளையாட வரியா,' என்றாள் குழந்தை மறுபடியும்.

"ஆகட்டும் போ," என்றான் கிட்டு.

சீதா மகிழ்ச்சியுடன் கீழிறங்கிச் சென்றாள். கிட்டு சீக்கிரம் விளையாட வந்துவிடுவான் என்றெண்ணி ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

சீதா சென்ற பின், கிட்டு கணக்குகளை விட்ட இடத்திலிருந்து செய்யத் தொடங்கினான். எல்லாக் கணக்குகளையும் சரியாக ஒரு நொடியில் செய்து விடுவது போல் அவன் மூளை வெகு வேகமாக வேலை செய்து கொண்டிருந்தது. அவன் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. அதன் காரணம் அவனுக்குத் தெள்ளத் தெளியத் தெரியாது. "சீதாவின் அழைப்பு" மட்டில் அவன் கவனத்தில் இருந்து கொண்டே யிருந்தது.

நிலா

காளிதாஸன் பாடியது.

நீல வானக் கடலினை மேவி
நிலவுகின்ற நிலா எனும் பெண்ணே!
பால முத ஒளியெங்கு பெற்றாய்ப்
பாரும் விண்ணும் மயக்கிய ஜோதி
கோல மின்மினித் தாரகைக் கூட்டம்
கோடி கோடி யுனைச்சூழ்த லென்னே!
காலை எங்கு மறைந்திடுகின்றாய்
கனன்ற சூரியனுக்குப் பயந்தோ?

உலக மெங்கும் உறங்கிடும் காலை
உலவி லென்ன தொழில்செய வந்தாய்
இலகு மாந்தர் கொடுமைக்கு வெட்கி
இருளி லேவந் துலாவுகின் றாயோ
மலைகள் மீதும் கடல்களின் மீதும்
மற்று மெந்தப் பொருள்களின் மீதும்
உலவு கின்றனை யுன்னொளிக் கள்ளால்
உலகம் தூங்கிக் களிப்பது போலும்

மந்த மாகிய நின்னொளி யுள்ளே
மதனத் தேன்வந் தொழுகுதி தென்னே
சந்த மோனத் தனிச்சுவைக் கீதம்
தண் கதிர்க்குக்கொடுத்தனை கொல்லோ
உந்தன் ஜோதி யழகினைக் காண
உனக்கோர் நீர்நிலைக் கண்ணாடி போதும்
எந்த நீர்நிலை யுள்ளும் புகுந்தே
என்ன செய்குவை சாற்றுதி சற்றே.

வெள்ளைத் தாமரை யுந்தனைக் கண்டால்
விரிந்து பேசும் விதமென்ன சொல்லாய்
புள்ளைப் போலும் இறக்கைகள் வேண்டும்
புனிதை உன்னை யடைந்திடு வேன்நான்
கள்ளைத் தேனுட் பொழியுகின் றாயே
கவிதை வெள்ள மெழுப்புகின் றாயே
கொள்ளைப் பூமியி லின்பம்வே றுண்டோ
நுந்தன் ஜோதி யழகினை விட்டால்.

வான மேகத் திரைகளி னூடு
வந்து வந்து மறைந்திடுகின்றாய்
தேனைப் பாலிற் பொழியுகின்றாயே
தெய்வக் கள்ளை யுமிழு கின்றாயே
மோனத்தே வேணு நாதத்தைச்சேர்த்தே
மோஹினீ யெமைக் கூவுவை போலும்
வானத்தேற வகை யொன்றும் காணேன்
வந்தோர் முத்த மளித்திடு மாதே.

வக்கீல் குமாஸ்தா வைத்தி

(ஜமி)

இடையில் பஞ்சகச்சமும், மார்பில் யோக வேஷ்டியும், நெற்றியில் திருபுண்டரமும், குங்குமமும், சாந்துப் பொட்டும் துலங்க, கெடிகாரத்தின் சங்கிலி தொந்தியின் முன்புறத்தை அலங்கரிக்க, இடையில் சொருகிய பவுண்டன் பேனவுடன், ஒரு கையில் மூன்று மணு நிறையுள்ள காகிதக் கட்டையும், மற்றெரு கையால் தம் கூந்தலை ஆற்றிக்கொண்டு அதோ நாலாவது வீட்டின் வாசலில் தலையை ஆமைபோல் நீட்டி நீட்டி, இழுத்து இழுத்துச் சகுனத்தைப் பார்க்கிருரே அவர்தான் வக்கீல் குமாஸ்தா வைத்தி. வக்கீல் குமாஸ்தா வைத்தி யென்ருல் அழுத பிள்ளையும் வாய் மூடும்.

* * *

வைத்தி, பூஸ்பரிசம் ஆனவுடன் அவன் தகப்பனரும் வைகுண்டம் ஏகினதாகச் சொல்லிக் கொள்ளுகிருர்கள். வைகுண்டம்தான் போனரோ வேறு எங்கு சென்ருரோ கண்டவர் கிடையாது. தாயாரும் குழந்தையைப் பள்ளிக்கூடம் அனுப்பினள். வைத்திக்கும் வயது பத்து ரொம்பியது அவன் பள்ளிக்குப் புறப்படும் நேரம் குண்டு போட்டாப் போலே தான். ஆனல் இடையிலுள்ள வாய்க்கால் பாலத்தின் கீழ்த்தான் அவன் பள்ளி. தன்னை யொத்த சிறுவர்களுடன் குட்டை ராமாயணக் காலட்சேபம் நடத்திவிட்டு, கொண்டு வந்திருக்கும் கட்டமுதைக் கறைத்து, பின் சாயந்திரம் ஐந்து மணிக்கு நல்ல பையன் மாதிரி வீட்டுக்குப் போவான். அன்று அரைத்துக் கரைத்த தோசையோ அல்லது அடையோ கால் டஜனுக்குக் குறையாமல் அவனை வரவேற்கும். எப்படி யானுலென்ன? கம்மனுட்டி வளர்த்த பிள்ளை கவைக் கொதவாது என்பது அவனிடத்தில் பொய்த்துவிட்டது.

* *

வகை தெரியாதவன் வக்கீல் குமாஸ்தாவுக்கு என்று தன் பதினைந்தாவது வயதில் ஓர் வக்கீல் குமாஸ்தாவிடம் அப்ரெண்டிஸாக இரண்டு ரூபாய்ச் சம்பளத்தில் அமர்ந்தான். மூன்று வருஷங்களும் சென்றன. குமாஸ்தாக்களுக்கு வேண்டிய சடங்குகளும் பூர்த்தியான வென்றுதான் சொல்ல வேண்டும்.

* * *

இப்பொழுது வக்கீல் குமாஸ்தாக்களில் பிரதமஸ்தானம் நமது வைத்தி யுடையதுதான். கையெழுத்தென்னவோ பிர்மலிபிதான். ஆனல் பிர்மலிபியைக் கண்ணுல் கண்டவர் கிடையாது. வைத்தியின் கையெழுத்திலிருந்து ஒருவாறு எப்படி இருக்குமென்று ஊகிக்கலாம். பிராது காப்பியில் என்ன எழுதி யிருக்கிருன் என்று கண்டுபிடிப்பது அசாத்தியம். அநேக தடவைகளில் கோர்ட்டாரே வைத்தியைக் கூப்பிட்டு என்ன எழுதியிருக்கிருன் எனக் கேட்டதும் உண்டு. சில சமயங்களில் அவனே திணறினன் என்பதும் மிகைபடாது.

* * *

பீஸ் வாங்குவதில் நட்சத்திரய்யனைக் காட்டிலும் 'தாண்டிதே மறு தாண்டிதே' என்பதைப்போல் பலே பேர் வழி. 'ஸ்டாம்பு பீஸ், எழுத்துக் கூலி, மனு லேபிள், வக்காலத்து நாம, வக்கீல் பீஸ், சில்லரைச் செலவு, கோர்ட்டு சிப்பந்திகள் இனும், இவ்வளவு மிருக்கு. அதைப் பற்றி பரவா யில்லை. இப்பொழுது கையில் எவ்வளவு இருக்கும். எல்லாத்துக்கும் பதினைந்து ரூபாய் கொடுங்கள். ஸ்டாம்பு பீஸ் கோர்ட்டில் வாங்கிக் கொள்ளுகிறேன். வக்கீலைப் பொறுத்த வரையில் பிந்திப் பார்த்துக்கொள்வோம்' என்பான். கோர்ட்டில் அவசரம் ஐந்து ரூபாய் எடுங்கள், குமாஸ்தாவுக்குக் கொடுக்கவேண்டு மென்று பறித்து விடுவான். கணக்குப் பார்த்தால் வக்கீல் வரும்படியை விட அதிகம். கழுகு பிணத்தைக் கொத்துவதற்கும் இவன் கட்சிக்காரனிடம் எத்துவதற்கும் அதிகமாக வித்தியாசமில்லை.

* * *

ஸ்மால்காஸ் கேஸ் வந்துவிட்டால் யோகம்தான். வக்கீலுடன் தமாஷாய்ப் பேசிக்கொண்டே கையெழுத்து வாங்கிவிடுவான். பீஸில் நாகூர்க் காசில் ஒட்டிய தூசுகூட வக்கீலுக்குக் காட்டும் வழக்கமே கிடையாது. வேலிக்கு ஓணன் சாட்சியென்பதுபோல், பொய்க் கேஸ் சிருஷ்டிப்பதில் மகா நிபுணன். அவனைப் பகைத்துக் கொண்டுவிட்டால் வேறு தலைக்குக் கொள்ளி வேண்டியதில்லை. இரண்டு கைகளாலும் எழுதிய மொட்டை பெட்டிஷன்கள் பறக்கும். சனி பகவான் கடைக்கண் நோக்கியது போல்தான். வைத்தி இதில் சம்பந்தப்பட்டிருக்கிருன் என்ருல் போதும். அவன் விஷயத்தில் தலையிட்டால் தீம்பு வந்துவிடுமென்று அந்தத் திக்கைக்கூட மற்றவர்கள் திரும்பிப் பார்க்க மாட்டார்கள்.

* * *

ஐம்பதாயிரம் ரூபாய் சொத்தும் சேர்ந்துவிட்டது. அவனிருந்த வக்கீலுக்கோ ஐயாயிரத்துக்கு வழியில்லை. வக்கீலைத் தேடுவதை விட்டு, கட்சிக்காரர்கள் வைத்தியைத் தேடுகிருர்கள், குமாஸ்தாவிலிருந்து பிரைவேட் வக்கீல், யாரிடம் கேஸ் கொடுப்பதென்பது அவன் வைத்ததுதான் சட்டம். வக்கீல்களும் அவன் தயவை நாடவேண்டிய காலம். சிக்கலான கேஸ்களில் - பிரபல நியாய வாதிகளும் இவன் யோசனையை நாடுகிருர்கள் என்ருல்................?

* * *

இப்பொழுது வைத்தி முனிசிபல் கௌன்சிலர். வாகனமில்லாமல் ஓடி கூட எடுத்துவைக்க மாட்டான். வைத்தி சொல்லிவிட்டால் அப்பீலே கிடையாது. கல்யாணம், கல்லெடுப்பு, பஞ்சாயத்து எதுவா யிருந்தாலும் வைத்தியின் பிரசன்னம் அவசியம். அவனில்லாமல் கல்யாணம் நிச்சயித்து விட்டால் வந்துவிட்டது ஆபத்து. மறுநாளே கோர்ட்டிலிருந்து சம்மன் வரும். சாரதா சட்டப்படி வயதா

காத குழந்தைக்குக் கல்யாணம் செய்துவிட்டதாகக் கேஸ்.

* * *

என்ன இருந்தென்ன? வீட்டுத் தெய்வத்திடம் இவன் பாச்சா பலிப்பதில்லை. பொட்டிப் பாம்புதான். வெளியிலிருந்து வீட்டுக்குப் போனவுடன், அன்றைய வரும்படியை அங்கு கணக்குப் பார்த்து பைசா வாரியாய் ஒப்புவித்துவிட வேண்டும். இல்லாவிட்டால் அன்றையச் சோறு மாக்குச் சோறுதான். பின்பு அதற்கும் அவனுக்கும் சம்பந்தம் கிடையாது. காலைக் காப்பிக்கு கட்சிக்காரன் தலையைத் தடவ வேண்டியதுதான்.

* * *

இவ்வித ஆர்ப்பாட்டங்களுக்கு உறைவிடமான வைத்தியைக் குதூகல சமயத்தில் பார்த்தால்தான் பாக்கியம். ரொம்ப வேடிக்கையாகப் பேசுவான். "நான், கம்பெனிகளில் வேலை செய்யும் கணக்குப் பிள்ளைகள், இன்ஷியூரென்ஸ் ஏஜண்டுகள், சர்க்காரிலுள்ள கிளார்க்குகள், ராஜப்பிரதிநிதியிடம் வேலை செய்யும் மெம்பர்கள்—அவர்களுக்கு வேறு பெயரிருக்கலாம்—எல்லோரும் ஒரே வர்க்கம்தான். எனினும் அவர்களைக் காட்டிலும் நான் மேலானவன். அவர்களுக்கு சுயேச்சை கிடையாது. அடிமைகள். நான் அப்படியல்ல. என்னிஷ்டப் பிரகாரம் நடப்பேன். எங்களைக் கண்டு எவ்வளவு பெயர்கள், காலனேவென்று அஞ்சுகிறார்கள் தெரியுமா? ஆனால் கட்சிக்காரர்களிடம் பணம் பறிக்கும் தொல்லையிருக்கிறதே: அப்பாடா! நிமிஷத்துக்கு எவ்வளவு பொய் சிருஷ்டிக்க வேண்டியிருக்கிறது தெரியுமா? சித்திரகுப்தனால்கூடக் கணக்கெடுக்க முடியாது. இல்லாவிட்டால் காசா லேசா. அதிலேன்னவிருக்கிறது சூட்சம்" என்று பிரசங்கம் செய்வான். சபாஷ் வைத்தியென்று ஆமோதிக்க நீங்கள்கூட தயாராயிருப்பதாகத் தோன்றுகின்றதே. உண்மைதானே?

ஸ்ரீயுத வ. வே. சு. அய்யர் எழுதிய
மங்கையர்க்கரசியின்
காதல் முதலிய கதைகள்
(தபாற்கூலி யுள்பட 10 அணா ஸ்டாம்பு)
சுதந்திரச் சங்கு காரியாலயம்,
திருவல்லிக்கேணி, சென்னை.

சும்மா

(பாலபாரதி ச. து. சு. யோகி எழுதியது)

தலைப்பைப் பார்த்தவுடன் என்னைச் சோம்பேறி என்று நினைத்துவிடக் கூடாது. நான் சோம்பேறியல்ல என்பதைக் காட்டவே இக்கட்டுரை எழுதுகிறேன்.

சும்மா வேறு, சுறுசுறுப்பு வேறு, சோம்பேறித்தனம் வேறு. முன்னையது பசுவின் குணம், நடுவது புலியின் குணம், பின்னையது எருமை மாட்டின் குணம். முதலாவது சத்வம், தேவர்களுக்குச் சொந்தமானது. இரண்டாவது ராஜஸம், ராக்ஷஸர்களின் சொத்து. மூன்றாவது தாமஸம், அசுரர்களின் தனிப்பெருமை. மனிதன் இப்பந்தி.

அகம், புறம், ஆத்மா, அனாத்மா, 'சஜாதீய விஜாதீய ஸ்வகதபேத ரகிதம்' என்று மூளையைக் குழப்பும் வேதாந்திகளின் சும்மாவைப் பற்றி எனக்கு இம்மியளவும் கவலை கிடையாது. 'எங்கடா வந்தே?' என்றால் 'சும்மாத்தான் வந்தேன்' என்னும் பாமரனது அர்த்தமற்ற சும்மாவைப் பற்றி இப்போது பேச்சில்லை; கவிராயனது கற்பனை நிறைந்த சும்மாவைப் பற்றித்தான் பேச்சு. ஒன்று கவிராயன், இல்லாவிட்டால் ஞானி—இவ்விருவர்களுக்குத் தான் சும்மாயிருக்க உரிமையுண்டு. மற்றவர்களின் சும்மா வெறும் சோம்பேறித்தனமேயாகும். த்யானம் செய்யும்போது ஒருவன் சும்மா யிருக்கிறான். கற்பனைகளைக் கவனம் செய்யும்போதும் ஒருவன் சும்மா யிருக்கிறான். கள்ளுக் குடித்துவிட்டுக் கூடத்தான் சும்மாயிருக்க முடியும் அதனால் இந்தச் சும்மாவும் அந்தச் சும்மாவும் ஒன்று என்று கூறிவிடலாமா?

மழை பெய்கிறது, நமக்கு மழையினால் கிடைக்கும் லாபம் சளியோ, காய்ச்சலோதான். ஆனால் கவிராயனோ அதனை ஒரு கவிதையாகக் கற்பனை செய்து விடுகிறான். மேகம் தினந்தினம் தான் ஓடுகிறது; நாமும் தினே தினே பார்த்திருக்கிறோம். ஆனால் காளிதாஸன் பார்த்த மேகம் 'மேக சந்தேஸம்' என்ற ஒரு அற்புதமான காவியமாய் அமைந்து விடுகிறது. எனக்கும் தேசபக்தி யுண்டு, உனக்கும் இருக்கலாம். நம்முடைய பக்தியெல்லாம் தற்காலப் பிரசங்க மேடைகளின் வறட்டுக் கத்தலாய்த்தான் முடிகிறது. ஆனால் பாரதியாரின் தேச பக்தியோ ஆவேச மிக்க கவிதை நீர்வீழ்ச்சியாக உருண்டோடுகிறது. இதன் காரணம் என்ன? கவிராயனது சும்மாத்தான். எனக்கும் உனக்கும் சும்மா யிருக்கவே தெரியாது. சும்மா யிருந்தாலும் அது சோம்பலிலோ, தூக்கத்திலே முற்றுப்புள்ளி பெற்றுவிடும். ஆனால் கவிராயன் சும்மாவுக்கு முடிவு கிடையாது. கம்பராமாயணம், வால்மீகன் கவிதை, வியாஸபாரதம், ஹோமரின் இலியத், கதேயின் காவியம், தாந்தேயின் நரகம், மில்தனின் 'துறக்க வீழ்ச்சி', ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் முதலிய அற்புதமான கவிக் களஞ்சியங்கள் இத்தகைய சும்மாவினிடையே பிறந்தவைகளே.

'சொல்லுதல் யார்க்கும் எளிதாம், அரிதாம்
சொல்லிய வண்ணம் செயல்'

என்று வள்ளுவர் பாடியுள்ளார். இவ்வாக்கியம் 'டன்' கணக்கில் பேசி 'அவுன்ஸ்' கணக்கில்கூடக் காரியஞ் செய்யாத கயவர்களது மனப்பாறையில் இடித்திடித்துப் போதிக்கவேண்டிய பாடம். ஆனால் இதே வாக்கியத்தைக் கவிராயனிடம் சொல்லுவது தப்பு. அவனுடைய மனோ உலகத்தில்—மனோ உலகத்தைத் தவிர அவனுக்கு வேறு உலகம் கிடையாது—செய்வதெல்லாம் எளிதாகவும், சொல்வது அரிதாகவும் தோன்றுகிறது. உண்மையில் பார்க்கப் போனால் ஓர் பெரிய ஆவேசத்தில் நாம் ஓர் பெரிய காரியத்தை நம்மை யறியாமல் விதிவசத்தால் செய்துவிட முடியும். அப்போது நம்மையும் மீறின ஒரு சக்தியின் கைப் பொம்மையாக நாம் இருக்கிறோம். இக்காரியத்தையே நாம் அழகாகவும் அற்புதமாகவும் வர்ணிக்க வேண்டுமென்றால் கவிராயனாக மாறினால்தான் முடியும். ஆகவே கவிராயன் ஒருவன்தான் சும்மாயிருக்க அருகதை உள்ளவன் என்பது இப்போது விளங்குகிறதல்லவா?

இன்னொரு விஷயம். கவிராயனது சும்மாக் காலத்திலே பிறப்பதெல்லாம் கற்பனைகள்தாம். வேறு வார்த்தைகளில் அழகான பொய்கள். 'பொய் பிறந்தது புலவர் வாயிலே' என்பது அட்சரத்துக் கட்சரம் உண்மையான

எனது சிங்காரம்

("குகப்ரியை.")

புராணத்தில் நேர்ந்த ஒரு சம்பவம் என் வாழ் நாளிலும் நேர்ந்ததென்றுல் என்ன ஆச்சரியம்! கருட கர்வ பங்கம் என்ற கதையைக் கேட்டிருப்பீர்கள். அதில் ஸத்ய பாமையின் அலங்கார விசேஷங்களைப்பற்றி வெகு விரிவாய்ச் சொல்லுவதுண்டு. ஸத்யபாமைக்கு வந்த அதே விபத்து ஒருநாள் திடீரென்று எனக்கும் வந்துவிட்டது.

வீட்டில் அவர் இல்லையா; அவர் ஒரு சமயம் மறுநாள் அடையாற்றுக்கு என்னை அழைத்துப்போக உத்தேசித்திருப்பதாகவும் அதற்கு வேண்டிய அலங்காரங்களுடன் சித்தமா யிருக்கும்படியும் சொல்லி யிருந்தார்.

என் சிநேகிதி 'பிரேமா.' நாகரிகத்திற் சிறந்தவள். "பிரேமாவைக் கேட்டுக்கொண்டு என்னென்னவேண்டுமோ வாங்கிக்கொள். பட்டிக்காட்டுத்தனமாய் வெறும் காலோடு, கொய்ச்சகம் வைத்த புடவையுடன் வருவதானல் அழைத்துப் போகமுடியாது" என்று கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டார் அவர்.

"அபிநவ நாகரிகை" என்று பெயர் கொண்ட வாரப் பத்திரிகையின் ஆசிரியை திருமகள் வஸுந்தரா என்பவரையும் எனக்குத் தெரியும். பிரேமாவுடன் அவர் வீட்டிற்குச் சென்றேன். பொதுவாய்ச் சற்றுநேரம் பேசியபின்பு அடையாற்றிற்குப் போவதையும், என் கணவர் விருப்பத்தையும் சந்தடி சாக்கில் சொல்லி வைத்தேன்.

அந்தம்மாள் உட்கார்ந் திருந்த இடத்தை விட்டெழுந்து நின்றுகொண்டும், அபிநய அலங்காரங்களுடனும் முன்னும் பின்னுமாய் நர்த்தனம் செய்தவளாய்ப் பின்வருமாறு சொல்லலானுள் :—

"என்ன ஆச்சர்யம்! நீங்கள் என் புத்திமதியைக் கேட்க இவ்வளவு தூரம் வருவீர்களென்று நான் எண்ணவேயில்லை. உலகம், அதிலும் நமது இந்தியப் பெண்ணுலகம் மிகவும் அநாகரிகமாகிக்கொண்டே வருகிறது. இந்த அநாகரிகத்தை ஒழித்துவிடுவது இந்தியப் பெண்களாகிய நமது கடமை யல்லவா? நகை, உடை, நடை இவைகளைப் பற்றி நான் வாரந்தோறும் நூதனமான விஷயங்களை வெளியிட்டாலும் படிப்பவர்கள் அதன்படி எங்கே நடக்கிறுர்கள். கோணி கோணியாய்ப் பங்களூர்ச் சேலைகள், கொட்டாப்புளிபோல் பனரீஸ் சரிகை ரவிக்கைகள், காலில் வண்டிமெட்டி, நெற்றியில் கொட்டையாய் மங்களூர்க் குங்கமம். என்ன அநாகரிகம்!

"சிறு பாவாடை, மெல்லிய மஸ்லின் சேலை. சம்கி, அல்லது எம்ப்ராய்டரி வேலைசெய்த மெல்லிய சில்க் சொக்

வாக்யம். 'என் இருப்பதை விட்டுப் பறப்பதைப் பிடிக்கவேண்டும்? உள்ளதை உள்ளவாறு எழுதுவதுதானே' என்று கவியின் சுவை யறியாத சில முட்டாள்கள் கேட்கின்றனர். அவர்களுக்கு நான் கூறக்கூடியது ஒரே ஒரு பதில். ஏனய்யா, பேனு தேய, இங்கிருப்போருக்கும் கண்ணுக்குமுன்னுல் கொட்டாப்புளிபோல் தெரிவதை எழுதவேண்டிய அவசியந்தான் என்ன? இயற்கையைக் கவிராயன் அப்படியே சித்தரிக்க வேண்டுமென்றுல் போட்டோ எடுத்துக்கொள்ளலாமே, அதற்குக் கவிராயன் எதற்கு. இயற்கை ஆயிரம் அழுக்குகளைக் கொண்டு ஒரு அழகிய மலரை சிருஷ்டிக்கிறுள். கவிஞனே ஆயிரம் அழகுகளைக் கலந்து ஒரு பேரழகைச் சிருஷ்டி செய்து விடுகிறுன். இயற்கையைப் பார்த்துக் காப்பியடிக்கும் கவிதை சரியான கவிதை யாகாது. இயற்கைதான் கவிராயனைக் காப்பி யடிக்கவேண்டுமே ஒழிய, இயற்கையைக் கவிராயன் காப்பி அடிக்கக் கூடாது.

கவிராயன் சும்மா உட்கார்ந்து கொண்டு கனவு காண்பவன். அக்கனவுதான் கவிதை. கம்பன் இலங்கையைப் பற்றிப் பாடுகிறுன்:

'மாகாரின் மின்கொடி மடக்கின ரடுக்கி
மீகார மெங்கணும் நறுந்துகள் விளக்கி
ஆகாய கங்கையினை அங்கையினி லள்ளிப்
பாகாய செஞ்சொலவர் வீசுபடு காரம்

என்று. "இலங்காபுரியிலே மாதர்கள் நிலா முற்றத்தில் சிந்திக் கிடக்கும் வாசனைக் குப்பைகளை மேகத்தில் தோன்றும் மின்னற் கொடிகளை ஒடித்துச் செய்த விளக்குமாற்றுல் விளக்குகிறுர்கள். விளக்கிய பின் கைக்கெட்டும் தூரத்திலுள்ள ஆகாய கங்கையின் நீரை யள்ளித் தெளிக்கிறுர்களாம்." இத்தகைய நிலாமுற்றம் உலகத்தில் எங்கேயும் கிடையாது. இது ஒரு அசல் பொய் என்பது எனக்கும் தெரியும். உனக்கும் தெரியும். இது ஓர் கனவு லங்கை, கற்பனை நிலாமுற்றம். இது உண்மையில்லை என்ற காரணத்தினுல் இக்கனவை இழந்துவிட நான் தயாராயில்லை, நீயும் தயாரா யிருக்கமாட்டாய் என்று நம்புகிறேன். கவிராயன் உலகத்திலே ஒருவனை ஒருவன் 'என்ன செய்கிறுய்?' என்று கேட்பது தப்பு; 'என்ன கனவு காண்கிறுய்?' என்று கேட்க வேண்டும்.

முடிவாக ஒன்று சொல்லுகிறேன். சும்மா யிருப்பவனெல்லாம் கவிராயன் என்றும் நினைத்துவிடக் கூடாது. அது கற்பனைச் சும்மாவா என்று நிச்சயித்துக்கொள்ளவேண்டும்.

கவிதை என்பது யாது?

"சக்கையைத் தழைக்க வைப்பது
கல்லைக் கனிவிப்பது
உயிரற்ற பொருள்கட்கு உயிர்
கொடுப்பது.
வெறு வெளியில் வியப்புகள் சிருஷ்டிப்பது,
கவிதை யென்பது ஓர் பைத்தியம்.

அழகான, அற்புதமான, இன்பமயமான பைத்யம்." அவ்வளவுதான்.

காய், 'ஸ்ட்ராப் பாடிஸ்', அவற்றின் பெருமை, அழகும் உபயோகமும் இவைகளைப்பற்றி வாரந்தோறும் கூட்டங்கூடி லேடி சேஷய்யாவும், ரைட் டானரபில் சர்மாவின் பெண், லேடி சுப்பையா, இவர்களெல்லாரும் பிரசங்கிக்கிறார்கள். பாவம்! ஆனால் என்ன பயன், ஒருவரும் கேட்பாரில்லை. என்ன மௌட்டீகம்! நம் நாட்டில் 'அழகுப்போட்டி' நடத்தவேண்டுமென்று ஆலோசித்து, பிறகு விட்டுவிட்டோம். சாதாரணமாக ஒரு கூட்டமென்றாலே ஒரே 'சரிகைமயமாய்' 'புர்கா' மாதிரி சேலையுடன் வருபவர்கள் ஒரு கட்சி; துப்பட்டியையும், ஜமுக்காளத்தையும் கட்டிக்கொண்டு வருபவர்கள் ஒரு கட்சி. இதில் எவர்கள் நாகரிகம் தெரிந்தவர்கள்?

"நீங்கள் என்னை அனுசரிப்பதானால் இப்பொழுது மேல் நாடுகளில் நிஜார் அணிவதுதான் மிக்க நாகரிகமென்று கருதப்படுகிறது. ஆனால் நான் உங்களை அப்படி செய்யச் சொல்லுவதாக எண்ணக்கூடாது. இந்தப் பட்டுப்புடவைகளையும் அரைக் கை ரவிக்கைகளையும் விட்டுவிடுங்கள். உடலுக்கு நல்ல காற்றோட்ட மிருந்தால்தான் தேகம் ஆரோக்கியமா யிருக்கும். பார்வைக்கும் அழகு. அதை விட்டுவிட்டு உடல் முழுவதும் மூடிக்கொள்ளும் கனமான ஜாக்கெட்டுகள் மகா அநாகரிகம் என்பதில் சந்தேக மென்ன? இயற்கை யழகை எடுத்துக் காட்டுவதற்கு உடையா? இயற்கை யழகைக் கெடுத்து மூடிவைப்பதற்கு உடையா? நான் சொல்லுகிறபடி உடுத்துக் கொள்ளுங்கள். நாளை மாலையிலேயே எல்லோரும் உங்களைப்போல் உடுக்கத் தொடங்காவிட்டால் என்னைக் கேளுங்கள். காலுக்கு நல்ல பாம்புத்தோல் பூட்ஸ் ஒன்று. சரீரத்தைப்போலவே தோன்றக்கூடிய பட்டு ஸ்டாக்கிங்ஸ். மெல்லிய மஸ்லின் சேலை. கழுத்தைத் தாராளமாய் மார்புவரை வெட்டிய ஜம்பர் ஜாகெட். ஸ்டிராப் பாடிஸ். தலைக்கு நல்ல வல்கனைட் தசாவதார ஊசிகள் 25. கைக்குட்டை ஒரு டஜன். சந்திரிகாஸ்னோ இவைகளைத் தயாரித்துக் கொள்ளுங்கள். தலையைத் தூக்கி வாரி 'பம்' வைத்து உயரமாகவோ (உச்சந்தலையிலேயோ) இல்லாவிட்டால் தழைத்து நெற்றியின்மேல் படியும்படி வாரி, காதுகள் மறையும்படி பிடரியிலாவது, பிச்சோடா போட்டுக் கொள்ளுங்கள். ஊசிகள் 25 போதாவிட்டால் 50 வாங்கிவிடுங்கள். தாவணி, அதாவது மூன்றானை சும்மா அலங்காரத்துக்கே யாகையால் பிரித்துப்போட்டு உடலை மறைக்க வேண்டாம். 'கோள மகளிர்'போல் ஒரே (ப்ரூச்சினால்) புடவையின் அகல முழுவதையும் அடக்கி இடப்புறத்துத் தோளிற்குக் கொஞ்சம் தாழக் குத்திவிடுங்கள். உங்கள் கணவர் உங்களை எத்தனை மணிக்குச் சித்தமாகச் சொன்னாரோ அதற்கு முன்பே நீங்கள் அலங்கரித்துக் கொள்ளுங்கள். அவர் அப்படியே பிரமிக்காவிட்டால் ஏனென்று கேளுங்கள்.

"அடடா! முக்யமானதை மறந்துவிட்டேனே. இந்த நகைகளை யெல்லாம் கழற்றி விடுங்கள் கையில் ஒரே ஒரு மெல்லிய வளையல். கழுத்தில் மெல்லிய நீளச் சங்கிலி. காதில் மங்களூர் ஸ்டார், மூக்குத்தி. 'நான்ஸென்ஸ்' அது வேண்டவே வேண்டாம். வீட்டில் நிலைக் கண்ணாடி யிருக்கிறதோ இல்லையோ? அதில் பார்த்துக்கொண்டு உசிதப்படி மாற்றிக் கொள்ளுங்கள். இது உங்களுக்குப் பிடிக்காவிட்டால் சென்ற வாரம் நாகரிகையில் வெளியான விவரங்களைப் பாருங்கள். அதில் எந்தெந்தச் சேலைகள் கட்டிக்கொண்டால், எவ்வெவ்வாறு நடக்கவேண்டும், எப்படி நிற்கவேண்டும், எப்படித் தலையைச் சாய்த்துக்கொள்ளுவது நாகரிகத்தின் முதற்படி, நகங்களை எப்படி வரிசைக் கிரமமாய் கடிக்கவேண்டும், யாரிடம் எந்தமுறைப்படி சிரிக்கவேண்டும் என்று வெகு விஸ்தாரமாய் எழுதியிருக்கிறேன். உடையைப்பற்றி மட்டுமே நீங்கள் கேட்டாலும் உடை ஒன்றைமட்டுமே சொல்லுவது மூடத்தனம். போஜனம் என்பதற்கு அன்னத்தைப் பிரதானமாகவும் மற்றவைகளை உப அம்சங்களாகவும் கொள்ளுகிறோமே, அதுபோலவே அலங்காரம் என்பதில் உடை முக்கியமானதாகவும் மற்றவைகள் அதை ஒட்டியவைகளாகவுமே கொள்ளவேண்டும். வெறும் சோறு உண்ண உதவுமா? அதுபோல உடை என்றால் உடையை மட்டுமே கவனிப்பது மதியீனம்............"

சிநேகிதி இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கையில் "நேரமாகி விட்டது" என்றேன்.

"ஆனால் சரி, ஆகா? போய் வாருங்கள். உங்களுக்கு எந்த நிமிஷத்தில் என்னுடைய ஆலோசனை அவசியமானாலும் வாருங்கள். கவர்மெண்ட் ஹவுஸில் 'படுதாப் பார்ட்டி'க்கு உங்களுக்கு அழைப்பு வந்திருக்கிறதா?" என்று கேட்டாள்.

"வந்தால் சொல்லுகிறேன்."

* * *

மறுநாள் சமாசாரம்.

மணி மூன்று. என் சிங்காரம் முடிந்தது. கண்ணாடியில் பார்த்துக் கொண்டேன். என்னை எனக்கே அடையாளம் தெரியவில்லை. கொஞ்சம் மெழுகை ஒரு ஈர்க்கினால் எடுத்து நெற்றியில் வைத்து அதன்மேல் கொஞ்சம் மங்களூர் குங்கமத்தினால் மிகவும் சிறியதாய்ப் பொட்டுவைத்துக் கொண்டேன்.

டக், டக், என்று பாதக்குறடுக் கட்டையின் ஓசை கேட்டது. நான் வெளியே வர வெட்கி உள்ளேயே நின்றேன். அவர், தடதடவென்று வந்தவர் என்னைப் பார்த்துப் பரிகாசமாய் "ஹல்லோ! எஸ்தரம்மா எப்ப வந்தீங்க?" என்றார்.

எனக்கோ கோபம் பொங்கிவிட்டது.

படீரென்று ஓசை. ஏன்? கதவைப் படீரென்று சாத்தித் தாளிட்டு விட்டேன்.

எனக்கல்லவா ஸத்யபாமைக்கு வந்த விபத்து என்றேன்; இப்பொழுது சாக்ஷாத் கண்ணபிரானுக்கு வந்த அதே "பேராபத்து" அவருக்கும் வந்துவிட்டது.

ஆனால் இவர் "கதவைத் திறவாய், திறவாய்" என்று கதறவில்லை.

"கதவைத் திறக்கப் போகிறாயா? இல்லையா?" என்று வெகு கம்பீரமாய், அதிகார தோரணையுடன்தான் கேட்டார்.

பதிலில்லை.

"திறந்து தொலையேன்"

பதிலில்லை.

"திறக்கிறாயா? நான் அடையாறு போகட்டுமா?"

"திவ்யமாய் மேள தாளத்தோடு போகலாம்."

குசாலாய்ப் போகட்டும். வெளியிலே, ஈவினிங்ஹாட், பூட்ஸ் ஒன்றும் கிடையாது. எல்லாம் உள்ளே பீரோவில்தான் இருக்கிறது. எப்படிப் போகிறார் பார்த்து விடுகிறேன்.

ஈவா லாவே லிரி

துறவு பூண்ட ஓர் நாடக ராணி

(குஞ்சு)

அவள் ஓர் அனாதை, அழகியவள். இனிமையான சாரீரம், கனிவான கானங்கள், இளகிய நெஞ்சம், தளதளத்த பேச்சு. டூலோன் வீதிகளில் பாட்டுப்பாடிப் பிச்சை யெடுத்து வயிறு வளர்த்து வந்தாள்.

அவள் பாடினால் போதும். ஊரில் எல்லோரும் அங்கு கூடிவிடுவர். அவளைக் கண்டு இரக்கப் படாதவர்கள் கிடையாது. சிலர் அவளைப் பாரிஸ் நகரத்திற்குப் போய்ப் பேரும், புகழும் சம்பாதிக்கும்படி உபதேசித்தனர். காட்டு ரோஜாவைப் போல் அவளுடைய கலை அழகெல்லாம் அச்சிற்றூரில் கவனிப்பாரற்றுப் பாழாய்ப் போவதை அங்கல்லோர்கள் விரும்பவில்லை.

அவளும் பாரிஸ் சென்றாள். அங்கே ஒரு சிறு நாடகக் கம்பனியில் ஒரு சிறு நடிகையாகச் சேர்ந்தாள். அவ்வளவுதான். சுக்ரதிசை பிறந்து விட்டது. அவளுடைய நடிப்புத் திறமையும், சங்கீதப் பெருமையும் ஒரே நாளில் பாரிஸ் நகரத்தை வசம் செய்து விட்டன.

உலகத்தின் செல்வங்கள் யாவும் அவள் காலடியில் சேவை செய்யக் காத்துக் கிடந்தது. பெரிய, பெரிய மனிதர்களெல்லாம் அவளுடைய சிநேகத்தை விரும்பினர். நாடகக்காரர்களெல்லாம் தேனை ஈ மொய்ப்பது போல் அவளைச் சூழ்ந்தனர். முட்படுக்கை போலிருந்த அவளது துன்ப வாழ்க்கை இப்போது மலர்ப் படுக்கையாக மாறி விட்டது.

அவள் பேரழகி என்று முன்னமேயே சொல்லி யிருக்கிறேன். சுருள் சுருளான கூந்தல், ஆழமான ஆசை ததும்பும் கடல் விழிகள், அல்லிப் பூப் போன்ற மெல்லிய மேனி—ஒரே வார்த்தையில் அவள் ஓர் அபூர்வமான அழகுடையவள், அழகு மட்டுமல்ல—அதிசயமான நடனத் திறமை, அமுதமயமான சங்கீதம், போதக் குறைக்கு மாசு மறுவற்ற உள்ளம், தெளிந்த அறிவு—ஆகவே பாரிஸ் நகரம் முழுமையும் அவளைக் கொண்டாடியதில் வியப்பில்லை.

அவளுடைய படம் வராத பத்திரிகை இல்லையென்று கூறலாம். அவள் அழகைப் பற்றி ஒருவர் எழுதுவார். ஆடையாபரணங்களைப் பற்றி மற்றொருவர் வர்ணிப்பார். அவளுடைய கலைத்திறமையைப் பற்றி இன்னொருவர் பிதற்றுவார். குற்றங் கண்டு பிடிப்பதையே தொழிலாகக் கொண்ட 'கிரிடிக்'குகள் கூட அவளைக் குறை கூறவில்லை.

நாடக மேடையில் அவளுடைய பெயர் ஈவா லாவேலிரி என்பது.

இவ்வளவிருந்தும் நமது லாவேலிரிக்கு மனச்சமாதானம் ஏற்படவில்லை; ஏதோ, எங்கோ, எதுவோ பாக்கியா யிருப்பதாய்த் தோன்றியது. வேண்டிய தெல்லாம் வேண்டிய வண்ணமே வந்து வந்து குவிந்தன எனினும் மனத்திருப்தி மட்டும் என்ன விலை கொடுத்தாலும் கிடைக்கும் வழியில்லை. முதல் முதலில் தான் ஏழையாய் இருந்தபோது பணமும், புகழும் கிடைத்தால் இன்பமும் தானே வந்து விடும் என்று ஈவாள் நினைத்தாள். கொஞ்ச காலத்திற்கு ஒரு குழந்தை தன் பொம்மைகளுடன் விளையாடுவது போல் பளப் பளப்பான தனது புதிய வாழ்க்கையோடு சந்தோஷமாய் விளையாடினாள். ஆனால் இப்போது இவ் வாடம்பர வாழ்க்கையில் அவளுக்குப் பிடிப்பு விட்டுவிட்டது. அவள் தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள். 'சே! இவ்வளவு தானா. என்னுடைய உள்ளத்தில் அமைதி உண்டாகவில்லையே. எப்போது தான் நான் ஆனந்தமா யிருப்பேன்?' என்று ஏங்கினாள்.

ஈவா லாவேலிரியின் இயற் பெயர் யூஜினி பெனிக்லி. பாரிசை விட்ட யூஜினி இன்பத்தைத் தேடி யாத்திரை புறப்பட்டு விட்டாள். கடைசியாக அவள் இன்ப நிலையத்தையும் கண்டு பிடித்து விட்டாள்.

மச்சு வீட்டில் அவள் இன்பத்தைக் காணவில்லை. ஆனால் குச்சு வீட்டில் கண்டாள். பொன்னும், மணியும், புடவையும், அணியும், அவளுக்கு இன்பந் தரவில்லை. ஏழைகள் சேவையில் மட்டுமே அவளுக்குத் திருப்தி ஏற்பட்டது. படித்த, பணக்கார, ஆடம்பரமான நகரத்தின் இளைஞர்களின் கூட்டத்தில் கிடைக்காத மனச்சாந்தி ஒஸ்கஸ் என்னும் சிறிய கிராமத்தில் ஏழை எளியவர்கள், நோயாளிகள், படிப்பற்ற பாமரர்கள்—இவர்களிடையே யூஜினிக்குக் கிடைத்தது.

'பரோபகாரார்த்தம் இதம் சரீரம்' என்ற பெரு உண்மை நமது நாயகிக்கு இப்போதுதான் விளங்கியது. எங்கெங்கு உதவி வேண்டுமோ அங்கெல்லாம் அவளைப் பார்க்கலாம். அவளும் எளிய வாழ்வை மேற் கொண்டு தெய்வ பக்தியிலும், சேவையிலும் தன் நாளைக் கழித்து வந்தாள்.

ரொம்ப தூரம் தேடிய பிறகு 'பாரிஸ் நண்பர்கள்' அவளைக் கண்டு பிடித்தனர். பாரிஸ் நகரத்திற்கும், அதனுடைய—அவர்கள் நினைவுப்படி—பள பளப்பான இன்ப வாழ்க்கைக்கும் திரும்பி வரும்படி எவ்வளவோ மன்றாடிக் கேட்டுக் கொண்டனர். ஆனால் அவள் பாரிசை எட்டிப் பார்க்கவும் மறுத்து விட்டாள். 'ஆ ஆ, இது ஒரு எட்டுக்கு' என்று நண்பர்கள் பரிகசித்தனர். ஆனால் அதற்கப்புறம் 15 வருஷ காலம் பேர்போன அந்த நாடக ராணி தனது கிராம ஜனங்களுக்கு ஓயாது ஒழியாது சேவை செய்து உவகை அடைந்தாள்.

கடைசியில் 1929-ம் வருஷம் அவளுடைய புண்ணிய ஜீவன் பூத உடல் நீத்தது. அவளுடைய புகழுடல் மட்டும் இன்னும் மறையவில்லை.

மரணத்தின்போது அந்த அம்மாளுக்கு வயது 61.

நந்தனார் கீர்த்தனைச் சுருக்கம்

(தொகுத்தவர்: சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்)

விலை அணா 2.

கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகளில் முக்கியமான பலவற்றையும் ராஜாஜீ பொறுக்கித் தொகுத்திருக்கிறார். மாஜி ஹைகோர்ட் ஜட்ஜி வி. பாஷ்யம் அய்யங்காரின் நேர்த்தியான முகவுரையுடன் கூடியது. சுத்தமான பதிப்பு. டெம்மி 1×8 அளவில் 50 பக்கங்கள்.

சுதந்திரச்சங்கு புத்தகசாலை,
திருவல்லிக்கேணி, சென்னை.

நாடகம்—சில கேள்விகள்

(“ வியன் ” எழுதியது)

அறிவு வளர்ச்சித் துறையில், நாடகக் கலை ஒரு முக்கிய ஸ்தானத்தை வகிக்கிறது. பண்டிதர்களைக் காட்டிலும் பாமரர் விஷயத்தில் அது விசேஷப் பயனை யளிக்கிறது. இதற்குக் காரணங்கள் பல. முதலாவதாக, நாடகம் உலக வாழ்வைப் பிரத்தியட்சமாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. இதன் மூலமாகப் போதிக்கப்படும் நீதியானது அனுபவ சித்தம்போலவே தோன்றும். ஆகவே பார்ப்பவரின் மனதில் ஆழமாகப் பதியும். பிறகு நாடகக் கலையில் பாட்டு, பேச்சு, நடிப்பு, திரைக்காட்சி முதலியன ஐக்கியமா யிருப்பது ஒரு விசேஷமாகும். இவைகளில் ஏதாவது ஒன்றினாலாவது பார்ப்பவனின் மனம் கவரப்படுவது நிச்சயம். இவ்விதக் காரணங்களால் நாடகக் கலைக்கு பெருமதிப்பை யளிக்கிறோம்.

ஒரு தேசமோ, அல்லது சமூகமோ, வாழ்க்கைத் துறையில் முன்னேறி யிருப்பதற்கு, அதன் நாடக இலக்கியத்தின் முன்னேற்றத்தைக் கவனித்தால் போதுமானது. முன்காலத்தில் தமிழர் அரங்கம் உன்னத நிலையில் இருந்தது; அதனால் தமிழர் வாழ்வும் வெகுவாக முன்னேறி யிருந்தது என்பதற்குச் சான்றுகள் பலவுண்டு. இடைக் காலத்தில் தமிழர் புகழ் குன்றியது; அவர்கள் நாடக மேடையும் சீர்கேடு அடைந்திருந்தது. தற்காலத்திலும் தமிழர் நாடகமேடை சீர்திருந்தி விட்டதாகச் சொல்வதற்கில்லை. ஆனால் அதற்கான சீர்திருத்தங்கள் செய்யப் பட விருக்கின்றன. இந்தப் புனருத்தாரண வேலையில் முனைந்து நிற்போர் சிறு பான்மையரா யிருக்கின்றனர். இவர்கள் முயற்சி திருவினையாவதற்குப் பொறுப்பாளியா யிருப்பவர் பொது ஜனங்கள். அவர்களிடையே நாடகத்தைப் பற்றித் திட்டமான அபிப்ராயம் ஏதும் ஏற்படாதவரை, சிறுபான்மை யோரின் முயற்சி ஈடேறுவது சிரமம். பொது ஜனங்களின் மனதில் நாடகத்தின் சூக்ஷுமமும், அதன் நவீன ஆதர்சமும் நன்றாகப் பதியும்படி செய்யவேண்டியது மிகவும் அவசியமாகும். அந்தக் குறையால், பொது ஜனங்களின் மனத்தில் இந்தப் புனிதக் கலையைப்பற்றி ஒரே குழப்பமாய் இருக்கிறது.

பின்வரும் பிரச்னங்களை வாய்விட்டுக் கேட்க ஒருவரும் தயாராக இல்லை எனினும் அவர்கள் மனதில் அவைகள் உழன்று கொண்டே இருக்கின்றன. முதலாவது நாடக லக்ஷணத்தைப் பற்றிய சந்தேகங்கள். எத்தனை அங்கங்கள்? எத்தனை காட்சிகள்? சூத்திரதாரர் வேண்டுமா, வேண்டாமா? விநாயகர், சரஸ்வதி வணக்கம் வேண்டுமா, வேண்டுமா? ராஜா ராணிகளை ஆஸ்தான மண்டபத்தில் அமர்த்தி, அவர்கள் பேச்சுக்களி னிடையே திரையைத் தூக்கி நாடகத்தை ஆரம்பிக்கிறார்களே, இதுதான் சரியான ‘பந்தாவா’? பிறகு நாடக பாத்திரங்கள் உரை நடையில் பேசவேண்டுமா, செய்யுள் நடையில் பேசவேண்டுமா? சுந்தரம் பிள்ளை ‘மனோன்மணீய’த்தைச் செய்யுள் நடையிலேயே எழுதினாரே, அது படிக்கத்தான் யோக்யதை யுடையதா? செய்யுள் நடையில் எழுதப்பட்ட நாடகங்களை மேனாட்டில் நடிக்கிறார்களாமே, நாமும் ஏன் நடிக்கக்கூடாது? உரை நடை யாசிரியர்களும் சொல்லணிகளை வாரி விநியோகித் திருக்கிறார்களே? நாடகம் உலக வாழ்க்கையைச் சித்திரித்துக் காட்டுவதானால், நம் தினசரி வாழ்வில் இப்படித்தான் அலங்காரமாகப் பேசுகிறோமோ? ஒரு ஆசிரியர் ‘காமி சத்தியபாமா கன்னத்தைக் கடிப்பாய்’ என்று ஜோரான கவிதை நாடகம் எழுதி விடுகிறாரே? இதை நாம் ஒப்புக் கொள்வதா? நாடக லட்சியம் நீதி போதனையா? அல்லது தமாஷாவா? நாடகத்தில் ஸ்திரீகளைச் சேர்ப்பதா? ஆடவர் பெண்வேஷம் பூணலாமா?

நாடகத்தில் எது முக்கியம்? பாட்டா? பேச்சா? நடிப்பா? திரைக் காட்சியா? எதெது எவ்வெவ்வளவில் உபயோகப் படவேண்டும்? ஒரு நடிகர் நாடக மேடையைச் சங்கீத மண்டபமாக மாற்றிவிடுகிறார். மற்றொருவர் மருந்துக்கும் பாடமாட்டேன் என்கிறார். பின்னுமொருவர் வெட்டிப் போட்டாலும் சுட்டிக்காட்ட மாட்டேனென மறுக்கிறார். நியாயம் எது ஐயா? திருநெல்வேலியிலே, காயகசிகாமணி ஸ்ரீ முத்தையா பாகவதர் முதலிய பிரமுகர்கள் நாடக மேடையைச் சீர்திருத்துவதென்று ஆரம்பித்து முதல் நாடகம் நடித்த பிறகு ஏன் இரண்டாவது நாடகம் நடிக்கவில்லை?

இதுபோன்ற பல கேள்விகள் ஜனங்களின் மனதை யுறுத்திக் கொண்டிருக்கின்றன. இவைகளைத் தெளிய வைத்தல் கடமையாகும்.

அறிவு புகட்டலே நாடக லட்சியம். மனிதன் பொறி, புலன்களுக்குள் அகப்பட்டவனாதலின், அவைகளின் வழியேதான் அவன் அறிவை வளர்க்கவேண்டும். அதனாலேயே, இந்த நாடகத்திற்கு உபகரணங்களாகக் காட்சி யின்பம், இசை யின்பம் முதலியவைகள் கையாளப்படுகின்றன. ஆகவே, லட்சியத்தைக் கவிழ்க்காமல், வேண்டிய அளவுக்கு உபகரணங்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டும். ஏதாவது ஒன்று மிதமிஞ்சி விட்டாலும், லட்சியம் மறந்து போக ஹேதுவாகிவிடும்; நடிப்பும் அரோசகமாகப் பரிணமிக்கும்.

ஆகவே, நாடகத்தின் உயர்ந்த பிறப்புக் கேற்ப, அதன் நவீன ஆதர்சமும் அமைந்துவிட்டது. நாடகம் என்பது அதன் பாத்திரங்கள் அணியும் வேஷமல்ல; அவர்கள் வெளிப்படையாகச் செய்யும் காரியங்களுமல்ல. ஆனால் அவைகளினூடே நீரோட்டம் போல் மின்னிச் செல்லும் ஆத்ம சலனமே (march of soul phase) யாகும்—ஆதலின் ஒருவிதமான லட்சணக் கேட்பாடும், இந்த ஆதர்சத்தின் காரணமாக, நாடகத்தைக் கட்டுப்படுத்தாது. ஆதர்சத்துக் கேற்றவாறு பழையன புதுப்பிக்கப்படும்; புதியன உற்பத்தி செய்யப்படும். லட்சியம், ஆதர்சம் இரண்டும் நாடகத்தைத் தன் வழி இழுத்துச் செல்லும். ஆகவே, செய்யுள் நாடகங்கள் பண்டிதர்களுக்கு உபயோகப்படும்; உரை நாடகங்கள் பாமரர்களுக்கு உதவும்; திரைக் காட்சிகள் குழந்தை மனத்தைக் களிப்பிக்கும். இதுதான் உண்மை.

கதரை அணியுங்கள்

பொருளாதாரமும் இதர சாஸ்திரங்களும்

(திருச்சி கே. வீ. எஸ். வாஸ்)

பொருளாதாரம் என்பது தத்வம், கணிதம், ராஜீயம், முதலிய பல சாஸ்திரங்களில் ஒன்றாகும். ஆனால் மற்றவைகள் தங்களுக்குட்பட்ட வரையைக் கடக்காதிருக்கப் பொருளாதாரமோவெனில் இதர சாஸ்திரங்கள் எல்லாவற்றையும் தழுவி நிற்கின்றது. இங்கு பொருளாதார சாஸ்திரத்திற்கும் மற்ற சாஸ்திரங்களுக்குமுள்ள சம்பந்தத்தைச் சிறிது கவனிப்போம்.

முதன் முதலாக சாஸ்திரம் எனில் மனிதனுக்கு ஓர்விதப் புதிய தத்துவத்தைப் போதித்துக் குறிப்பிட்ட மார்க்கத்தில் பயனை யளிப்பதேயாகும். ஆதலின் சாஸ்திரங்களைச் செய்பவனும், கற்பவனும், அனுஷ்டித்து வருபவனும் மனிதனேயன்றி மிருகங்களிற்கெனத் தோன்றியவைகளல்ல. பொருளாதார சாஸ்திரமோ மனிதனுடைய வாழ்க்கையையே சீர்ப்படுத்துகின்றதெனில் மனிதனையே முக்கியமாகக் கொண்ட மற்ற சாஸ்திரங்களுக்கும் இதற்கும் நெருங்கிய சம்பந்தமிருத்தல் வேண்டுமென்பது கூறாமலே விளங்கும். மற்ற சாஸ்திரங்கள் மனிதனது குறிப்பிட்ட தாபத்தைத் தணிப்பதாயிருக்கப் பொருளாதாரமோ அவனது வாழ்க்கையிற் பல துறைகளிலும் புகுந்து பயனை யளிப்பதாயிருக்கின்றது.

அரசியல் சாஸ்திரம்

ஓர் நாட்டின் செல்வப் பெருக்கும், அமைதியான வாழ்க்கையும் அந்நாட்டு அரசாங்க நிலையை யொத்திருக்கின்றது. பொருள்களின் உற்பத்தியும், அவைகள் முதலாளி, கடன்காரன், தொழிலாளி, வாடகை முதலிய உற்பத்தியங்களுக்குப் பங்கிடப்படும் விதமும், ஒவ்வோர்வித அரசாங்கத்திற்கொத்தவாறு மாறுதலை யடைகின்றன. பிரிட்டன், அமெரிக்கா, ஜெர்மனி முதலிய தேசங்களைப் போன்று சுய உரிமையைப் (Private property) போற்றும் அரசாங்கங்களின் பொருளாதார நிலையும், சமதர்மக் கொள்கைகளைப் (Common ownership) பின் பற்றும் ருஷியா தேசத்தின் பொருளாதார நிலைக்கும் எவ்வளவு பேதங்கள் காணப்படுகின்றன. மனிதன் ஓர் சுயநலப் பிராணியாதலின் தன் சரீரப் பிரயாசையால் சேகரித்த பொருளைத் தானே யனுபவிக்கப் பூரண சுதந்திரத்தை யரசாங்கமளிப்பின் உற்பத்தி விஷயத்தில் மேலும்மேலும் அவனது ஊக்கம் பெருகுகின்றது. சமதர்மக் கொள்கைகளை யாதரித்துத் தனி யுரிமையைக் கண்டனம் செய்யும் அரசாங்கங்களில் உற்பத்தியிலுள்ள ஊக்கம் குன்றுவது மனித சுபாவமே. ஆதலின் பொருளாதார சாஸ்திரத்தின் முக்கிய இரு பாகங்களான உற்பத்தி (Production) பங்கிடல் (Distribution) இவ்விரண்டும் அரசாங்கத்தின் நிலையை யொத்திருக்கின்றதென விளங்கிவிட்டதல்லவா?

இதுவோர் புறமிருக்க அரசாங்க நிலை பொருளாதாரத்தால் எவ்வித மாறுதல்களை யடைகின்றதெனக் கவனிக்கப் புகுங்கால் ஆடு மாடு மேய்ப்பதையே தொழிலாக வுடைய சமூகமும், விவசாயம், கைத்தொழில் இவைகளில் விருத்தியடைந்த சமூக வாழ்க்கையின் அரசாங்கமும் எவ்வளவு பேதப்படுகின்றது எனக் கூறாமலே விளங்கும். பொருளாதாரம் அதிக விருத்தியடையாதிருந்த பண்டைக் காலத்தில் (மனிதன் தன் வயிற்றை வளர்க்க வேண்டி உணவைத் தவிர மற்ற எவ்விதப் பொருளையும் நாடாதிருந்த காலத்தில்) அரசியல் நிர்வாகம் இருந்த நிலையிலா கைத்தொழில், விவசாயம் முதலிய பல துறைகளிலும் முன்னேற்ற மடைந்த சமூகத்தின் நவீன அரசாங்கங்களிருக்கின்றன. ஜனங்களின் விருப்பம் அதிகரிக்க அதிகரிக்கப் பொருளாதார சாஸ்திரமும் வளர்ச்சி யடைகின்றது. அதையொட்டி அரசாங்கத்தின் கடமையும் அதன் நிர்வாகமும் பெருகுகின்றது. ஆதலின் பொருளாதார சாஸ்திர வளர்ச்சியே அரசாங்க சாஸ்திர வளர்ச்சிக்கு முக்கியக் காரணமாக இருக்கின்றது.

இவைகளைத் தவிரப் பல பொதுஜன நிர்வாகங்களிலும் இவ்விரு சாஸ்திரங்கள் பிரத்யேகமாகத் தங்கள் சட்டங்களை யேற்படுத்தி ஓர்வித மாறுதலையுண்டாக்குகின்றன. சுதந்திர வியாபாரம் (Monopoly), புகை வண்டித் தொடர் நிர்வாகம் (Railways), நீர்ப்பாய்ச்சல் (Irrigation), காட்டிலாகா (Forestry), ஆக்கல் அழித்தல் (Production and Consumption), உற்பத்திக்கு அவசியமான அங்கங்களுள் பங்கிடுதல் (Distribution) இவைகள் பிரதானமாகப் பொருளாதார சாஸ்திரத்திற்குட்பட்டவைகளே யாயினும், அரசாங்கச் சட்டங்களும் இவைகளைக் கட்டுப்படுத்தி வருவதும், அரசியல் நிர்வாகத்திற்கவசியமான பொருளை ஜனங்களிடமிருந்து வரியின் (Revenue) மூலம் அரசாங்கம் பெறுவதற்கு நாட்டின் பொருளாதார நிலையைக் கவனிக்கவேண்டியது எவ்வளவு அவசியமென்றும் ஆராயுங்கால் பொருளாதார சாஸ்திரத்திற்கும் அரசியல் சாஸ்திரத்திற்கும் எவ்வளவு சம்பந்தமிருக்கின்றதென நன்கு விளங்கும்.

சரித்திரம் (History)

பொருளாதார வளர்ச்சிச் சரித்திரம் என்ற பெயருடன் பிரத்யேகமாகப் பல நூல்களிலிருப்பதினின்றே இவ்விரு சாஸ்திரங்களுக்குமுள்ள நெருங்கிய சம்பந்தம் வெளியாகின்றது. சரித்திரம் ஓர் தேசத்தின் அரசியல் நிலையும், செல்வ நிலையும் எவ்வித மாறுதல்களை யடைந்திருக்கின்றனவென்று எடுத்துக் காட்டும் நூலேயாகும். பொருளாதார சாஸ்திரத்தையொட்டி அவ்வப்பொழுது அரசியலும், செல்வ நிலையும் மாறுகின்றதெனில் பொருளாதார சாஸ்திரம் சரித்திரத்துடன் பிணைந்துள்ளதெனச் சொல்லவா வேண்டும். ஒவ்வோர் யுத்தங்களும் முடிவடைந்தவுடன் தேசங்களின் பொருளாதார நிலை சின்னாபின்னப்பட்டு மாறுதலை யடைகின்றது. மகாயுத்தத்திற்குப் பின் தோன்றிய வியாபார மந்தமும், வேலையில்லாத் திண்டாட்டமும், நாணய நிர்வாக நெருக்கடியும், சண்டைக் கடன் அமளியும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதைப் போன்றே பொருளாதார நிலைக்குகந்தாற்போல் அரசாங்கங்களின் மனப்பான்மையும்

மாறுதலை யடைந்து சரித்திரத்தில் ஓர் தனி அத்தியாயத்தையும் எழுப்புகின்றது. அரசாங்கங்கள் அவ்வப்பொழுது புதிய சட்டதிட்டங்களை யேற்படுத்திப் பொருளாதார நிலையைச் சீர் செய்யாவிடில் அரசாங்கத்திற்கே அபாயம் நேரிடுமென்பதை யாவரும் அறிவோம். ஆதலின் ஸர் ஜான் ஸீலி என்பவர் கூறியவாறு "பொருளாதாரமே சரித்திரத்தின் வேர்; சரித்திரமின்றேல் பொருளாதார சாஸ்திரமில்லை" என்பதன் உண்மை விளங்குகின்றதல்லவா?

தர்ம சாஸ்திரம் (Ethics)

ஆக்கல், அழித்தல், பங்கிடுதல், வரி வசூல் செய்தல், நாணய நிர்வாகம் இவைகள் தர்ம சாஸ்திரத்தை யொட்டி நடக்காவிடில், எந்த அரசாங்கமும் நிலைத்திருக்க முடியாது. உற்பத்தி விஷயத்தில் இவ்வளவு தொகைதான் உற்பத்தி செய்யலாம்; இதற்கு மேல் மறுபடி உற்பத்தி செய்யின் வியாபார மந்தமேற்பட்டு சமூகம் சீர்குலைந்து போம்; வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டில் அதிகரிக்கும் என்றும், அழிக்கும் விஷயத்தில் மனிதனுக்குக் கெடுதலை விளைவிக்கக்கூடிய இவையிவைகளை உபயோகிக்கலாகாது; ஓர் சாமானை ஒருவன் ஏராளமாக உபயோகிப்பின் அதே சாமானை வேண்டும் பலருக்கு அது கிடைக்காது போய்விடுவதால் உபயோகத்தில் ஓர் முறை யிருக்கவேண்டும்; மயக்கம் கொடுக்கும் சாமான்களை யுபயோகிப்பதால் சமூகச் சண்டைகள் அதிகரிப்பதுடன் நாட்டின் செல்வம் தீய வழிகளில் செல்கின்றது, ஆதலின் அவைகளை நிறுத்தல் வேண்டும், அவைகளின் உற்பத்தியோ, இறக்குமதியோ அவசியம் வேண்டிய அளவிற்குமேல் தடுக்கப்படவேண்டும் என்றும்; பங்கிடுதல் விஷயமாகத் தொழிலாளிகளின் சிரமத்திற்கும் அவர்களது குடும்ப சம்ரக்ஷணத்திற்கும் தக்கவாறு நியாயமான சம்பளம் கொடுக்கப்பட வேண்டும், கடன் கொடுப்பவர்கள் குறிப்பிட்ட வட்டிக்குமேல் அதிகம் கேட்பது நியாயமல்ல, முதலின் (Capital) வருஷ வருமானத்தை யொட்டிக் குடிக்கூலி (Rent) நிர்ணயிக்கப்பட வேண்டியதவசியம். முதலாளிகள் அதிக இலாபத்தைக் கருதி ஏழைக் குடிகளுக்கு அவசியமான பொருள்களின் உற்பத்தியைக் குறைத்து விலையை யதிகமாக்குவது அனியாயம் என்றும் தர்ம சாஸ்திர நிர்ணயப்படி பொருளாதார சாஸ்திரம் மாறுதலடைகின்றது.

இதைப்போன்றே நாணய நெருக்கடி காலங்களிலோ அல்லது அரசாங்கத்திற்குப் பணம் தேவையா யிருக்கும் காலங்களிலோ நாணய நிர்வாகத்தினர் தங்கள் இஷ்டம்போல் பொழக்கத்திலுள்ள நாணயத்தின் தொகையைக் கூட்டியும் குறைத்தும் செய்வதால் விலைகள் திடீரென மாறுதலை யடைந்து சமூகத்தைச் சின்னபின்னப் படுத்துகின்றன. வரி வசூல் சம்பந்தமாக அரசாங்கத்தினர் ஏழைக் குடிகளை யதிகம் உபத்திரவம் செய்வதோ, ஜனங்களின் கஷ்ட காலங்களில் அவர்கள் உதிரத்தை உறிஞ்சுவதுபோல் பலாத்காரமாய் வரி வசூல் செய்வதோ தவறாகும். இவ்விதப் பொருளாதார விஷயங்களிலும் தர்ம சாஸ்திரம் தன் சட்டங்களினால் கட்டுப்படுத்துகின்றது. தவிர பொதுஜன மனம் (Mass Mind) போகும் வழியில் பொருளாதாரத்தை அடிக்கடி மாற்றவேண்டி வரலாம்.

கணிதம் (Arithmatic)

பொருளாதார சாஸ்திரத்திற் பிரதான பாகமான நாணய நிர்வாகத்திலும், வரி வசூல் விஷயங்களிலும் கணிதம் எவ்வளவு உபயோகமாயுள்ளது என்பதை நாம் யாவரும் அறிவோம். இருபதாம் நூற்றுண்டில் பொருளாதாரத்தில் கணித சாஸ்திரத்தின் உதவி மேலும் மேலும் அதிகரிக்கப்பட்டு பிஷர் (Fisher), பிகூ (Pigou), காஸல் (Cassel) முதலிய பிரபலப் பொருளாதார ஆசிரியர்கள் கணிதப் பொருளாதாரம் (Mathematical Economy) என்ற தனிமையான ஓர் சாஸ்திரத்தையு மேற்படுத்தி யுள்ளனர். இதின்மூலம் இதற்குமுன் அளவிடவியலாதெனக் கருதியிருந்த பல பொருளாதாரத் தத்துவங்களை கட்டங்கள் மூலமாயும் (Graphs), எழுத்துக் குறிப்புகள் (Symbols) மூலமாயும் அளவிட முயற்சி செய்து சித்திபெற்றிருக்கின்றனர். வரை விருப்பம் (Marginal Utility) உபயோக அதிவிருப்பம் (Consumers surplus) நாணயத் தொகைத் தத்துவம் (Anxitity Theory of Money) முதலிய பொருளாதாரத் தத்துவங்கள் கணிதக் குறிப்புகளிலேயே கூறப்படுகின்றன. பொருளாதார சாஸ்திரத்தைச் சீர் செய்து புத்துயிர் கொடுத்த பிரபல ஆசிரியர் டாக்டர் மார்ஷல் கணித வழியையே அதிகமாகப் பின்பற்றியுள்ளார். கணித வழியைப் பொருளாதாரத்திற்கு உபயோகிப்பது சரியல்லவென மில் (Mill), கார்னேஸ் (Cairnais), க்லிப்பீ (Cliffe), லெஸ்லீ (Leslie) முதலிய சில பொருளாதார சாஸ்திரிகள் கண்டிப்பினும் பிகூ (Pigoue) போன்றவர்கள் "பொருளாதாரம் ஓர் சாஸ்திரமாயின் அது கணித சாஸ்திரமே" என்று தீவிரமாய்க் கூறுகின்றனர்.

இயற்கை சாஸ்திரம்
Physics and Chemistry

நூதன இயந்திரம் கண்டு பிடிக்கப்படுவதாலோ அல்லது புதிய தாதுக்கள் கண்டுபிடிக்கப் படுவதாலோ பொருளாதார நிலை திடீரெனப் பெரும் மாறுதலை யடைகின்றது. எலெக்ட்ரிஸிடி, க்ளோரீன், இரயில் பாதைகள், கப்பல்கள் இவைகள் கண்டு பிடிப்பதற்கு முன்னிருந்த பொருளாதார நிலையா தற்காலமும் இருந்து வருகின்றது?

இதைத் தவிரப் பயிர்களுக்கு வேண்டிய எருக்களை இயற்கைப் பொரு[illegible] கொண்டு ஸயன்ஸின் மூலம் செய்[illegible] உபயோகிப்பதால் நாட்டின் தானிய[illegible] செல்வம் அதிகரிக்கின்றது. வியாபாரம் விருத்தியடைந்து பொருளாதார நி[illegible] புதிய நிலைக்கு மாறுகின்றது.

மேலும் இயற்கை சாஸ்திர சட்ட[illegible]களில் பல பொருளாதார சாஸ்திர[illegible]தில் அனுஷ்டிக்கப்பட வேண்டிய அவ[illegible]சியமும் ஏற்படுகின்றது. குறை வருமானம் (Diminishing Returns) போன்ற பிரதானப் பொருளாதார சட்டங்கள் இயற்கை சாஸ்திர சட்டங்களே யாகும்.

ஆகவே பொருளாதார சாஸ்திரம் தனிப்பட்டதோர் தத்துவமாயினும் பிற சாஸ்திரங்களின் தத்துவங்களினால் சில மாறுதலை யடைந்தும், சில சமயங்களில் பிற சாஸ்திரங்களைத் தன் பக்கமாக மாற்றியும் எல்லா சாஸ்திரங்களுடனும் நெருங்கிய சம்பந்தத்[illegible] கொண்டிருக்கின்றது. வாழ்க்கைக்[illegible] இன்றியமையாததும், சகல சாஸ்திரங்களுக்கும் நெருங்கிய சம்பந்தம்கொண்டதுமான இப்பொருளாதார சாஸ்திரம் கூர்ந்து படிக்கப்பட்டால் எவ்வளவு ருசிகரமானதாக இருக்கவேண்டும்.

பவுன் செடி

(தி. ஜ. ர. எழுதியது)

அடுத்த வீட்டுச் சொர்ணத்துக்குக் குழந்தை ராதாவைக் கண்டால் வெகு ஆசை. தினம் மூன்று நான்கு தடவை, ராதாவைத்தூக்கிக் கொண்டு போய் விடுவாள். இன்று தினமும் அவளைத் தவிர, வேறு யார் தூக்கிக் கொண்டு போயிருக்கப் போகிறார்கள்?

"ராதாவுக்குக் காப்பி கொடுத்தாய் விட்டதோ?" என்றார் சாமிநாதன்.

வெற்றிலைத் தாம்பாளத்தை மேஜை மீது வைத்துக் கொண்டே முகத்தில் ஒரு சுளிப்புடன் கலந்த புன்சிரிப்போடு அவர் மனைவி கூறலானாள்: "அது என்ன, சேர்ந்தாற்போல் அரைமணி நேரம் வீட்டிலிருக்கமாட்டேன் என்கிறது" என்றாள்.

ராதாவுக்கு வயது மூன்று நிறையவில்லை. பேசத் தெரியாது. கொஞ்சம் கொஞ்சம் சமிஞ்ஞை தெரியும். அரையும் குறையுமாக ஒரு உளறல் மாத்திரம் இப்பொழுது வர ஆரம்பித்திருக்கிறது. தானாக நடந்து அடுத்த வீட்டுக்கு அவள் போகமாட்டாள். சொர்ணம் தான் எடுத்துக்கொண்டு போயிருக்கவேண்டும். என்றாலும், "ராதா வீட்டிலிருக்க மாட்டேன் என்கிறது" என்றுதான் அவளுடைய தாய் சொல்லுகிறாள். ஊரிலுள்ளவர் செய்ததையெல்லாம் ராதா செய்ததாகச் சொல்லுவதில் அவளுக்கு ஒரு சந்தோஷமா? இல்லை. அவளுக்கு அப்படித்தான் தோன்றுகிறது. அவள் என்ன செய்வாள்?

"சரி; குழந்தையைப் போய்ப் பார்?"

சாமிநாதனின் மனைவி தங்கம் "நல்ல வேலை இது!—தெருவெல்லாம் நான் சுற்ற மாட்டேன். வரபோது வரட்டும்" என்று தலையைப் பலமாக அசைத்துக்கொண்டு திரும்பினாள்.

"பின் யார் போய்ப் பார்ப்பது? அந்த ஏழை வேலைக்காரியையும் துரத்தியாகிவிட்டது" என்றார் சாமிநாதன்.

படம் எடுத்த சர்ப்பம்போல ஒரு சுற்றுச் சுற்றித் திரும்பிக் கம்பீரமாக நின்ற தங்கம் "வேலைக்காரியா அவள்? திருட்டுச் சிறுக்கி— பச்சைக் குழந்தையின் கழுத்தில்போட்ட பவுன் காசைத் தஸ்கரம் செய்துவிட்டாள்! கிராதகி. அவள் வேறே எதைத் தூக்கிக்கொண்டு போனாலும் பொறுத்துக் கொண்டிருப்பேன். பச்சைக் குழந்தை...." என்று அடுக்கிக் கொண்டே போனாள்.

சாமிநாதன் 'கல, கல'வென்று சிரித்தார். தங்கத்துக்கு ஆத்திரம் அதிகமாயிற்று.

"என்ன சிரிப்பு, நாசமாய்ப்போகிற சிரிப்பு! அந்தப் பரட்டை திருடியிருக்கமாட்டாள் என்றே இன்னும் நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். அந்தக் கழுதையை ஜெயிலில் போட்டிருக்கவேண்டும். நமது வீட்டில் செய்தது போதாதா? இன்னும் யார் வீட்டிலாவது செய்யவேண்டுமென்று விட்டுவிட்டீர்கள்" என்றாள் தங்கம்.

"நான் விட்டுவிட்டேனா? நான் வருவதற்குமுன் நீயே துரத்திவிட்டாயே. நான் இருந்தால் அவளை இப்படி அனுப்பியிருக்க மாட்டேன். அந்த ஏழைப் பரட்டை ரொம்பப் பயந்தவள்; சாது. பவுனைக் கொண்டுபோய் அவள் என்ன செய்வாள்?"

"ரொம்ப சரி" என்று அழுத்தந் திருத்தமாய்ச் சொன்ன தங்கம், "வெளியே போய்த் தேடிக் கண்டு பிடித்து ஒரு பல்லாக்கு வைத்து வேண்டுமானால் அழைத்து வாருங்களேன்" என்றாள்.

"பல்லாக்கு அவளுக் கெதற்கு? அது உனக்கும் எனக்குந்தான் வேண்டும். அவள் நடந்து வருவாள். அதில் ரொம்பச் சந்தோஷமாயும் வருவாள்."

இதற்குமேல் தங்கத்தினால் தாள முடியவில்லை. "நீங்கள் புரொபஸர்; சித்திரமாய்ப் பேசுவீர்கள். இதுக்கெல்லாம் பதில் சொல்ல என்னால் முடியுமா?" என்று சொல்லி அப்பால் போய்விட்டாள்.

ராதாவின் கழுத்திலிருந்த தங்கப் பவுன் காணாமற்போன தென்னவோ வாஸ்தவம். சாமிநாதன் ஒரு புரொபசர் என்பதும் நிஜந்தான். சரித்திரத்தை விடத் தருக்க சாஸ்திரத்தில் அவருக்கு ஒரு பிரியம். தான் பள்ளிக்கூடத்துக்குப் போயிருந்த சமயத்தில் பவுன் காசு காணாமற் போனது, பரட்டையை மனைவி துரத்தியது ஆகிய இரண்டு சம்பவங்களும் நடந்துவிட்டன. பவுன்காசு காணாமற் போனதை எப்படி, எப்பொழுது, எந்த இடத்தில் மனைவி கண்டுபிடித்தாள் என்பதை, ஸ்காட்லாண்டு யார்டு துப்பறியும் உத்தியோகஸ்தரைப் போல் விசாரித்துப் பார்த்தார். மனைவி படபடவென்று பதில் சொன்னாளே தவிர, துப்புத் துலங்க ஒரு வழியையும் காணோம். "பரட்டை திருடியிருக்க மாட்டாள்" என்று மாத்திரம் என்னவோ அவர் மனதிற்பட்டது. அப்படியானால், யார் திருடியிருப்பார்கள்? சொர்ணத்தினிடம் சாமிநாதனுக்கு ஒரு சந்தேகம் உண்டாயிற்று. அதற்குக் காரணம் கிடையாது. சொர்ணம் சம்பந்தப்பட்ட மட்டில் அவருடைய தருக்க சாஸ்திர மூளை, காரணத்தைப் பற்றிக் கவலைப்படவுமில்லை. அந்தச் சொர்ணம்! தாம் அவளோடு சண்டைபோட வேண்டுமென்று கூட அவருக்குத் தோன்றிற்று. நாற்காலியில் உட்கார்ந்தபடியே—அது சுழல் நாற்காலி—இரண்டு மூன்று பிரதட்சிணம் செய்த வண்ணம் ஏதோ யோசித்துக் கொண்டிருந்தார்.

அடுத்த வீட்டுச் சொர்ணம் ராதாவைக் கொண்டு வந்துவிட்டு, "அதோ பார், உன் அப்பா" என்று நகைத்துக் கொண்டே சுட்டிக் காட்டினாள். ஒரு நாணம், அதில் ஒரு நகைப்பு—இரண்டோடும் மின்னலைப் போல் சாமினாதனை ஒரு பார்வை பார்த்துவிட்டு, "குழந்தையைப் பார்த்துக்குங்க, ஐயா", என்று சொல்லி, மருள்கொண்ட மான் போல் துள்ளிக் குதித்து ஓடிவிட்டாள் சொர்ணம்.

சண்டைபோடத் தயாராயிருந்த சாமினாதன், சொர்ணத்தை நேரே கண்டபோது, வாய் திறவாமல் ஊமையாயிருந்தார். வெட்கமா, பயமா, மனஇளக்கமா—அது என்ன? அவருக்கே தெரியவில்லை.

இன்று மாத்திரமல்ல; ஏறக்குறைய ஒரு வாரத்துக்குமேல் ஆகிவிட்டது. வழக்கம் போலச் சொர்ணமும் வந்து கொண்டும் போய்க் கொண்டும் தான் இருக்கிறாள். ஒருநாள்கூடச் சொர்ணத்துடன் சண்டைபோடச் சாமினாதனுக்கு மனந்துணியவில்லை. அது மாத்திரமல்ல; சொர்ணத்தைக் கண்ணால் பார்ப்பதைக்கூட நிறுத்திவிட்டார். அதில் என்னவோ அவருக்கு ஒரு பயம் உண்டாகி விட்டது. ஆனால், சொர்ணத்தைப் பற்றி என்னென்னவோ இவ்வளவு யோசனைகள் அவர் மனத்தில் உதயமாயிற்றே, எதையாவது மனைவியிடம் சொல்லலாமே, சொல்லவே யில்லை. அது ஏதோ ஓர் குற்றம் போல் அவர் மனத்தில் ஒரு உணர்ச்சி உண்டாயிற்று.

சுமார் பத்துநாள் கழிந்திருக்கும். குழந்தை ராதா தள்ளாடித் தள்ளாடிக் கொண்டு உள்ளே ஓடிவந்தாள். உள்ளே கூடத்தில் சாமினாதன், தங்கம் இருவரும் சிரிப்பும் கேலியுமாய்ப் பேசிக் கொண் டிருந்தார்கள். "அட செல்லக் குஞ்சு!—எப்படித் தனியாய் வந்தது?" என்று கையில் ராதாவை வாரியெடுத்த தங்கம், ஆர்வத்துடன் முத்தமிட்டுக் கொண்டாள்.

ராதாவோ கீழே கையைக் காட்டி இறங்க வேண்டுமென்று சமிஞ்ஞை செய்து கத்தினாள். இறக்கி விட்டாயிற்று.

தங்கத்தின் சேலை முந்தானையைப் பிடித்து இழுத்துக்கொண்டு, "ஓ!-ஓ!" என்று மறுபடியும் கத்தியதுடன், உருப்புரியாமல் ஏதோ உளறிக் கொட்டினாள்.

"எங்கேயோ கூப்பிடுகிறாள்!" என்று தங்கம், கூடவே போனாள். சொர்ணத்தின் வீட்டுக்குத்தான். உள்ளே போயாயிற்று. அங்கு நிற்கவில்லை. கொல்லைப் பக்கம் அழைத்துச் சென்றாள். சொர்ணம் இதைப் பார்க்கவில்லை. அவள் சமையலறையில் ஏதோ வேலையாயிருந்து விட்டாள்.

வீட்டுப் புறக்கடையில் குப்பை மேட்டுக்குப் பக்கத்தில் சொர்ணத்தின் மகன்—ஆறு, ஏழு வயதுடைய மாணிக்கம்—குனிந்து உட்கார்ந்திருந்தான். அவனுடைய முப்பத்திரண்டு பல்வரிசையும் தெரியும்படி குதூகலத்தோடு, "அது முளைச்சிடுச்சு—அங்கச்சிதான் போட்டுச்சு—நான்தான் உங்களைக் கூட்டிவரச் சொன்னேன்—பாருங்கம்மா" என்று, ஏதோ ஒரு முளையைக் கையால் தொட்டுக் காட்டினான், "என்னவோ குழந்தை விளையாட்டு" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்ட தங்கம், "இது என்ன செடி, அப்பா?" என்று கேட்டாள்.

"ஓ! அது காசு காய்க்கப் போகுது. நல்லா முளை விட்டிடுச்சு" என்றான் மாணிக்கம்.

தங்கத்துக்குச் சட்டென்று ஒரு சந்தேகம் தோன்றிற்று. அந்த முளையிருந்த இடத்தைக் கையினால், கல்லிப் பார்த்தாள். நினைத்தபடி, காணாமற் போன பவுன் அகப்பட்டு விட்டது!. தங்கத்துக்குப் பரம சந்தோஷம். பத்து வயதுச் சிறு பெண்ணைப் போல, ராதாவை இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டு, இரண்டெட்டில் வீட்டிற்கு ஓடி வந்தாள். சாமிநாதனிடம் பவுனைக் காட்டினாள். இரைக்க இரைக்க அரை அரை வாக்கியமாய் நடந்த சங்கதியைச் சொன்னாள்.

அந்த இரைப்போடு இரைப்பாக "பாவம்!—அந்தப் பரட்டையைத் துரத்தி விட்டோம்.— அவள்தான் வந்து உங்களையாவது பார்க்கப் படாதோ—" என்றாள்.

"ஆஹா! வந்து பார்க்க மாட்டாளோ? எங்கே வேலை கிடைத்ததோ அல்லது பிச்சை பெடுத்துச் சோற்றுக் குத்தான் அல்லாடுகிறாளோ" என்றார் சாமினாதன்.

தங்கம் அழாக்குறை. "என்னைக் கண்டால் ஏன் உங்களுக்குக் கரிப்பாயிருக்கிறது? நான் என்ன செய்வேன். அந்த அசட்டுப் பரட்டை வந்தால்,—" என்று சொல்லி முடிக்குமுன், சொர்ணம் அங்கு வந்து சேர்ந்தாள்.

வழக்கம் போன்ற அன்ன நடைதான்; மின்னல் பார்வைதான்; குறும்பு நகைப்பும் தளுக்கு நாணமும் கூட உண்டு.

"ராதா இங்கே வந்திடுச்சா? நான் அங்கெல்லாம் தேடிக்கிட்டிருக்கேன்" என்றாள் சொர்ணம்.

சாமினாதன் அவளை ஒரு முரட்டுப் பார்வை பார்த்து விட்டு, ருத்ரன் போல் முகத்தைக் கடுத்து, "இந்தா, இனிமேல் இந்தப் பெண்பிள்ளையை இங்கே வரவிடாதே—" என்று கத்தினார்.

இடி கேட்ட நாகம்போல் ஒடுங்கிய சொர்ணம் பதில் சொல்லாமல், பூனை போல் நடந்து வெளியே போய்விட்டாள். சாமினாதன் கோபத்துக்கு அவள் காரணம் கேட்கவில்லை. ஆனாலும், அது நியாயம் தான் என்று அவள் உணர்ந்தது போல் தோன்றிற்று அவள் நடந்து கொண்ட பாவனை. அன்று போனவள் தான்; அப்புறம் அவள் இந்த வீட்டுப் பக்கம் திரும்பிப் பார்க்கவே யில்லை.

அவள் காரணம் கேட்டிருந்தால் தான் என்ன? தங்கம் பின்னால் எத்தனையோ தடவை வேடிக்கையாகவும் கேலியாகவும் வினயமாகவும் கேட்டுப் பார்த்தாளே; சாமினாதனால் அவரது அந்தக் கோபத்துக்கு என்ன காரணம் சொல்ல முடிந்தது? என்னவாவது சொல்லிச் சிரித்து மழுப்புவார்; அல்லது ராதாவை எடுத்துப் பெரு மூச்சுடன் கொஞ்சி இரண்டொரு முத்தம் கொடுத்து, "நம் கண்ணு! பவுன் செடி முளைக்கப் போட்டு விட்டது, பவுன் பவுனைக் காய்க்க! நமக்கென்ன குறை?" என்று நகைத்து, பேச்சை மறக்கடிப்பார்.

Have your Majestic
FIGURE
A. R. DASEN STUDIO.
The Best
ELECTRIC PHOTO ARTISTS
No. 55 RATTAN BAZAAR ROAD MADRAS
STUDIO HOURS 8 A.M to 8 PM

பதில் நகை

(“ராஜாத்தி”யின் கடிதம்)

எனது பிரிய ரங்கம்,

ஏறக்குறைய ஒரு மாத காலத்துக்குப் பிறகு, மறுபடியும் இப்பொழுது தான் கடிதம் எழுத சௌகரியப்பட்டது. நீதான் ஏதாவது ஒரு கடிதம் எழுதப்படாதோ; நான் அரைச்சோம்பேறி என்றால், நீ முழுச்சோம்பேறியாயிருக்கிறாய். அது போகட்டும்.

நாம் போன மாதம் சந்தித்தபோது, நான் ஒரு விஷயம் சொன்னேனே ஞாபகமிருக்கிறதா? நீ எங்கே நினைவில் வைத்திருக்கப் போகிறாய். சில விஷயங்கள் சிலருக்குச் சின்னவை போலிருக்கின்றன; வேறு சிலருக்குப் பெரியவையாயிருக்கின்றன. நான் சொன்னதை நீ அப்போதே வெகு அலட்சியமாய்க் கேட்டாய். நான் ஞாபகப் படுத்துகிறேன்.

மகாத்மா காந்தி வந்தபோது ஒரு சங்கதி நடந்தது; நீ அதைப் பற்றிப் பேசி விழுந்து விழுந்து நகைத்தாயே —இப்போதாவது நினைவுக்கு வருகிறதா? சீமாட்டி சுந்தரியைப் பற்றித்தான் குறிப்பிடுகிறேன்.

கடற்கரை, கோயில், மகாநாடு ஆகிய இடங்களுக்குப் போனால், உச்சி முதல் உள்ளங்கால் வரையில் நகைகள் போட்டுக்கொள்ள வேண்டும்; காந்தியைப் பார்க்கப் போனால், வேறு வேஷம். நகைகளையெல்லாம் கழற்றி விடவேண்டும். ஒரே ஒரு காப்புமாத்திரம் தரிக்கலாம். இந்த வேலையைச் சுந்தரியம்மாளும் செய்தாளல்லவா? காந்தியைத் தரிசிப்பதும் ஒரு சடங்கு! சுந்தரி இந்த வேஷம் போட்டதைப் பற்றி நாம் நகைத்தோம்.

சுந்தரி அந்த ஒரு ஜோடி காப்பையும் கழற்றி, காந்தியிடம் ஹரிஜன சேவைக்குக் கொடுத்து விட்டாள். காந்தி பதில் நகை செய்து போட்டுக் கொள்ளக் கூடாதென்று உறுதி வாங்கிக் கொண்டார். இந்த ஜோடிக்குப் பதில் செய்து போட்டுக்கொள்ளாமலே, இன்னும் பதினைந்து ஹரிஜன சேவைக்குச் சமர்ப்பிக்க அந்த அம்மாளிடம் நகைகள் உண்டு என்பது அந்த மகானுக்கு எப்படித் தெரியும்? அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை.

ஆனால், அந்த ஒரு ஜோடி காப்புப் போனதைக்கூடச் சுந்தரியால் சகிக்க முடியவில்லை. அதற்குப் பர்த்தி செய்து கொள்ள ஏற்பாடு செய்துவிட்டாள். காந்திஜீயிடம் கொடுத்த வாக்குப் பிறழவில்லையே என்றுதான் அவள் சொல்லுகிறாள். ஏனென்றால், அவள் காப்புச் செய்துகொள்ள வில்லையாம்; கொலுசு செய்யத்தான் ஏற்பாடு செய்திருக்கிறாளாம்!

பல்லாயிரம் வருஷக் கணக்காகச் சம்பாதித்துக் கொண்ட சில குணங்களைப் பெண்கள் எப்படித் திடீரென்று போக்கமுடியும்? நான் அதை மறக்கவில்லை. பெண்களுக்குச் சில விசேஷ குணங்கள் இருக்கின்றன. அவற்றை அடியோடு மாற்றிவிட முடியுமா? சகல விதத்திலும் ஆண்களும் பெண்களும் சமமாகிவிட முடியுமா? இந்தக் கேள்விகளைப் பற்றி நான் சிந்திப்பதும் கிடையாது; சிந்தித்தாலும் அறுதியான முடிவு கட்டவும் என்னால் முடியாது என்பதை நான் அறிவேன். ஆனால் உள்ள நிலைமையில், அநேக அம்சங்களில், ஸ்திரீகளும் மனித வருக்கத்தைச் சேர்ந்தவர்களாக மதிக்கப்படுவதற்கு வேண்டிய மாறுதல்கள் வேண்டியிருக்கின்றன என்பதுதான் என் கட்சியெல்லாம். ஆகையால், ஸ்திரீகளுக்கு நகைப் பைத்தியம் இயற்கைக் குணமாயிருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொண்டால், ஏதோ முன்னுக்குப் பின் முரணாய்ப் பேசுவதாய்க் குற்றம் கண்டு பிடிக்காதே.

புருஷர்களைவிட ஸ்திரீகளுக்கு அழகுச் சுவை அதிகம் என்பது என் கருத்து. ஆனால், அதைக் கெடுப்பது வேறு சில குணங்கள். எப்பொழுதும், அடுத்த வீட்டுக்குத் தாங்கள் தோற்கக்கூடாது என்ற ஒரு வீண் பெருமை பெரும்பாலும் ஸ்திரீகளுக்கு இருக்கிறது. இதனால், வெகு சீக்கிரம் பெண்களிடம் 'இமிடேஷன்' வழக்கங்கள் பரவி விடுகின்றன.

சுந்தரி எதற்காகத் தாங்கமுடியாத நகைகளைப் போட்டுச் சுமக்கவேண்டும்? அழகு என்பது அடுக்கடுக்காய் நகை போட்டுக் கொள்ளுவதிலா இருக்கிறது? கச்சிதமாக ஒன்றிரு சிறு நகைகளை அணிவதால், முகத்தில் ஒரு களை அதிகரிக்கக் கூடும். ஆனால், சுந்தரி அழகைப் பற்றிக் கவனிக்கவில்லை. தன் குடும்பத்தின் செல்வத்தை உலகத்திற்குத் தண்டோராப் போடும் சாதனமாகவே அவள் நகைகளைத் தரிக்கிறாள்.

சுந்தரி எதற்காக, அந்த ஒரு ஜோடி காப்பைக் காந்திஜீயிடம் சமர்ப்பித்தாள்? காந்திக்கு மன மாறுதலே பெரிது. சுந்தரிக்கு மன மாறுதல் ஏற்பட்டு விட்டதென்று சொல்லமுடியுமோ? அப்படியானால், பதில் நகை செய்துகொள்ள அவள் ஏன் முயற்சிக்கவேண்டும்? உண்மையில் மன மாறுதல் அல்ல. அநேகம் பெண்கள் செய்தார்கள்; தானும் செய்யவேண்டும். இது ஒரு ஆசை. இதையெல்லாம் நாம் பகிரங்கமாகச் சொன்னால் நம்மீது கோபம் உண்டாகும்.

ஆனால், ஒரு சுந்தரி மட்டிலுமல்ல; இன்னும் எத்தனையோ பெண்கள்—எல்லாருமல்ல—இந்த மாதிரி செய்து கொண்டிருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். இது அந்த மகான் காதில் மாத்திரம் விழுந்தால், அவருக்கு என்னவாயிருக்கும்?

உனது அன்புள்ள,
ராஜாத்தி.

மகாத்மா காந்தி எழுதியவை

	ரூ.	அ.	பை.
இல்லறமும்			
பிரும்மசரியமும்	0	6	0
மகா தியாகம்	0	4	0
அனாசக்தி யோகம்	0	4	0
ஹிந்து தர்மம்	0	2	0
கீதா போதனை	0	2	0
உத்தம வாழ்க்கை	0	2	0
ஆரோக்கிய வழி	0	4	0
நீதி தர்மம்	0	2	0
சத்திய சோதனை			
முதற் பாகம் ...	1	8	0
சத்திய சோதனை			
இரண்டாம் பாகம்	2	0	0

சுதந்திரச்சங்கு புத்தகசாலை,

திருவல்லிக்கேணி, சென்னை.

அன்பு—ஓர் மின்சாரம்

(சக்கரவர்த்தி ராஜகோபாலச்சாரியார்.)

[அன்பும் சக்தியின் ஓர் ரூபமே என்பதை ராஜாஜி பல எளிய உதாரணங்களுடன் அழகாக விளக்குகின்றார். Chats Behind Bars என்ற நூலிலிருந்து இது மொழி பெயர்க்கப் பெற்றுளது.]

உங்கள் மனம் சூரிய சந்திர நட்சத்திரங்களையும்கூட எட்டிப்பிடிக்கவேண்டும். அப்பொழுதுதான் சத்தியத்தை நீங்கள் அறிந்துகொள்ளுவீர்கள். உங்கள் திருஷ்டியை நீங்கள் குறுக்கிக்கொண்டீர்களானால், மேலுக்குச் சத்தியம்போலப் பகட்டிக்கொண்டிருக்கும் அசத்திய மாயைகளுக்குள்ளேதான் அகப்பட்டு உழலுவீர்கள்.

எந்த விஷயத்தைப்பற்றி நாம் சர்ச்சை செய்தாலும் ஓர் பணிவு உணர்ச்சி நமக்கு வேண்டும். இவ்வகிலப் பிரபஞ்சத்தின் இரகசியங்கள் குறித்து மனிதவருக்கம் தெரிந்துகொண்டிருக்கும் ஞானத்தையெல்லாம் ஒன்றாய்த் திரட்டிப் பார்த்தாலும் அது மிகவும் அற்பமான ஓர் அணுவே யாகும்; ஒரு மனிதனுடைய ஞானமோ அந்த அணுவுக்குள் ஓர் அணுவாகும்.

உலகத்தை நாம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். ஒன்று, சடம்; மற்றது, சக்தி. சடம் பல உருவங்களைத் தாங்குகின்றது என்பது உங்களுக்குத் தெரியும். சக்தியும் அநேகவித ரூபங்களைத் தரிக்கின்றது. இயந்திர சக்தி என்பது ஒருவகை. நீங்கள் ஒன்றைத் தாக்குகிறீர்கள்; ஒன்றை அழுத்துகிறீர்கள். உடனே எஞ்சின் ஒரு வண்டித் தொடரை இழுக்கிறது. நாம் சண்டை சச்சரவுகள் இடுகிறோம். இதிலெல்லாம் இயந்திர சக்தி வெளிப்படுகின்றது. ஒரு மனிதன் ஒரு வீட்டை இடித்துத் தள்ளுகிறான்; அல்லது ஒரு மனையைக் கட்டுகிறான். அவன் உபயோகிப்பதும் இயந்திர சக்தியைத்தான்.

இவ்வாறே, நாதம் என்பது சக்தியின் மற்றோர் ரூபமே. நாதம் நமது மனத்தை எட்டி, இச்சை, துக்கம், கோபம், பகைமை, அச்சம் ஆகியவற்றையும் பலவகையான எண்ணங்களையும் உண்டாக்குகின்றது. சக்தியின் அடுத்த ரூபம் வெப்பம் ஆகும். ஒளி என்பது சக்தியின் மற்றோர் உருவம். பின்னர், மின்சார சக்தி. அதன் வேறோர் ரூபம் காந்த சக்தியாகும்.

நாம் ஒவ்வொரு நாளும் நமது குடும்பங்களிலும் தினசரி வாழ்க்கையிலும் காணும் சக்தியின் இன்னோர் ரூபம் மனிதர்களின் அன்பும் பிரீதியுமாகும். இந்த அன்புதான் ஒரு மனிதனை இன்னொருவனிடம் ஒட்டிக்கொள்ளச் செய்கிறது. பகைமையும் இவ்வாறே சக்தியின் வேறோர் ரூபந்தான். ஒரு குதிரை கிழக்கேயும் இழுக்கலாம், மேற்கேயும் இழுக்கலாம். அதேமாதிரி, அன்பைப்போலவே பகைமையும் ஒரே சக்திதான். ஆனால், அவை எதிர் எதிர்ப் பக்கங்களில் இழுக்கின்றன; அவ்வளவுதான். ஒருவரிடம் ஒருவர் சிநேகமோ பகைமையோ இரண்டுமில்லாத இரண்டு மனிதர்களைவிட, பரஸ்பரம் அன்பு பூண்டிருந்த இரண்டு மனிதர்கள் சச்சரவிடும் பொழுது, ஒருவரையொருவர் மிக அதிகமாக வெறுக்கிறார்கள்.

உங்களிடம் ஒரு சண்டிக் குதிரையிருக்குமானால், அது முன்னே எவ்வளவு விசையாகப் போகிறதோ அவ்வளவு விசையாகவே பின்னாலும் உதைக்கிறது. நீங்கள் எப்பொழுதாவது ஒரு குதிரையை ஓட்டிப் பார்த்திருந்தீர்களானால், நல்ல வார்த்தை சொல்லிப் பரிவாக நடந்துகொண்டால்தான் அது நல்ல குதிரையாக நடந்துகொள்ளுகிறது என்பதைத் தெரிந்துகொண்டிருப்பீர்கள். சில சமயம் பயமுறுத்தியும் அதை ஓடச் செய்யலாம். ஆனால் பயமுறுத்தும் தந்திரம் இறுதியில் தோற்றுப் போவதைக் காண்பீர்கள். குதிரைகள் அல்லது ஆடுமாடுகளிடம் அனுபவம் உடைய எந்த மனிதனை வேண்டுமாயினும் கேட்டுப் பாருங்கள். அன்பாக நடத்தினால்தான் அவை வேலை செய்கின்றன என்று அவன் சொல்லுவான். மிருகங்களை வளர்ப்பதில் நீங்கள் பலாத்காரத்தை உபயோகிப்பீர்களானால், உங்களுக்குத் தோல்விதான் கிடைக்கும்.

கணவனோ, மனைவியோ, குழந்தைகளோ யாராயினும் சரி, மனிதர்கள் விஷயத்திலும் இதுவேதான் உண்மையாய் இருக்கிறது. உங்களில் இருவர் சண்டையிட்டுக் கொள்ளுவதாக வைத்துக் கொள்ளுவோம்; ஒருவர் மற்றவரிடம் நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொண்டால், அம்மாதிரி நல்ல எண்ணங்களே மற்றவர் மனதிலும் வளரும். இது எவ்வாறு என்று உங்களுக்குத் தெரியாதிருக்கலாம். ஆனால், அன்போ பகைமையோ மின்சார சக்தியைப் போல் வேலை செய்கிறது.

அரசியல் உள்பட வாழ்க்கையின் சகல பிரச்சினைகளிலும் அவசியமாயிருப்பது என்ன? நம் விருப்பப்படி பிற மனிதர்களை நடந்துகொள்ளுமாறு செய்வதுதான். இன்னோர் மனிதனை ஒரு குறிப்பிட்ட வழியில் நடந்துகொள்ளச் செய்யவேண்டுமானால், நாம் அன்பு என்ற சக்தியை உபயோகிப்பதா? அல்லது பகைமை, அச்சம் என்ற சக்திகளை உபயோகிப்பதா? சத்தியாக்கிரகத்திலுள்ள ஒரே கேள்வி இதுதான்.

ஒரு பட்டுத்துண்டில் கண்ணாடிக் குச்சியொன்றால் தேய்த்த பொழுது சிறிய இலேசான கடிதத் துண்டுகள் அக்கண்ணாடியோடு வருவதை, முன்னொரு காலத்தில் ஒரு மனிதன் கண்டுபிடித்தான். இந்தச் சக்தி முதன் முதலில் கண்டு பிடிக்கப்பட்ட பொழுது, காகிதம் அல்லது நெட்டித் துண்டுகளை இழுப்பதற்குமேல் ஒன்றும் செய்யவில்லை. ஆனால், பின்னால், இது இவ்வகிலமெங்கும் பரந்துள்ள ஓர் மகத்தான சக்தியென்றும், இதைக்கொண்டு மலையைத் தகர்க்கலாம், பெரிய வண்டித் தொடர்களை ஓட்டலாம், நகரங்களுக்கெல்லாம் விளக்குகள் போடலாம் என்று கண்டுபிடித்துவிட்டார்கள்.

இதைப் போலவே, அன்பு-சக்தியையும் பெரிய காரியங்களைச் சாதிக்க உபயோகிக்கலாம். தம்பதிகளுக்குள் நிகழும் சச்சரவுகள் ராஜியாகவோ, ஒரு மகன் அல்லது குழந்தை குறிப்பிட்ட நெறியில் நடந்துகொள்ளும்படி வற்புறுத்தவோ, அன்பு-சக்தி திறமையாக வேலை செய்கிறது. இந்தச் சக்தியை அரசியல் விவகாரத்திலும் ஏன் பூட்டலாகாது? அவ்வாறு பூட்டுவதுதான் சத்தியாக்கிரகத்தின் முயற்சி. ஆரம்பத்தில், இது பலவீனமானதாக விருக்கலாம். ஆனால், மின்சார சக்தியைப் போலவே இதுவும் மகாவலிமை யுடையதுதான்; அதைப்போலவே பெரும் பலன்கள் தரக் கூடியதுதான்.



காஞ்சீபுரம் நாயினாப் பிள்ளை

(ஈ. கிருஷ்ணய்யர் எழுதியது)

சென்ற திங்கட்கிழமை காலை சென்னை பச்சையப்பன் கல்லூரியில் நடந்த பொதுக் கூட்டம் தென்னிந்திய ஸங்கீத சரித்திரத்தில் முக்கியமானதோர் ஸந்தர்ப்பமாகும். அதற்கான முயற்சி யெடுத்து சரிவர நடத்தி வைத்த சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை, சங்கரன், ராஜாராஜன் முதலியோருடைய ஏற்பாடுகள் மிகவும் போற்றத்தக்கன. இதுவரை எத்தனையோ, பெயர் பெற்ற வித்வான்கள் இறந்திருப்பினும் அவர்கள் மரணத்தைக்குறித்து அனுதாபக் கூட்டங்கள் அம்மாதிரி பொதுவில் நடைபெற்றிருப்பதாகக் காணவில்லை. காஞ்சீபுரம் வி. சுப்ரமணியபிள்ளை அவர்களுக்கே அம்மஹிமை முதல்முதல் ஏற்பட்டது. அதிலிருந்து இரண்டு விஷயங்கள் தென்படுகின்றன. தற்காலம் ஸங்கீதத்தில் கிளம்பி யிருக்கும் புத்துயிரும், பொது ஜனங்களிடைப் பரவிவரும் ஊக்கத்தின் அளவும் வெளியாகின்றன. இதுகாறும் அது சிறு பான்மையோரின் உடைமை போலிருந்தது போக, பொது ஜனங்களுக்கு இன்றியமையாததாகவும், பொதுஜன வாழ்வில் முக்கியமானதோர் அம்சமாகவும் விளங்க ஆரம்பித்துவிட்டது. ஸங்கீத வித்வான்களுக்கும் பொதுவாழ்வில் கௌரவஸ்தானம் கொடுக்கப்படுகிறது. அதன்மூலம் அக்கலையின் பெருமையும் ஓங்குகின்றது. இப்பெருமையை உண்டாக்குவதற்கு, சென்னை ஸங்கீத வித்வத் ஸபை, ஸர்வ கலாசாலை, ராஜா அண்ணாமலைக் கல்லூரி இவைகள் செய்துவந்திருக்கும் வேலையின் பயன் இப்போது தெரியவருகிறது.

இரண்டாவதாக வித்வான்களில் காலஞ்சென்ற சுப்ரமணியபிள்ளை அவர்களுக்கு ஸங்கீத உலகிலிருந்த மதிப்புக்கு அக்கூட்டம் அறிகுறியாகத் தோன்றியது ஸ்ரீமான் டைகர் வரதாசார் ஆதியாகப் பல வித்வான்களும் ஸங்கீத வித்வத் ஸபையின் பிரபல மெம்பர்களும், பெருவாரியான ஸங்கீத அபிமானிகளும் நிறைந்ததாக விருந்தது அக் கூட்டம். பல வித்வான்களும் பிரமுகர்களும் அவரது குணதிசயங்களைப் பற்றியும் கலைத் திறமையைப் பற்றியும் பலவாறு புகழ்ந்து பேசினர். வித்வான் டைகர் வரதாச்சாரியார் பேசியபோது சில அம்சங்களில் நாயனாப் பிள்ளைக்குச் சமானம் நாயனாப் பிள்ளையே என்று வருணித்து, கண்ணீர் ததும்ப மனமுருகினார். இவ்வளவு பெருமைக்கும் இருப்பிடமாயிருந்த சுப்பிரமணிய பிள்ளையைத் தென்னாட்டில் அறியாதாரில்லை.

ஸ்ரீமான் சுப்பிரமணிய பிள்ளை காஞ்சீபுரம் தனகோடி சகோதரியின் புத்திரர். சங்கீத வாசனை நிரம்பிய குடும்பத்திலுதித்தவர். நாயனா என்ற செல்லப் பெயர் கொண்டவர். சங்கீதக் குடும்பத்திலுதித்தும் சுமார் 18 வயது வரை அக்கலையில் சிரத்தையில்லாது, குஸ்தி போடுவது, பாம்பு பிடிப்பது முதலிய விளையாட்டிலேயே அதிகம் ஈடுபட்டிருந்தார். ஆனால் சங்கீதக் கலையின் இயற்கை வெகு விசித்திரமானது. பக்கத்திலுள்ளோர் மனதில் எப்படியாவது அது ஊன்றிவிடும். சிலரிடம் எளிதில் பிரதிபலித்துவிடும். மற்றவரிடம் மண்ணில் விழும் மழைத் துளிபோல் உள்ளூறப் பாய்ந்து வேண்டும்போது தோண்டினால், தண்ணீரோடையாக வெளியாகும் இயல்புடையது. எட்டியாபுரம் ராமச்சந்திர பாகவதர் காஞ்சீபுரத்திலிருந்த நாட்களில், சிறு பிள்ளையா யிருந்த நாயினாவிடம் அதிக வாத்ஸல்யம் கொண்டு, பையனைத் தாம் பஜனைகளில் பாடும்போதும், பிறருக்குச் சிக்ஷை கற்றுக் கொடுக்கும் போதும் கூடவே வைத்துக் கொண்டிருப்பது வழக்கம். அச்சந்தர்ப்பங்களில் உயரிய சங்கீதம் அவர் மனதில் ஊறியதென்றே சொல்ல வேண்டும். ஆனால் அக்கலையை சிரத்தையுடன் பயில ஆரம்பித்தது காஞ்சீபுரம் வந்திருந்த ஓர் சந்நியாசியின் அருளென்றே சொல்லப்படுகிறது. அப்பெரியார் மூலமே இவருக்குப் பின்னால் முக்கிய பலமான உயர்ந்த லயக்யானம் ஏற்பட்டதென்றும் கூறப்படுகிறது. இது தவிர, தாமாகவே, திருப்புகழ்க் களஞ்சியத்தில் புகுந்து ஆராய்ச்சி செய்து, தாள சம்பந்தமான அநேக மர்மங்களையும் விசேஷங்களையும் வெளிக் கொணர்ந்தார். வித்தையில் தேர்ச்சி பெற்றுத் தொழில் செய்யுங்கால், நாகஸ்வரத்துக்குத் தவுல் வாத்யம் வாசித்து அதைவிட்டுக் கொன்னக்கோல் வித்தையைக் கைக்கொண்ட மன்னார்குடிப் பக்கிரியா பிள்ளையின் நெருங்கிய பழக்கமும்

ஏற்பட்டது. எனவே, மொத்தத்தில் ஸங்கீதத்தில் ஓர் முக்கிய அம்சமான தாளத்திலேயே அதிக கவனம் செலுத்தி அதில் அதிகப் பிடிப்புள்ளதோர் பிரத்யேகமான ஸங்கீத வழியையும் கற்பித்தார். எத்தொழிலினும் பிறரிடமிருந்து கற்றதையே கிளிப்பிள்ளை போல் ஒப்பிப்பதை விடச் சொந்த ஆராய்ச்சியினாலும் உழைப்பினாலும் புதிய வழிகளை உற்பத்தி செய்வதின் ஸாமர்த்தியத்துக்குப் பிராபல்யம் கொடுக்க வேண்டுவதும் அவசியமே.

காலஞ் சென்ற பிள்ளையவர்கள் ஸங்கீத வளர்ச்சிக்கு ஓர் அரிய உபகாரம் செய்திருக்கிறார். தியாகராஜ சிஷ்ய பரம்பரையிலுதித்த, வாலாஜாப்பேட்டை வித்வான்களிடமிருந்து அதுவரையில் பழக்கத்துக்கு வராதஅநேகம் கீர்த்தனைகளைக் கற்று அவைகளைச் சுவை நிரம்பும்படி ஒழுங்குபடுத்திப் பாடி வழக்கத்துக்குக் கொண்டு வந்தார். அக்கீர்த்தனைகளே பிள்ளையவர்களின் ஞாபகார்த்தமாக என்றும் நிலைத்து நிற்கும். இத்துடன் பிள்ளையவர்கள் பெரிய ஸ்வரக்யானி. விஸ்தாரமாயும் விருவிருப்பாயும் ஸ்வரம் பாடுவதிலேயே அதிகக் கவனம் செலுத்தி வந்தார். ராமச்சந்திர பாகவதரின் பழக்கத்தின் பயனாக அபூர்வ ராகங்களில் 'ஸ்வரப்ரஸ்தாரம் செய்யும் முறைகளைத் தான் அறிந்து கொண்டதாக அவரே சொல்லி யிருக்கிறார். எல்லாவற்றையும்விடப் பல்லவி பாடுவதில் பிள்ளையவர்களே தேர்ந்தவர் என்ற பெயரும் கொண்டார். அவர் பல்லவிகளைப் பற்றிய அபிப்ராய பேதங்கள் எவ்வாறாயினும் அவர் செய்து வந்த வேலை அபூர்வமானதே. ஸங்கீதத்தில் சுவைமாறி வரும் இக்காலத்தில் சாதாரணமாய்க் கச்சேரிகளில் மூன்று மணி நேரம் கீர்த்தனைகள் பாடுவதும் பல்லவியை 8 அல்லது 10 நிமிஷத்தில் விரட்டி முடிப்பதுமாயிருக்கிறது. ராகபாவமில்லாது விரஸமாய்ப் பாடக்கூடாது, உயரிய மனோதர்ம மில்லாது ருசியற்ற வழிகளைப்பற்றி நேரம் போக்கக்கூடாது என்ற எண்ணத்துடன் ஆரம்பித்த சீர்திருத்தத்தை, பல்லவியில் அதிகம் தேர்ச்சியில்லாத சாதாரணப் பாடகர்களும், அதன் அருமையை அறியாதோரும் 'மத்யம காலத்தில் பாடினால் போதுமே, பல்லவி யில்லாமலே கச்சேரி நடக்கட்டுமே' என்று சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். இவர்களால் வரும் கெடுதியை நினைக்கும்போது, இப்பெரிய மனோ தர்ம ஸங்கீத பாகத்தை அவ்வாறு நழுவவிடாது அதன் முக்கியத்தை நிலை நாட்டுமாறு பிள்ளையவர்கள் கவனித்து வந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. இன்னும் தெலுங்கைப்போல் தமிழுக்கும் முக்கியஸ்தானம் கொடுக்கும் பொருட்டு அதிலுள்ள திருப்புகழ்ப் பாட்டுகளை ஏராளமாய்க் கையாண்டு வந்தார்.

ஸங்கீதத் தொழில் திறமை இவ்வாறிருக்க அவர் இயற்கைக் குணங்களும் அத்தொழிலுக்கே ஓர் கௌரவம் கொடுக்குமாறு இருந்தன. தன் ஆராய்ச்சியுடன் தனது கொள்கைகளில் தீவிர நம்பிக்கையும் தைரியமும் உடையவர். தான் நினைத்ததைச் சாதிக்கும் நெஞ்சழுத்தமுடையவர். தன் சிஷ்யர்களிடம் உண்மை யன்பு கொண்டு தனக்குத் தெரிந்தவற்றை அவர்களுக்கும் மனதாரக் கற்றுக் கொடுத்துத் தனது சிஷ்யர்களுக்கு வரும் புகழ் தனக்கும் பெருமையேயென்று ஸந்தோஷப்படுவார். இக்குணம் சாதாரணமாய்ப் பிரபல ஸங்கீத வித்வான்களிடம் காண்பதரிது. அவருக்கு அநேகம் சிஷ்யர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பாடும்போது அவர் வழியையே படம் பிடித்ததுபோல் இருக்கும். அவர்களில் முக்கியமானவர் சித்தூர் சுப்பிரமணியப் பிள்ளை. காலஞ் சென்ற நாயனாப் பிள்ளையவர்கள், தன் தொழிலின் கௌரவத்தில் கண்ணுடையவர். யாரிடத்திலும் மரியாதையுடன் பேசுவார். அபிப்ராய பேத முடையோரிடமும் அனாவசியமான கோபம் கொள்ளாது தனது கொள்கையை விளக்கிக் காட்டுவார். அவர் கலையின் குணாகுணங்களைப் பற்றி அபிப்ராய பேதங்கள் வர இடமுண்டு. அவைகளைத் துல்யமாய்ச் சர்ச்சை செய்யும் சமயம் இதுவல்ல. அப்படிச் செய்வதினால் அவரிடத்துண்டான மதிப்பு யாருக்கும் குறைந்து விடாது என்ற ஞாபகம் மாத்திரம் வேண்டும். தியாகராஜஸ்வாமி பேரில் அளவற்ற பக்தியுடையவர். வருடந்தோறும் அவர் உற்சவத்தைக் கோலாஹலமாய் காஞ்சியில் நடத்திவந்தார். அவர் இறக்கும்போது வயது 46 தான். கடவுள் தன்னிடம் பேரன்புள்ளோரைப் பரிவுடன் சீக்கிரம் தன்னருகிற் சேர்த்துக் கொள்வார் என்ற மொழிக்கேற்பப் பிள்ளையவர்கள் நடுத்தர வயதிலேயே உயிர் நீத்தார். அது பற்றிச் சங்கீத உலகம் அளவற்ற துயரில் ஆழ்ந்தது. சமீபத்தில் சில நாட்களாக யமதர்மராஜன் தன் வேலையைச் சற்றுத் தீவிரமாய்ச் செய்து வருவது போல் காண்கிறது. நாடெல்லாம் போற்றும் ஓர் பெரிய வைத்தியர், உன்னத ஸ்திதியிலிருந்ததோர் மாஜி ஜட்ஜு, ஹைக்கோர்ட்டிலும் ராஜ்ய நிர்வாகத்திலும் பதவிக்கு மேல் பதவி வகித்து விளங்கிய இன்னுமோர் பிரமுகர், சிறந்த பணமும் குணமும் கொண்டிருந்த பெரியதோர் வியாபாரி இவர்களைச் சமீபத்திற் கொண்டு போன தர்மராஜன் சங்கீத உலகிலும் ஒரு பெரியாரை இறையாக்க வேண்டுமென்று நினைத்தான் போலும்!

வியாதியை என்னவென்று தெரிந்துகொண்டால், பாதி சொஸ்தம் ஆனாற் போலத்தான்.

* * *

மோசடியான சமாதானம் பகிரங்கமான யுத்தத்தைவிட அதிக ஆபத்தானது.

* * *

மடமடவென்று வார்த்தையைச் சொரிந்துவிட்டால், அது புத்திசாலித்தனத்திற்கு நிரூபணமாகி விடாது.

* * *

சங்கீத மில்லாமலே நாட்டிய மாடுபவனுமுண்டு ; அவன்தான் மூடன்.

வாங்கத் தவறாதீர்கள் !

வாசிக்க வேண்டிய புத்தகங்கள் !!

ஸ்ரீமான் ஆக்கூர் அனந்தாச்சாரியார் எழுதிய

சங்கீத வித்வான் கிட்டப்பா சரிதம்

விலை அணா 2.

டால்ஸ்டாய் அல்லது மகாத்மா காந்தியின் குரு

விலை அணா 3.

தபால் கூலி வேறு.

வியாபாரிகளுக்கு ஏராளமான கமிஷன் கொடுக்கப்படும்.

கந்தன் பிரஸ்,

32, பிராட்வே, சென்னை.

"காலை விடு"

"உடம்பு வேண்டாம்; கையை விட்டால் போதும்" என்று பழமொழி சொல்லுவார்கள். பிலிப்பைன் தீவுகள் விஷயத்தில் அமெரிக்க ஐக்கிய சமஸ்தானத்தின் கதி இப்படி நேர்ந்து விட்டது. பிலிப்பைன் தீவுகள் அமெரிக்க ஐக்கிய சமஸ்தானத்துக் குட்பட்டிருந்தன. அந்தத் தீவுகள் சுதந்திரம் பெறப் பலத்த போராட்டம் செய்த காலமுண்டு. அமெரிக்கா விடாப்பிடியாக அவற்றைப் பிடித்துக்கொண்டிருந்தது. சில மாதங்களுக்கு முன் திடீரென்று ஒரு மசோதாத் தயாராயிற்று. அது பிலிப்பைன் தீவுகளுக்குச் சுதந்திரம் வழங்கும் மசோதா. சுதந்திரம் உண்மையான சுதந்திரம்தான். 'சுதந்திரம்' என்ற முத்திரையைப் பட்டதும் படாததுமாய் வைத்து, எதையாவது நீட்டினால்கூடத் தயாராய்க் கையேந்தக்கூடும் நமது மிதவாதிகள். சுதந்திரம் மாத்திரமல்ல, சுதந்திரத்தின் சாரமும் வேண்டும் பிலிப்பைன் தேசபக்தர்களுக்கு. அமெரிக்கா பிலிப்பைனுக்கு என் சுதந்திரம் அளிக்கத் தீர்மானித்தது? பிலிப்பைன் தன் 'காலை' விட்டால். போதும் என்ற நிலைமை அமெரிக்காவுக்கு ஏற்பட்டதால்தான். அதாவது பிலிப்பைன் சாமான்கள் சில அமெரிக்காவில் கப்பல் கப்பலாய் வந்து குவிய ஆரம்பித்துவிட்டன. "பிலிப்பைன்காரர்கள் சுதந்திரமானவர்கள், அமெரிக்கப் பிரஜைகள் அல்ல" என்று செய்துவிட வேண்டும் என்று தோன்றிற்று அமெரிக்கருக்கு. அப்படிச் செய்தால் அவர்கள் சாமானை வரவிடாது தடுத்துவிடலாம் என்பது அமெரிக்கர் உத்தேசம். சுதந்திர மசோதாவும் தயாரித்தார்கள். ஆனால், அதில் சில 'இக்கு' வைத்திருந்தார்கள். அமெரிக்காவின் சேனை நிரந்தரமாய் எப்போதும் பிலிப்பைனில் இருந்து வர வேண்டும் என்றும், வேறு சில நிபந்தனைகளும் கூறினார்கள். இந்தச் சுதந்திர மசோதாவைப் பிலிப்பைன் தேசபக்தர் ஏற்கவில்லை. பத்து வருஷம் மாத்திரமே இந்த நிர்ப்பந்தங்களிருக்கும் என்று இப்பொழுது திருத்தம் செய்தது அமெரிக்கா. திருத்தப்பட்ட மசோதாவை பிலிப்பைன் சட்ட சபை ஒப்புக்கொண்டுவிட்டது. பத்து வருஷத்தில் பிலிப்பைன் பூரண சுயேச்சை பெற்றுவிடும். எந்த நாடாகத்தானிருக்கட்டுமே, எத்தனை காலந்தான் இன்னொரு நாட்டைத் தனக்கு அடிமையாக வைத்திருக்க முடியும்?

கப்பலேறிய ஷூஸ்டர்

ஷூஸ்டர் கப்பலேறிவிட்டார். இவர் இந்திய அரசாங்கத்தின் பொக்கிஷ மந்திரியாய் ஐந்து வருஷம் ஆதிக்கம் புரிந்துவிட்டு, தாய் நாட்டுக்குச் செல்லுகிறார். வரப்போகிற சுயராஜ்யச் சர்க்காருக்குப் பொருளாதாரக் கட்டிடத்தைப் பலப்படுத்தி வைத்துவிட்டதாகத்தான் சமயம் வந்தபோதெல்லாம் இவர் பெருமை யடித்துக் கொண்டார்.

சுயராஜ்ய சர்க்கார் வரப்போகிறது நிஜந்தானா? இவர் லண்டன் போய்ச் சேர்ந்ததும் சுயராஜ்யப் பார்ஸலைக் கட்டாயம் இந்தியாவுக்கு அனுப்பத்தான் போகிறாரா? இதெல்லாம் வெறும் அமத்தல் பேச்சு. அது போகட்டும். தேசீய சர்க்காருக்கு ஏதோ பலத்த பொருளாதார அஸ்திவாரம் போட்டுவிட்டதாகச் சொல்லுகிறாரே, அதுதான் ஏதாவது கண்ணுக்குப் புலப்படுகிறதா? அதுவும் ஒன்றும் நமக்குத் தெரியவில்லை.

ஆனால், நமக்கெல்லாம் தெரிவது ஒரு சில சங்கதிகள் தான். இந்த ஷூஸ்டர் காலத்தில்தான் இந்தியாவின் தங்கம் பரதேசம் போக ஆரம்பித்தது. இவர் காலத்தில்தான் இந்தியாவின் வெள்ளி ரூபாய், தங்க மதிப்பைக் கைவிட்ட பிரிட்டிஷ் காகித நாணயத்தோடு முடி போட்டுக்கொண்டது. இவர் காலத்தின் கடைசி வரவுசெலவுத் திட்டம், இந்தியாவின் சர்க்கரைத் தொழிலையும், தீக்குச்சித் தொழிலையும் நிலை கலங்கச் செய்தது.

இந்த ஷூஸ்டர் போகிறார். இவர் மாதிரியே இன்னொருவர் இவர் ஸ்தானத்துக்கு வரப் போகிறார். இவர்தான் என்ன செய்வார், அவர்தான் என்ன செய்வார்? இவர்களுக்கெல்லாம் எந்திரஸ்தாபனம் லண்டனில் அல்லவா இருக்கிறது? அது இந்தியாவுக்கு, இந்தியர் கைக்கு, வர வேண்டும். அது வரையில் இந்த மாதிரிதான் தேசத்தின் பொருளாதார ஆட்சி நடைபெறும். ஷூஸ்டர் என்ற மனிதருக்கு மரியாதையாக விடைகொடுத்தனுப்ப நமக்கு ஆட்சேபமில்லை. ஆனால், பொக்கிஷ மந்திரி உத்தியோகம் பார்த்த ஷூஸ்டருக்கு எந்தமாதிரி விடை கொடுப்பது? அதுதான் தெரியவில்லை

அது மேலாயிருக்குமே

வாஸ்தவம். பத்திரிகைகளுக்கு இப்பொழுது ரொம்பக் கஷ்ட காலந்தான். சமாசாரமும் அகப்பட மாட்டேன் என்கிறது. அதற்காக என்ன செய்வது? தேசபக்தி வேண்டாமய்யா; ஜனங்களுடைய அறிவு விசாலத்துக்கான ஆராய்ச்சிகளும் வேண்டாம். கொஞ்சம் ருசியான விஷயங்களையாவது தேடிக் கொடுக்கலாகாதோ? கால் தலை வைத்து ஏதாவது ஒரு கதை, நீலம் பிடிபடுவதற்காகக் கிளம்பிய சின்னச் சங்கதியை ஜோடித்துப் பெரிது படுத்துவது இந்தமாதிரி வேலையாவது செய்கிறதுதானே. சமீபத்தில் சில ஆங்கில தேசீயப் பத்திரிகைகளில் தொடர்ச்சியாகப் பக்கம் பக்கமாய்ச் சில வியாசங்கள் வந்தன. அவை இந்திய அரசாங்க ராணுவச் செலவு நியாயமே என்பதை ஸ்தாபித்து உத்தியோக ரீதியில் யாரோ எழுதியவையாம். இந்தக் கட்டுரைகளை இங்கே படிப்பவர் கிடையாது. லண்டன் பத்திரிகை நிருபர் ஒருவர் இவற்றைப் பற்றிப் பரிகாசம் செய்திருக்கிறார். "இந்தமாதிரி சாரமற்ற வியாசங்களை பிரிட்டனிலுள்ள எந்தப் பத்திரிகையும் வெளியிடாது" என்று அவர் சொல்லுகிறார். அதோடு அவர் இந்த வியாசங்களைப் போட்டுத்தான் தீர வேண்டும் என்று சர்க்கார் ஏதோ நிர்ப்பந்தம் செய்ததாக வேறு குறிப்பிடுகிறார். அது நிஜந்தானா? அப்படியானால் நியாயமாகுமா? நிற்க, இந்த மாதிரி வியாசங்களைத் தேசீயப் பத்திரிகைகள் வெளியிடுவதை விடப் பத்திரிகையை 'பிளாங்கி'யாய் விடுவதே மேலாயிருக்கும், தேசத்துக்கும் நலமாகும் என்றுதான் நமக்குத் தோன்றுகிறது.

ஏன் ராமநாமம்?

(மீராபேன்)



ஹஸரி பாக்கிலிருந்து புறப்பட்டோம். குன்றுகள் நிறைந்த காட்டின் வழியே பல மைல் தூரம் மோட்டாரில் சென்ற பின்னர், சாலையோரத்தில் சிறியதொரு கூட்டம் நின்ற ஒரு இடத்திற்கு வந்து சேர்ந்தோம். அவர்கள் எங்களை வாழ்த்தி வரவேற்றார்கள். மகர தோரணங்கள் கட்டப்பட்டிருந்த ஒரு பாதை வழியே எங்களை அவர்கள் அழைத்துச் சென்றார்கள். குமியா என்ற இடத்திற்கருகே ஸாந்தல் என்ற ஜாதியாரின் கூட்டம் அது. கிராமாந்தரமான ஒரு மேடை அமைக்கப்பட்டிருந்தது. அதன் ஒரு பக்கத்தில் கருங்கல்லாற் செய்த உள்ளாழி போட்ட சிறிய ராட்டினங்களில் பெண்களும், மறு பக்கத்தில் நீண்ட தக்ளிகளில் புருஷர்களும் நூல் நூற்றுக் கொண்டு நின்றார்கள்.

கதரைப் பற்றியும், மது விலக்கையும் பற்றியும் காந்திஜீ அந்த ஸாந்தல் ஜாதியாருக்கு எடுத்துச் சொல்லிவிட்டு, கடவுள் திருநாமத்தின் அழகையும் சக்தியையும் அவர்களுக்கு எடுத்துரைக்கலானார். காந்திஜீ சொன்னதாவது:

“ராம நாமத்தைப் பூரண பக்தி விசுவாசத்துடன் நீக்கள் பஜிக்கக் கற்றுக் கொள்ளவேண்டும். துளசிதாஸ் ராமாயணத்தை நீங்கள் படித்தீர்களானால், ராமநாமத்திற்கு எவ்வளவு தெய்வீக சக்தி இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளுவீர்கள்.

“கடவுளுக்கு வேறு எத்தனையோ பெயர்களிருக்க ஏன் ராமநாமத்தை ஜபிக்கச் சொல்லுகிறேன் என்று நீங்கள் வினவலாம். வாஸ்தவந்தான், ஒரு மரத்தில் எத்தனை இலைகள் இருக்கின்றனவோ அதைவிட அதிகமான பெயர்கள் இறைவனுக்கு இருக்கின்றன. God (கடவுள்) என்றஇங்கிலீஷ் வார்த்தையை ஜபியுங்கள் என்று நான் சொன்னாலென்ன? அந்த இங்கிலீஷ் பெயர் இந்த நாட்டிலுள்ள உங்களுக்கு என்ன ஞாபகங்களை உண்டாக்கும்? அந்த இங்கிலீஷ் வார்த்தையை உச்சரிக்கும்போது உங்கள் மனத்தில் நல்ல எண்ணங்களை ஞாபகமூட்ட வேண்டுமானால், உங்களுக்கு நான் இங்கிலீஷ் பாஷையையே கற்றுக் கொடுத்தாகவேண்டும்; அயல்நாட்டு ஜனங்களின் மனத்திலெழுந்த எண்ணங்களையும் பழக்க வழக்கங்களையும் உங்களுக்கு விளக்கிச் சொல்லியாக வேண்டும்.

“ராமநாமமோ எத்தனையோ தலைமுறைகளாக இந்த நாட்டு ஜனங்களால் வணங்கப்பட்டு வந்த பெயர்; அந்த நாமம் பல்லாயிரம் ஆண்டுகளாக ஹிந்துஸ்தானத்தின் பறவை விளங்குகளுக்கும் கல் மரம் செடிகளுக்கும் கூடப் பழக்கமாயிருக்கும் பெயர்.

“நீங்கள் ராமநாம பஜனை செய்ய வேண்டும். சாலையிலுள்ள பட்சிகளெல்லாம் தங்கள் பாட்டை நிறுத்திவிட்டு உங்கள் பஜனையைக் கேட்கவேண்டும்; மரங்களெல்லாம் தங்கள் இலைகளுடன் உங்கள் முன் தழைந்துவிட வேண்டும்; அந்த நாமத்திலுள்ள தெய்வீக சக்தியால் அவை உருகிவிட வேண்டும். அவ்வளவு இனிமையாகவும் பக்தியுடனும் அந்த நாமத்தை நீங்கள் பஜிக்க வேண்டும்.

“இப்படி நீங்கள் பாடுகிறீர்கள் என்று தெரிந்தவுடனே, புண்ய க்ஷேத்திர யாத்திரை செய்பவனைப் போலவே, உங்கள் பஜனையைக் கேட்பதற்காக, பம்பாயிலிருந்து வழி நெடுகிலும் கால் நடையாய் நடந்து உங்களிடம் நான் வந்து சேருவேன். இறைவனது அந்த இன்பமான நாமத்தில், நமது சகல நோய்களையும் குணம் செய்யக் கூடிய ஒரு மகா சக்தி யிருக்கிறது.”

—“ஹரிஜன்”

ஓர் கிறிஸ்தவப் பாதிரியின் யுத்தக் கிறுக்கு

கேனன் ஜி. என் ட்ரடெனிக் என்பவர் பிரிட்டிஷ் லீஜ்யன் சர்ச்சில் சமீபத்தில் செய்த மதப் பிரசங்கத்தில் யுத்தங்களின் பெருமைகளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். போர் புரிவது கிறிஸ்தவ மதத்திற்கு விரோதமானதல்லவென்றும், இதுவரையில் நடந்துள்ள பெரும்பாலான யுத்தங்கள் உண்மையில் நியாயமானவைகளே என்றும், நல்ல நாகரிகமும், நல்ல கிறிஸ்தவ தர்மமும் யுத்தங்களால் வளர்ச்சி யடைகின்றன என்றும் சொல்லியுள்ளார். இடையிலே அவர் சில உதாரணங்கள் காட்டுகின்றார்.

“உதாரணமாக அமெரிக்காவில் நடந்த யுத்தம் அமெரிக்கர்களுக்குச் சுதந்திரம் கொடுத்தது. நீயூஜீலந்தில் நடந்த யுத்தம் அந்நாட்டு நரமாம்ஸ பக்ஷணிகளைக் கிறிஸ்துவ மார்க்கத்தவர்களாக மாற்றி நன்மை செய்தது. இந்தியாவை நாம் வெற்றி கொண்டதால் ஜாதிச் சண்டைகள், பஞ்சம், வறுமை முதலிய கொடுமைகளி லிருந்து அத்தேசத்தைக் காப்பாற்றி யுள்ளோம்.”

நமது பிரசங்கியார் அமெரிக்காவையும், நியூஜீலந்தை பற்றிச் சொல்லுவது உண்மையா யிருக்கலாம். ஆனால் கடைசி வாக்யம் கலப்பட மில்லாத பச்சைப் பொய் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

சென்ற நூறு வருஷங்களுக்கு முன்புகூட இந்நாடு பொன் விளையும் புகழ்மிக்க நாடாகவே விளங்கியது. ஐரோப்பிய நாடுகள் ஒவ்வொன்றின் கடூரமான கண்ணோட்டமும் இச்செல்வங்களின் மீது விழுந்தது. அப்போது உள் நாட்டுச் சண்டைகள் சிற்சில இருந்திருக்கலாம். எனினும் அவற்றால் நம் நாட்டுச் செல்வம் நம் நாட்டை விட்டு வெளியே போகும்படியான சந்தர்ப்பம் நேரவில்லை. ஆனால் ஆங்கிலர் இந்தியாவை வெற்றி கொண்டதன் பிறகுதான் இந்தியனின் சராசரி தின வருமானம் 0—1—7 ஆகக் குறைந்துவிட்டதென்பதை நம் பாதிரி அறிவாரா?

கதரையே கட்டுங்கள்

சத்திய சோதனை

முதல் பாகம் ரூ. 1-8.
இரண்டாம் பாகம் ரூ. 2.

மகாத்மா காந்தி

தம் சுயசரிதத்தை இதில் சொல்லியிருக்கிறார்.

சுதந்திரச் சங்கு காரியாலயம், 8-c, பைகிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

"Swathanthara Sangu"

A high class popular Tamil weekly.

Price one anna a copy.

Annual subscription :

Inland Rs. 4. **Foreign Rs. 6.**

ADVERTISEMENT TARIFF

	Per Insertion.		
Advertisement rates per Page	Rs. 40	0	0
" Half Page	Rs. 20	0	0
" Quarter Page	Rs. 10	0	0
" per column inch	Rs. 1	8	0

One page is divided into 3 columns of $2\frac{1}{4}'' \times 9''$

Cover Pages

2nd & 3rd cover page Rs. 50.
4th cover page Rs. 75.

For contracts of 3 months, 6 months and One year a discount of 5, 10 & 15% respectively will be given over these rates.

Office : 8-c, Pycrofts Road,
TRIPLICANE, MADRAS.

"சுதந்திரச் சங்கு"

ஒரு உயர்தரத் தமிழ் வாரப் பத்திரிகை.

தனிப் பிரதி விலை அணா 1.

வருடச் சந்தா :

உள்நாடு ரூ. 4. வெளிநாடு ரூ. 6.

விளம்பர விகிதங்கள்

ஒரு பக்கத்திற்கு தடவை ஒன்றுக்கு	ரூ. 40	0	0
அரைப் பக்கத்திற்கு " "	ரூ. 20	0	0
கால் பக்கத்திற்கு " "	ரூ. 10	0	0
ஒரு பத்தி ஒரு அங்குலத்துக்கு " "	ரூ. 1	8	0

ஒரு பக்கம் $2\frac{1}{4}'' \times 9''$ அளவுக்கு 3-பத்திகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அட்டைப் பக்கங்கள்

2-வது, 3-வது பக்கங்களுக்கு ஒரு தடவைக்கு ரூ. 50.
4-வது பக்கத்துக்கு ஒரு தடவைக்கு ரூ. 75.

3-மாதம், 6-மாதம், ஒரு வருஷம் ஒப்பந்தங்களுக்கு, இந்த விகிதங்களிலிருந்து முறையே நூற்றுக்கு 5, 10, 15 வீதம் 'டிஸ்கவுண்ட்' தள்ளிக் கொடுக்கப்படும்.

மானேஜர்,
"சுதந்திரச் சங்கு",
8-c, பைக்ராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை.

"Swathanthara Sangu Press"

Invites enquiries of all classes of
General & Commercial Printing.

Printers of

"Harijan"

Conducted by Mahatma Gandhi

and

Published under the auspices of
The Servants of Untouchables' Society

Subscription for "Harijan"

Inland Rs. 4 Foreign Rs. 5-8.

8-c, PYCROFTS ROAD, TRIPLICANE, MADRAS.

Edited, Printed and Published by S. Subramanian at the Swathanthara Sangu Press, Triplicane, Madras.